தஞ்சாவூர் சரசுவதி மகால் வெளியீட்டு எண். 287

# சித்த வைத்திய முறைகள்

தஞ்சாவூர் மகாராஜா சரபோஜியின்

**சரசுவதி மகால் நூலகம்,**

தஞ்சாவூர்

தஞ்சாவூர் சரசுவதி மகால் வெளியீட்டு எண். 287

# சித்த வைத்திய முறைகள்

சிறப்புக்கேண்மைப் பதிப்பாசிரியர் :

டாக்டர். **மு. நந்தகுமார்,** R. I. M. P.,
தஞ்சாவூர்.

தஞ்சாவூர் மகாராஜா சரபோஜியின்

**சரசுவதி மகால் நூலகம்,**

தஞ்சாவூர்.

2006 விலை : ரூ. 50-00

# நூற்பதிப்பு விளக்கக் குறிப்பு


| | |
|---|---|
| நூற்பெயர் | : சித்த வைத்திய முறைகள் |
| பதிப்பாசிரியர் | : டாக்டர். மு. நந்தகுமார், R. I. M. P., |
| வெளியிடுபவர் | : இயக்குநர்,<br>சரசுவதி மகால் நூலகம், தஞ்சாவூர். |
| வெளியீட்டு எண். | : 287 |
| மொழி | : தமிழ் |
| பதிப்பு | : நான்காம் பதிப்பு |
| வெளியீட்டு நாள் | : ஜூலை, 2006 |
| தாள் | : TNPL 17.8 கி. கி |
| நூல் அளவு | : 24 x 14 செ. மீ. |
| பக்கங்கள் | : 176 |
| படிகள் | : 1000 |
| எழுத்து | : 12 புள்ளி |
| அச்சிட்டோர் | : ஒளி அச்சுக்கோப்பு மற்றும்<br>ஒளி அச்சு,<br>சரசுவதி மகால் நூலகம். |
| புத்தகக்கட்டு | : மெலிந்த அட்டை |
| பொருள் | : வைத்தியம் |
| விலை | : ரூ. 50-00 |

# வெளியீட்டாளர் முகவுரை

சமுதாய மக்களின் நலனில் அக்கறைகொண்டவர்கள் சித்தர்கள். இவர்கள் மக்கள் ஈட்டிய பொருளை தவறான வழியில் செலவிடுதல், பரத்தமை, சாதிப் பாகுபாடு போன்ற சமூகக் கேடுகளைச் சாடுபவர்கள். பரஞ்சோதி முனிவரும், சைவ எல்லப்ப நாவலரும், பாம்பாட்டிச் சித்தரும், தாயுமானவரும் சித்தர்களின் அற்புதங்களைப் பாடுவர்.

நோய்களின்றும் மக்களைக் காக்க இயற்கைப் பொருட்களைக் கொண்டு எளிமையாக மருந்துகளைத் தயாரித்து மக்களுக்கு அளித்துவந்தனர். இவர்தம் மருத்துவம், **சித்த மருத்துவம்** என அழைக்கப்படுகிறது. காமம், பசி, பக்திக்குறைவு, கவலை போன்றவற்றால் நோய்கள் ஏற்படுகின்றன என நோய்களின் மூலகாரணங்களை விளக்கி அவற்றை விலக்கி வாழ்வை அமைத்துக்கொள்ளுமாறு இவர்கள் அறிவுறுத்துகின்றார்கள்.

மன்னர் சரபோஜி அவர்கள் தம் அரண்மனை மருத்துவச் சாலையில் தேர்ந்த மருத்துவத்துறை வல்லுநர்களைக் கொண்டு ஆராய்ந்தும், மரபுவழி அனுபவமாக அறிந்தும் பெற்ற மருத்துவ' முறைகள், மருந்து செய்யும் முறைகளைத் தமிழ்ப் புலவர்களைக் கொண்டு செய்யுட்களாக ஓலைச்சுவடியில் எழுதிவைத்துள்ளார்கள். அம்மருத்துவ முறைகளடங்கிய ஓலைச்சுவடிகள் சரசுவதி மகால் நூலகத்தில் பாதுகாக்கப்பெற்றும், நூல்களாக வெளியிடப்பெற்றும் உள்ளன. அவ்வரிசையில் 1989ஆம் ஆண்டு **சித்தவைத்திய முறைகள்** என்னும் இந்நூல் முதற்பதிப்பாகவும், 1993ஆம் ஆண்டு இரண்டாம் பதிப்பாகவும், 2001ஆம் ஆண்டு மூன்றாம் பதிப்பாகவும், தற்பொழுது நான்காம் பதிப்பாகவும் வெளியிடப்படுகிறது.

இந்நூலில் பூமியில் விளையும் தாவர மூலிகைக்குள்ள குணம், சக்தி, தன்மை, மகிமை ஆகியவற்றைப் பற்றிய செய்திகள் அனைத்தும் தெளிவாக எழுதப்பட்டுள்ளன. சித்தர்கள் மக்களின் பிணிகளைப் போக்குவதற்காக பலவழிகளைப் பின்பற்றி மருத்துவ முறையினாலும், மாந்திரீக முறையினாலும், வசிய முறையினாலும், திலகமிடும் முறையினாலும், பொடி, நீறு முறைகளினாலும் பயனடையச் செய்திருக்கிறார்கள் என்பதனையும் இந்த நூலிலிருந்து தெரிந்துகொள்கிறோம்.

இந்த நூல் பல்வேறு நோய்களைக் குணப்படுத்த உதவும் மருந்துகளையும், மந்திரங்களையும் எளிய முறையில் விளக்கிக் காட்டுகிறது. எளிய மக்களும் இம்மருந்துகளினால் பெறும் பயன் எய்தும் வண்ணம் எளிய தமிழில் இதில் விளக்கங்கள் உள்ளன. பொதுமக்களுக்கும் சித்த மருத்துவர்களுக்கும் ஒருங்கே பயன்படும் இந்நூலைப் பதிப்பித்துத் தந்த சித்த மருத்துவர் திரு. நந்தகுமார் அவர்களுக்கு எங்கள் நன்றி.

இந்நூல் வெளிவர நிதியுதவி நல்கிய நடுவண் அரசுக்கும், சரசுவதி மகால் நூலக நிருவாக அலுவலர் மற்றும் வெளியீட்டு மேலாளர் (பொறுப்பு) வகிக்கும் திரு. சாமி. சிவஞானம் அவர்களுக்கும், முன்னாள் வெளியீட்டு மேலாளர் திரு. எம். பாலசுப்ரமணியன் அவர்களுக்கும், நூலகப் பதிப்புத்துறை பணியாளர்களுக்கும் என் இனிய பாராட்டுக்கள்.

**சா. விஜயராஜ் குமார்,** இ. ஆ. ப.,
மாவட்ட ஆட்சித்தலைவர் மற்றும்
இயக்குநர்,
சரசுவதி மகால் நூலகம்.

தஞ்சாவூர்
21-7-2006

# பொருளடக்கம்


| | | பக்கம் |
|---|---|---|
| 1. | ஹரி ஓம் வசியம் | 1 |
| 2. | திரிலோக வசியம் | 1 |
| 3. | தெய்வ வசியம் | 2 |
| 4. | சேவை வசியம் | 3 |
| 5. | சருவ வசியம் | 4 |
| 6. | பேசமிறுத வசியம் | 4 |
| 7. | மோகன வசியம் | 5 |
| 8. | மோகன மூலிகை (வசீகர மூலிகை) | 6 |
| 9. | ஸ்ரீ ரி மோகனமாம் | 6 |
| 10. | சென மோகனம் | 7 |
| 11. | சக்தி சொன்ன மோகனம் | 7 |
| 12. | தேவ மோகனமாம் | 8 |
| 13. | உபச மிருக மோகனம் | 8 |
| 14. | ரச மோகனம் | 10 |
| 15. | சென மோகனமாம் | 10 |
| 16. | புருஷ மோகனம் (புருஷ வசியம்) | 11 |
| 17. | கட்டுக்கொடி மூலிகையின் விந்தை | 12 |
| 18. | உடல் வலிக்கும், நரம்புத் தளர்ச்சிக்கும் | 13 |
| 19. | சகல கழிச்சல்களுக்கும் மருந்து | 14 |
| 20. | விஷ பாக முறிவுக்கும் பாண்டு ரோக நிவர்த்திக்கும், வீரிய விந்துக்கும் மருந்து | 15 |
| 21. | தேக சூரி மூலிகையின் வினோதம் | 15 |
| 22. | அஸ்தி சுர நிவர்த்திக்கு | 16 |
| 23. | எலும்புருக்கி நோய்க்கும், விந்து விருத்திக்கும் | 17 |
| 24. | கெர்ப்ப ஸ்தம்பணத்திற்கு நிவர்த்தி | 18 |
| 25. | அகஸ்தன தம்பன மூலிகை | 19 |

பக்கம்

26. சுக்கில ஸ்தம்பனம் 20
27. மிருக உச்சாடனம் 20
28. நர உச்சாடனம் 21
29. சகல பூதங்கள் ஓடிப்போகும் வினோதம் 21
30. பெண்களின் முலைப்பாகம் வத்திப்போகும் விந்தை 22
31. கண்டங்கத்திரி செடியின் மகிமை 23
32. செங்கத்திரி மூலிகையின் மகிமை 24
33. பூத பிசாசு அண்டாமல் இருக்க 24
34. கீழாநெல்லி மூலிகையின் வினோதம் 25
35. சருவாஞ்சனம் நிவர்த்திக்கு 26
36. வெஷ்ணமாம் 26
37. மிருகங்களை கைகாட்டி அழைக்கும் விந்தை 27
38. தெய்வத்தை அழைக்கும் விந்தை 27
39. துஷ்ட மிருகங்களை அழைக்கும் வினோதம் 28
40. தலைச்சுருளி செடியின் வேரின் அதிசயம் 29
41. ஆள்மீது ஆவேசம் வரச்சொல்லும் வினோதம் 30
42. தெய்வ பேதமை 31
43. லோக பேதமை 31
44. தீயில் நடக்கும் வினோதம் 32
45. பிசாசை விரட்டும் விந்தை 32
46. மாவிலங்குச் செடியின் மகிமை 33
47. ரத்தப் பிரமியத்துக்கு, வயிற்றில் இறந்த பிள்ளை வெளியில் வந்து விழ மருந்து 33
48. பீடை நிவர்த்திக்கு 35
49. சீந்திக்கொடி மூலிகையின் வினோதம் 36
50 வாத, பித்த சிலேத்தும சுரம் தீர மருந்து 37
51. மாரண மூலிகை (விஷம் தீண்டியதற்கு மருந்து) 38

பக்கம்


52. பிசாசுகளை மரணம் செய்ய 39

53. சர்வ பிசாசுகளை அழிக்க 39

54. துஷ்ட மிருகங்களை மரணம் செய்ய 40

55. கண்டமாலை, மூல பவுத்திரம் தீராத புண்களுக்கு மருந்து 41

56. தேல் விஷக் கடிக்கும், தேள் கடிக்கும் மந்திரம் 42

57. பேய் அவயமிட்டுக்கொண்டு போகும் வினோதம் 42

58. மேக சொறிகளுக்கு மருந்து எண்ணெய் 44

59. பாம்பு கடித்து உயிர் போகும் நிலையில் இருந்தாலும் பிழைக்க வைக்கும் வினோதம் 45

60. நாவினால் இரும்புத்துண்டு அறுக்கும் வித்தை 47

61. தண்ணீரில் விளக்கு எரியும் வினோதம் 47

62. போகமாம் 48

63. போகம் அதிகரிக்கச் செய்யும் மருந்து 49

64. புணர்வதற்கு மை செய்யும் முறை 49

65. நீர் முள்ளி விதையின் வினோதம் 50

66. ஆகாச வினோதம் 51

67. நஞ்சுக்கு (விஷக்கடிக்கு)த் தண்ணீர் ஓத மந்திரம் 51

68. மூச்சுப்பிடிப்புக்கு மந்திரம் 52

69. தலைமயிர் கறுக்க வைக்கும் வினோதம் 53

70. விஷம் போக முகமதியர் மந்திரம் 54

71. குஷ்ட வியாதிக்கு 54

72. காமாலைக்கும் மாலைக்கண்ணுக்கும் மருந்து 56

73. இருமலுக்கு மருந்து 59

74. ஒத்தைத்தலைவலிக்கு 60

75. குளிர் ஜுரத்திற்கு மருந்து 61

76. இருமலுக்குக் கையில் கட்டும் மூலிகையின் விநோதம் 62

77. வாழாத பெண்ணை மீண்டும் வாழ வைக்கும் விநோதம் 63

78. சகல காய்ச்சலுக்கும் மருந்து 64

79. காய்ச்சலுடன் கூடிய இருமலுக்கு மருந்து 65

80. கடுப்புடன் கூடிய கழிச்சலுக்கு (கஷாய மருந்து) 66

81. அனைத்து ஜன்னிக்கும் மருந்து 68

82. ஜுரத்திற்கு மாத்திரை 70

83. கழுத்துப் பிடிப்புக்கு மருந்து 72

84. தலையிலே தேங்காய் உடைக்கும் விநோதம் 72

85. குழந்தை பாக்கியம் இல்லாதவர்களுக்குச் சாங்கியம் (சடங்குகள்) 73

86. பல்பூச்சி விழச் செய்வதற்கு மருந்து 74

87. சித்து விநோதம் (தலைமுடி சடை பிடிக்கச் செய்யும் விநோதம்) 75

88. காய்ச்சின இரும்பைக் கையால் எடுக்கும் விநோதம் 75

89. போக விநோதம் (அதிகமான காம உணர்ச்சி ஏற்படச் செய்ய மருந்து) 76

90. யோக பலன்கள் கிடைக்க விநோதம் 76

91. சித்து விநோதம் பெண் ஓடாமல் இருக்க விந்தை 77

92. சித்து வினோதம் தலைமயிர் வெளுக்க, கருக்க வினோதம் 78

93. வினோத அஞ்சனம் (அரையாப்புக் கட்டிக்கு மருந்து) 79

94. பெண்கள் வீட்டு விலக்கு வருவதற்கான மருந்து 80

95. பாம்பு ஆடாது செய்யும் வினோதம் 80

96. பிள்ளை பெற மாட்டாதவளுக்கு வினோதம் 81

97. சித்தி வினோதம் (அளக்கும் படியும் அரைக்கும் அம்மியும் நடக்க வைக்கும் வினோதம்) 82

98. சித்த வினோதம் 83

99. மூஞ்சூறு வினோதம் 83

100. உண்ணாக்கு நிவர்த்திக்கு மருந்து 84

101. வினோத திலகம் (நெற்றியில் வைக்கும் வசிய மை) 85

102. அரையாப்பு வினோதம் (அரையாப்புக் கட்டி மேல் பூசும் மருந்து) 86

103. அரையாப்புக்கும் காமாலைக்கும் மருந்து 86

104. நாக செந்தூர மருந்தின் பயன்களும் செய்யும் முறையும் 87

105. இருமலுக்கு அடை மருந்து 90

106. அந்தர வாய்வுக்கு மருந்து (விரை வீக்கம் வலிக்கு) 91

107. இடுப்பு வாய்வுக்கு மருந்து 92

108. வாய்வு கழிச்சலுக்கும் அஜீரண கழிச்சலுக்கும் மருந்து 93

109. கிரந்தி நோய்க்கு மை வகை 95

110. சீத மண்டலி கடிக்கு மருந்து 96

பக்கம்

111. சீந்த மண்டலி கடிக்கு மந்திரம் 97

112. கால் வாய்வு வீக்கத்திற்கு மருந்து 97

113. வாத நிவர்த்திக்கு 98

114. முலை சுரக்க (பால் சுரக்க) 100

115. முலை சுரக்க, பசு மாட்டின் பால் மடி
சுரக்க மருந்து 100

116. நடுக்கு சுரத்திற்கு மருந்து 102

117. சீழ் பிரமியத்துக்கு மருந்து 103

118. தும்மிட்டி லேகியம் செய்யும் முறை 106

119. கலிக்கம் (கண்களில் விடும் மருந்து)
செய்யும் முறை 108

120. பெண் ஆசை அதிகரிக்க மருந்து 111

121. எரிப்புக்கும் கல்லடைப்புக்கும் மருந்து 112

122. மேக வெட்டைக்கு மருந்து 113

123. தூதுவளை கற்பம் 114

124. நீர்க் கடுப்புக்கு மருந்து 116

125. கண் சிவப்பு மாறுவதற்கு மருந்து 117

126. போக மருந்து (அதிக போக உணர்ச்சி
உண்டாக்க மருந்து) 118

127. கள்ளி கற்பம் 120

128. தேத்தாங் கற்பம் செய்யும் முறையும்,
குணமாகும் வியாதிகள் விபரமும் 122

பக்கம்

129. அரணைக் கடிக்கும், தவளைக் கடிக்கும் சொரியான் கடிகளுக்கும் மருந்தும், மந்திரமும் 124

130. கண் திருஷ்டி, ஓமல், ஏவல், பில்லி சூனியங்கள் நிவர்த்திக்கு 126

131. கோரோசனை கற்பம் 127

132. நண்டுவாக்கிலி கடிக்கு மந்திரம் 130

133. தேள் கடிக்கு மந்திரம் 131

134. மூச்சுப் பிடிப்பிற்கு மந்திரம் 131

135. கண் வலிக்கு மருந்து 131

136. மற்றவர் கண்களுக்குத் தெரியாது செய்யும் வினோதம் 132

137. மற்றவர்களுடன் பிரிவு செய்யும் வினோதம் 132

138. கோழி வினோதம் 134

139. குளிர் சுரத்திற்கு மூன்று முறைக்கான மூலிகை மருந்து 135

140. கோரப் பெரியான் சொன்ன லேகியம் 137

141. இரத்தக் கடுப்புக்கு மருந்து 138

142. குளிர் சுரத்துக்கு மருந்து 138

143. மூட்டைப்பூச்சி ஒழிக்க மந்திரம் 139

144. குழந்தை பாக்கியம் இல்லாத பெண்களுக்கு எண்ணெய் ஓத மந்திரம் 140

பக்கம்


145. குழந்தை உண்டாக மந்திரம் 142

146. குருப்பெரியான் சொன்ன வைபனம்
(காமம் ஊறுவதற்கு மருந்து) 143

147. அதிக தம்பணத்துக்கு மருந்து 144

148. வீரிய தம்பணத்துக்கு மருந்து 145

149. அதிகமான வலிமைக்கு மருந்து 145

150. விஷ கடிக்கு மருந்து 146

151. பார்வை, பில்லி, சூனியம் வராமல்
குளிசம் 147

152. சேராத புருஷனுக்கு மருந்து 148

153. சந்தனம் செய்ய விபரம் 149

154. நட்சத்திரத்தில் வரும் சுரம் விபரம் 151

155. மூலச்சுவடி எழுதியவரின் முழு விபரம் 158

# சித்த வைத்திய முறைகள்.

## ஹரி ஓம் வசியம்

**பாடல் எண் : 1**

சீதேவியார் செங்களநீர் ஓம்னாநீம்
மகாலெட்சுமி தேவியார்ச வசியம் குரு, குரு
மூலி என்று யிந்த மந்திரம் சொல்லி ஆணி
வேரறாமல் பிடுங்கித் தாமரை நூலும் யிந்த
வேருந் திரியாக்கிக் கபிலை பசுவின் நெய்யிலே
மை பண்ணி திலதமிட்டார் சவசியம்.

**விளக்கம் :**

ஹரி ஓம் சீதேவியார் செங்களநீர் ஓம்னாறீம் மகாலெட்சுமி தேவியார்ச வசியம் குரு, குரு மூலி என்று இந்த மந்திரம் சொல்லி முக்கறட்டை என்னும் செடியை ஆணி வேரறாமல் பிடுங்கி, தாமரைக் கொடியில் எடுத்த நூலையும், இந்த மூலிகை வேரையும் திரியாக்கி, கபிலை பசுவின் நெய்யில் எரித்து, நெற்றியில் திலகமிட்டால் உன்னைப் பார்ப்பவர்கள் உன்னிடம் வசியம் ஆவார்கள்.

## திரிலோக வசியம்

**பாடல் எண் : 2**

வெள்ளெருக்கம் வேர் நாயத்து கிளமை
நாள் தாமரை நூலைக் கொண்டு காப்புக்கட்டி
தேங்காய் ஒடைச்சு கிருனங் கீறிங்கு
குறொங் கெங் கணபதி மகா கணபதி லோக
வசிகாம பகவதேயென்று மந்திரம் சொல்லி

மூன்றுனாள்.........கிளமையன்று பிடுங்கிக்
குங்குமப்பூ, கோசறோசினை, கஸ்த்தூரி யிது
வெல்லாம் கூட்டி அரைத்துத் திலதமிட்ட திறி
லோக்கிய வசியமாம்.

**விளக்கம் :**

வெள்ளை எருக்கன் செடி வேருக்கு ஞாயிற்றுக்கிழமை தினத்தன்று தாமரை நூலை மஞ்சள் தடவி இந்த நூலை அடி செடிக்கு காப்புக் கட்டி, தேங்காய் உடைத்து, தீப தூபம் காண்பித்து, கிறானங், கீறிங்கு, குறொங்கெங் கணபதி மகா கணபதி லோக வசிகாம பகவதே என்ற மந்திரத்தைச் சொல்லி மூன்றாம் நாள் செவ்வாய்க்கிழமையன்று இந்தச் செடியை வேருடன் பிடுங்கி இந்த செடியின் வேரை மட்டும் தனியாக நறுக்கி எடுத்து குங்குமப்பூ, கோரோசனை, கஸ்தூரி இதை எல்லாம் சமனிடை எடுத்து இந்த வேருடன் சேர்த்து அரைத்து நெற்றியில் திலகமிடுவதினால் திரிலோக்கிய வசியமாம்.

# தெய்வ வசியம்

**பாடல் எண் : 3**

பொரத்லை, கய்யாந்தரை, சமூலமும்
தேவரிறுங்கி, மகாபிறுங்கி செய சொயாஸ்ரீயும்
பவெயென்றும் இந்த மந்திரத்தைச் சொல்லி
பிடுங்கி நிலவுணத்திப் பொடி செய்து வெள்ளிய
சீலையிலூட்டித் திரித்து காராமை பசுவின் நெய்யில்
மை பண்ணித் திலதமிட தெய்வ வசியமாம்.

**விளக்கம் :**

பொற்றலை கையாந்தரை செடியின் சமூலத்தை தேவ பிருங்கி, மகா பிருங்கி, செய சொயாஸ்ரீயும் பவெயென்றும், இந்த மந்திரத்தை 9 தடவை சொல்லிப் பிடுங்கி இந்தச் சமூலத்தை நிழலில் உணர்த்தி (நிழலில் காயவைத்து) இது காய்ந்த பிறகு, நன்றாக பொடி செய்து ஒரு துணியில் வைத்து திரித்து அகல் விளக்கில் காராவின் (பசுவின்) நெய் ஊற்றி இந்தத் திரியை கொளுத்தி மையாக்கி நெற்றியில் திலக மிட்டுக் கொண்டு போனால் தெய்வமும் வசியம் ஆகும் என்று அக்காலத்து சித்தர்கள் நம்பிக்கையுடன் செய்துள்ளார்கள். நமக்கும் இதில் நம்பிக்கை இருந்தால் நாம்கூட செய்து பார்க்கலாம். முயற்சி திருவினையாக்கும்.

# சேவை வசியம்

**பாடல் எண் : 4**

விஷ்ணு காறந்தி வேரைத் தீபதூபம்
கொடுத்து ஓம் ஓம் விசூலிம் சுலிம் என்று
மந்திரஞ் சொல்லி உதைய காலத்திலே
பிடுங்கி குழிசமாடித் தலையிலேயிருக்கச் சேவை வசியமாம்

**விளக்கம் :**

விஷ்ணு கரந்தி என்று சொல்லும் மருந்து மூலிகை செடியின் வேருக்கு விடியற்காலம் (சூரியன் உதயம் ஆகும் முன்னதாக) தீப தூபம் காண்பித்து ஓம் ஓம் விசூலிம் சுலிம் என்ற மந்திரத்தைச் சொல்லிப் பிடுங்கி, அதனைத் தண்ணீரில் நன்றாக நனைத்து உச்சந் தலையிலே அரைத்து வைத்துக் கொண்டால் சேவை வசியமாம்.

# சருவ வசியம்

### பாடல் எண் : 5

கறுத்தப்பூப் பூத்த செம்பை வேரைச்
சத்திடமத் தோண்டிக் கன்னிக் கழியாத
பிள்ளை நூத்த நூலைக் கொண்டு காப்பு கட்டித்
தீப தூபங் கொடுத்து ஓம் சாம ரூபி சாம்பவி
சீறிங் கீறிங் கிறயம் என்று இந்த மூன்று
னாள் மூவாயிரம் உரு செபித்துப் பிடுங்கி நிள
ஒணத்தலாக உலத்தித் தயிலம் பண்ணித்
திலதமிடச் சருவ வசியமாம்.

### விளக்கம் :

கறுத்தப் பூப்பூத்த செம்பை வேரைச் சத்திடமங் தோண்டி (பூமியில் இருக்கும் வேரை வேர் மட்டும் தெரியும்படி ஒரு பகுதி யாகத் தோண்டி) திருமணம் ஆகாத பெண் நூத்த நூலைக் கொண்டு இந்த வேருக்கு காப்பு கட்டி (மஞ்சள் நூல் கட்டி) தீப தூபம் காண்பித்து ஓம் சாம ரூபி சாம்பவி சீறிங் கீறிங் கிறயம் என்று மூன்று நாட்கள் மூவாயிரம் தடவை உரு செபித்து டி செடியின் வேரைப் பிடுங்கி இந்த வேரை நிழலில் காயவைத்து குழித் தைலம் இறக்கி நெற்றியில் பொட்டு வைத்துக் கொண் டால் சர்வ வசியமாகும்.

# பேச மிறுத வசியம்

### பாடல் எண் : 6

வெள்ளை குன்றி வேரை அமாவாசி னாள்
தீப தூபங் கொடுத்து வம்ம வச வல்லை தம்மலச
வசீ ஓம் என்று இந்த மந்திரம் சொல்லிப்
பிடுங்கி வாயிலடக்கி, பேச மிறுத வசியமாம்.

**விளக்கம் :**

வெள்ளை குண்டுமணி வேருக்கு அமாவாசை நாளில் தீப தூபம் காண்பித்து வம்ம வச வல்லை தம்மலச வசீ ஓம் என்று இந்த மந்திரத்தை 108 தடவை சொல்லி இந்த வேரைப் பிடுங்கி வேரை மட்டும் தனியாக நறுக்கி எடுத்து சுத்தம் செய்து வாயில் போட்டு மென்று அடக்கிக் கொண்டிருந்தால் மற்றவர்கள் பேச மிறுத வசியம் அடைவார்கள். (மவுனமாக இருப்பார்கள்)

# மோகன வசியம்

**பாடல் எண் : 7**

சென்னாயுருவி வேரை வெள்ளிக்கிழமை
னாள் காப்புக் கட்டி மரு வெள்ளியிலே ஓம்
கீறியும் சவ்வும் ஐம் என்று யிந்த மந்திரம்
சொல்லி பிடுங்கி குழிச மாடி தலையிலிருக்க
மதன வசியம் மோகன வசியம்.

**விளக்கம் :**

சிகப்பு நாயுறு வேரை வெள்ளிக்கிழமை நாள் காப்புக் கட்டி (மஞ்சள் நூல் கட்டி) தீப தூபம் காண்பித்து அடுத்த வெள்ளிக் கிழமை நாளில் ஓம் கீறியும் சவ்வும் ஐம் என்று இந்த மந்திரத்தை 108 தடவை சொல்லிப் பிடுங்கி இந்த வேரைத் தண்ணீரில் நனைத்து உச்சந்தலையிலே அரைத்து வைத்துக் கொண்டால் மதன வசியம் மோகன வசியம் ஆகும்.

# மோகன மூலிகை
# (வகர மயக்க மூலிகை)

**பாடல் எண் : 8**

மோகன மூலிகை பொன்னூ மத்தை பயிர்
செயிது இலை எடுக்கிற பக்குவத்திலே யிலையைச்
சிறுநீர் விட்டரைத்து வெத்திலையில் குடுக்கவும்
சுருட்டி தீத மோகனம்பூவை உமிழ் நீரி
லரைத்துக் குடுக்கவும் மோகனமாம்.

**விளக்கம் :**

மோகன மூலிகையான பொன்னூ மத்தை செடியை பயிர் செய்து இலையை பக்குவத்திலே அதாவது (இச்செடியில் இலை முளைக்க ஆரம்பிக்கும் சமயத்தில்) இந்த இலையை மட்டும் பறித்து சிறுநீர் விட்டரைத்து வெத்திலையில் தடவிக் கொடுத்தால் மோகனமாகும் ( வசிய மயக்கமாகும் ). இந்த மோகனப் பூவை உமிழ்நீர் விட்டரைத்து வெற்றிலையில் தடவி கொடுத்தாலும் மோகனமாகும்.

# ஸ்ரீறி மோகனமாம்

**பாடல் எண் : 9**

காய யிந்திரியத் திலரைத்திட மோகனமாம்
தேரை ரத்தத்திரைத்திட மோகனமாம்
இது ஸ்ரீறி மோகனமாம்.

**விளக்கம்**

இந்திரியத்தை (காயயிந்திரியத்தை) தேரை (தவளைஇனம்) இரத்தத்தில் அரைத்து நெற்றியில் திலகமிட்டுக் கொண்டு போனால் இதைப் பெண்கள் பார்த்தால் வசியம் ஆவார்கள். (தேரை என்பது தவளை இனம் மாதிரி இருக்கும்).

# செனமோகனம்

## பாடல் எண் : 10

கஞ்சா விரையை கொண்டு வந்து
வெட்டுப் பட்டவன் தலை மண்டையை னாய்
தீண்டாமலெடுத்து வந்து அந்தத் தலையோட்டிலே
மண்ணிட்டு அதிலே கஞ்சா விரையை
போட்டு பயிர் செய்து பூத்து காச்சி யிருக்கிற
பக்குவத்திலே சுட்டு திலதமிட சென மோகனமாம்.

## விளக்கம் :

கஞ்சா விரையைக் கொண்டு வந்து வெட்டுப் பட்டவன் தலை மண்டை ஒட்டை (இந்த ஒடு நாய் முகராதவாறு இருத்தல் வேண்டும்) கொண்டு வந்து தண்ணீர் நிரப்பி மண்ணைப் போட்டு இதில் கஞ்சா விரையை விதைத்து பயிர் செய்து இந்த செடி பூத்து காய்க்கும் நிலையில் இருக்கும் போது இந்த செடியை அப்புறப் படுத்திவிட்டு இந்த ஒட்டை சுட்டு எரித்து சாம்பலாக்கி நெற்றி யில் இட்டுக்கொள்ளவும் சென மோகனம் ஆகும்.

# சக்தி சென்ன மோகனம்

## பாடல் எண் : 11

வெள்ளை ஊமத்தை சென மோகனம்
நித்திய இதியன் பத்திரத்தை தண்ணீரில்
போட்டுக் குளிக்கவும் யிது மந்திரம்
மத்தோன் மத்தம் தோன் மத்தி ஓம்
சலியும் சக்தி சென்ன மோகனமென்று
குளிக்கவும்.

**விளக்கம் :**

வெள்ளை ஊமத்தை இலைகளைக் கொண்டு வந்து அதனை ஒரு உலோக பாத்திரத்தில் போட்டு தண்ணீர் ஊற்றி நன்றாகக் கலக்கி மத்தோன் மத்தமதோன் மத்தி ஓம் கலியும் என்ற மந்திரத்தை 108 தடவை சொல்லிக் கொண்டு குளிக்கவும். இப்படி செய்தால் சக்தி சொன்ன மோகனமாகும். மனதுக்கு சக்தி உண்டாகும்.

# தேவ மோகனமாம்

**பாடல் எண் : 12**

மருளுமத்தை ஓம் தெய்வ மோகினி
மரு மரு என்று பிடுங்கிக் கருக்குப் பண்ணி
யந்த சாத்தில் குளப்பி திலதமிட தேவ
மோகனமாம்.

**விளக்கம் :**

மருளுமத்தைச் செடிக்குக் காப்பு கட்டி ஓம் தெய்வ மோகினி வரு வரு என்று மந்திரத்தைச் சொல்லி வேருடன் பிடுங்கி இதனை காய வைத்து சுட்டு சாம்பல் ஆக்கி இத்துடன் மேற்சொன்ன இலையின் சாற்றைக் கலந்து நெற்றியில் திலகமிட்டுக் கொண்டால் தேவ மோகனமாம். (தேவர்கள் வசியம் ஆவார்கள்.)

# உபச மிருக மோகனம்

**பாடல் எண் : 13**

கோரை கிளங்கும், நரித்தலையோட்டில்
பயிர் பண்ணி முளைத்த ஏழானாள் யெடுத்து
ஆள களச்சியிலே அடைக்கவும் அடைக்கும்
போது துந்துங்கி முருகோ மோகினி யென்று
யிந்த மந்திரமந் சொல்லிக் களச்சிலடைக்கவும்
வாயிலே போட்டுக்கொண்டு உபச மிறுக மோகனம்.

## விளக்கம் :

அக்காலத்தில் சித்தர்களுக்கு மக்களின் பிணிகளைப்போக்கச் சில மூலிகைகள் தேவைப்பட்டன. இதற்காகச் சித்தர்கள் மூலிகைகளைத் தேடிக்கொண்டு காட்டுப் பகுதிகளுக்கும், மலைப் பகுதிகளுக்கும் போக வேண்டியிருக்கும். இப்படிப் போகும்போது சில கொடிய மிருகங்கள் வந்து இவர்களைத் தாக்காதவாறும் இந்த மிருகங்களிடத்திலிருந்து தப்பித்துக் கொள்வதற்காகவும் அக்காலத்துச் சித்தர்கள் சில மூலிகைகளைக் கொண்டும் சில மந்திரங்களைக் கொண்டும் மிருகங்களை வசப்படுத்தியிருக்கிறார்கள் என்று இந்தப் பாடல்களிலிருந்து நாம் அறிகிறோம்.

## கருத்து : 1

கோரைக் கிழங்கை நரித்தலையோட்டில் பயிர் செய்து இது முளைத்த ஏழாம் நாள் பிடுங்கி ஆனக்களச்சியிலே அடைக்கவும். இதை அடைக்கும்போது துந்துங்கி முருகோ மோகினி என்று இந்த மந்திரத்தைச் சொல்லிக் களச்சியிலடைக்கவும். இதில் கொஞ்சம் வாயில் போட்டுக்கொண்டு மேற்சொன்ன மந்திரத்தை உச்சரித்துக் கொண்டு மிருகத்தைப் பார்த்தால் மிருகங்கள் வசியமாகும்.

## கருத்து : 2

வெண்குன்றி, முத்தக்காசு கழிச்சக்காய், நரித்தலை ஓடு இவைகளைச் சமன் எடை எடுத்துக்கொண்டு முளைப் பாலில் அரைத்து துந்துங்கி முருகோ மோகினி என்று 108 முறை சொல்லி நெற்றியில் திலகமிட்டுக் கொண்டு மிருகத்தைப் பார்த்தால் மிருகங்கள் வசியமாகும். மிருகங்கள் ஓடிப்போகும்.

# ரச மோகனம்

**பாடல் எண் : 14**

ஆலவிழுதை ஒரு வெட்டா வெட்டிக் கீழே
விழாமல் அறவெட்டிப் பிடிச்சுக் கொண்டு
பிடிக்கா மந்திரம், மாயா மோகினி, மகா மோகினி
ரச மோகினி செய செய என்று எருக்கொண்டு
புதுச் சட்டியிலே போட்டுக் கருக்கித் திலதமிட
ரச மோகனம்.

**விளக்கம் :**

ஆல மரத்தின் விழுதை வெட்டி அந்தப் பாலையும், இந்த மரத்தின் புல்லுருவியையும் கொண்டு வந்து ஒரு புதுச் சட்டியில் போட்டு விராட்டி கொண்டு எரித்து பிடிக்கா மந்திரம் மாயா மோகினி, மகா மோகினி, ரச மோகினி செய செயஎன்று 108 முறை சொல்லிக் கருக்கி நெற்றியில் திலகமிட ரசமோகனமாகும்.

# சேனை மோகனமாம்

**பாடல் எண் : 15**

நன்னாரி வேரை பவர்ணமி நாள்
காப்புக் கட்டி பால் பொங்கலிட்டுக் காப்புக்
கட்டி தீப தூபங் கொடுத்து பெலியிட்டு
மந்திரம் :- *சீலி சீலி சீனே மொத்ரி
மொஹி மொஹி* என்று மந்திரஞ் சொல்லிப்
பிடுங்கி குளிசமர்டி தலையிருக்கச் சேன
மோகனமாம்.

**விளக்கம் :**

நன்னாரி வேரைப் பவுர்ணமி நாளில் காப்புக் கட்டி இந்த வேருக்குப் பால் பொங்கல் செய்து தேங்காய் உடைத்து தீப தூபம் காண்பித்து சீலி, சீலி சீனே மொஹி, மொஹி, மொஹி என்ற மந்திரத்தை 108 முறை சொல்லிக் காப்புக் கட்டிய நன்னாரி வேரைச் செடியுடன் பிடுங்கி தண்ணீரில் நனைத்து உச்சந்தலையில் அரைத்து வைத்துக் கொண்டால் சென மோகனமாகும்.

# புருஷ மோகனம் (புருஷ வசியம்)

**பாடல் எண் : 16**

கறம்பப் பூவை வெள்ளிய சீலையிலும்
திரியாக்கி நல்ல எண்ணை வாத்து மைப்
பண்ணித் திலதமிட ஓம் ஓம் என்று
இடப் புருஷ மோகனமாம்.

**விளக்கம் :**

அக்காலத்தில் பெண்கள் தனது கணவர்களைக் கூட தன் வசப்படுத்திக் கொள்வதற்காகச் சில மூலிகைகளின் உதவி கொண்டு வசப்படுத்தி இருக்கிறார்கள். இதைச் செய்த காரணம் கணவன், மனைவி ஒற்றுமை சீர்குலையாமல் இருக்கவேண்டும் என்ற நோக்கத்தில் கீழ்க்கண்ட முறைகளைக் கையாண்டு வெற்றி அடைந்துள்ளார்கள்.

**கருத்து :**

கரம்பைப் பூவை ஒரு துணியில் சுருட்டி திரியாக்கி இந்தத் திரியை நல்லெண்ணெய் விளக்கில் போட்டு எரித்து மை மாதிரி செய்து ஓம் ஓம் என்று 1008 முறை சொல்லி நெற்றியில் திலக மிட்டுக் கொண்டு புருஷர்களைப் பார்த்தால் புருஷ மோகன வசியமாகும்.

12

# கட்டுக் கொடி மூலிகையின் விந்தை

**பாடல் எண் : 17**

மோகன மூலிகை சுப்பராயன் துணை
கம்பன் மூலிகை கட்டுக் கொடியை
திலாலனு ஐபெந்த எதிலாலனு பெந்தனு
றா என்று சமூலம் பிடுங்கி ஆலங்கட்டி
வேம்படு மென்னையிலூறப் போட்டு வேம்ப
யெண்ணையும் இந்த மூலிகையும் கட்டி
ஆசனத்தில் பூசி தண்ணீரிலே ஆசனம்
போட்டு இருக்கலாம். விளக்குக் கொளுத்திக்
கையிலே பிடித்து மழையிலே நனையாமல்
போகலாம். இந்த மூலிகை ஒன்று தண்ணீரில்
கரைத்தால் கட்டியாகத் திரளும்; தின்னலாம்.

**விளக்கம் :**

கட்டுக் கொடி என்ற மூலிகையை முறைப்படி, முருகப் பெருமான் துணைகொண்டு காப்புக் கட்டி, தீப தூபம் காண்பித்து திலாலனு ஐ பெந்த எதிலாலனு பெந்தனு றா என்று 108 முறை சொல்லி இந்தக் கொடியின் சமூலத்தைப் பிடுங்கி ஆலங்கட்டி-யுடன் வேப்பெண்ணெயில் ஊறப்போட்டு நன்றாக ஊறின பிறகு இந்த இரண்டையும் நன்றாக அரைத்து ஆசனப் பக்கத்தில் பூசிக்கொண்டு தண்ணீரில் ஆசனம் போட்டிருந்தால் தண்ணீர் ஆசனத்தில் ஒட்டாது. மேற்படி அரைத்த சாந்தை ஒரு திரியில் நனைத்து விளக்கில் போட்டு ஏற்றிக்கொண்டு மழையில் பிடித்துக் கொண்டு போனால் விளக்கு அணையாது. இந்த மூலிகையைத் தண்ணீரில் கரைத்தால் தண்ணீரும் கட்டியாகத் திரளும். இந்தக் கட்டியை கூடத் தின்னலாம். ஷ விந்தைகளை ஏன் செய்தார்.

கள் என்று ஆராய்ந்து பார்க்கும்போது அக்காலத்துச் சித்தர்கள் மக்களை நம்பச் செய்வதற்காகவும், சில மூலிகையின் குணங்களைப் பற்றியும் அதிசயங்களைப் பற்றியும் உபயோகத்தைப் பற்றியும் மக்களுக்குச் செய்து காண்பித்திருக்கிறார்கள் என்பதைப் பழைய சுவடிகளிலிருந்தும் நாம் தெரிந்துகொள்வதற்காக இப்படிச் செய்தார்கள்.

# உடல்வலிக்கும், நரம்புத்தளர்ச்சிக்கும்

## பாடல் எண் : 18

பாலக் குறண்டியை அமாவாசை நாள்
காப்புக் கட்டி பவுர்ணமி நாள் தூப தீபங்
குடுத்துச் சமூலமும் ஆவின் பாலிலரைத்து
உடம்பெல்லாம் துவளையிட்டு வெட்ட வெட்ட றுது
இதின் விரையைப் பசுவின் பாலில் கொள்ள
சுக்கில்லை பன்மை யிந்த மூலிகை மந்திரம்
நீலகணம் விசைய அந்திராதனால்
கடக்குந்த தோம அட்ட தெசாயுத தம்பை
தங்மைய ஓம் ஸ்ரீம் என்று பிடுங்கிக் கொள்ளவும்.

## விளக்கம் :

பாலக் குறண்டியின் செடிக்கு அமாவாசை நாளில் மஞ்சள் நூல் கொண்டு காப்புக் கட்டிப் பிறகு பௌர்ணமி நாளன்று தீப தூபங் காண்பித்து இந்தச் செடியைப் பிடுங்கி நன்றாகப் பசுவின் பாலில் அரைத்து உடம்பு முழுவதும் தேய்த்துக்கொண்டால் உடம்பிலுள்ள சூடு [உஷ்ணம்] உடல்வலி, நரம்புத் தளர்ச்சி இவைகள் போகும். இந்தச் செடியின் விதையைப் பசும்பாலில் அரைத்துக் குடித்தால் ஆண்மை இல்லாதவர்களுக்கு ஆண்மை

உண்டாகும். இந்த மூலிகைச் செடியைப் பிடுங்கும்போது நீல கணம் விசைய விசைய அந்திராதனால் கடக்குந்த தோம அட்ட தெசாயுத தம்பை தம்மைய ஓம் ஸ்ரீம் என்ற மந்திரத்தை 108 தடவை உரு ஜெபித்துப் பிடுங்கி ஷடி உபயோகங்களுக்குப் பயன்படுத்தவும்,

## சகல கழிச்சல்களுக்கு மருந்து

### பாடல் எண் : 19

மேற்படி பட்டையைச் சமூலமும் பிடுங்கிக் கொள்ள
மந்திரம்: செல்மல் தம்பின காளி கங்காளி
நம என்று பிடுங்கிக் கொள்ளவும் எடுத்து
நிழலுணத்தி யிடித்து வஸ்திர காயம்
பண்ணிக் குருவை நெல் பொரிச் சமன் கட்டிக்
குடுக்க பூணி சகல கழிச்சலும் தீரும்,

### விளக்கம் :

பாலக் குறண்டியின் பட்டையையும், சமூலத்தையும்செல்மல், தம்பின காளி, கங்காளி நம என்ற மந்திரத்தைச் சொல்லிப் பிடுங்கி எடுத்து நிழலில் காயவைத்து இடித்துப் பொடி செய்து சூரணம் செய்துகுறுவை நெல்லில் பொரித்த பொரியுடன் மேற்படி சூரணத்தில் 2 கிராம் அளவு எடுத்துத் தேனில் கலந்து தினம் 2 வேளை வீதம், 3 நாளைக்கு கொடுக்கவும்.

### பத்தியம் :

புளிப்பு, காரம் நீக்கவும். அரிசி கஞ்சி மோர் கலந்து சாப்பிடவும்.

### தீரும் வியாதி :

சகல கழிச்சல்களும் தீரும்.

# விஷபாக முறிவுக்கும், பாண்டு ரோக நிவர்த்திக்கும், வீரிய விந்துக்கும் மருந்து

**பாடல் எண் : 20**

நீர் முள்ளிக்குத் தீப தூபம் கொடுத்து ஓம்
மேகனாதா
விசுவ ரூபா மேகத்தம்பி செல்லை தம்பி என்றும்
மந்திரம் சொல்லிப் பிடுங்கி அந்த வேரைக்
குடிக்க விஷ பாகம் தீரும் இலையை அரைத்துக்
குடிக்க பாண்டு ரோகமுந் தீரும். விரையை
அரைத்து குடிக்கச் சுக்கில்லை தம்பனம்.

**விளக்கம் :**

நீர் முள்ளிச்செடிக்குத் தீப தூபம் காண்பித்து ஓம் மேகனாதா விசுவ ரூபா மேகத் தம்பி செல்லை தம்பி என்னும் மந்திரத்தை சொல்லிப் பிடுங்கி அந்த வேரை அரைத்துக் குடித்தால் விஷபாக நீர் தீரும். இந்த இலையை அரைத்துத் தினம் ஒருவேளை வீதம் 24 நாட்களுக்குச் சாப்பிட்டு வந்தால் பாண்டு ரோகம் குணமாகும் இந்தச் செடியின் விதையை 3 கிராம் எடைக்கு எடுத்துப் பாலில் அரைத்து தினம் ஒரு வேளை வீதம் தொடர்ந்து 48 நாட்கள் சாப்பிட்டு வந்தால் வீரிய விந்து விந்து கட்டு அதிகமாகும் ஆண்மை அதிகம் ஆகும்.

# தேக சூரி மூலிகையின் விநோதம்

**பாடல் எண் : 21**

தேக சூரியை யைத்துனாள் காப்புக் கட்டிச்
செவ்வாக்கிழமை நாள் பிடுங்கி வேரை வாயி
லடக்கிக் கல்லு காசு நொறுங்க கடித்தலாம்

இலையைத் திண்டு சாதித்து வரசறுவ சித்தி
உண்டாகும் விரையை தின்று வர வச்சிர
காயம். இந்த மூலிகைக்கு மந்திரம் ஓம்
வச்சிர சுருபி, சுரிம் மஹா ஹரி சுவாஹா.

**விளக்கம் :**

தேச்சூரி செடிக்கு ஞாயிற்றுக்கிழமை நாள் அன்று காப்புக் கட்டிச் செவ்வாய்க்கிழமை நாள் அன்று ஓம் வச்சிர, சுருபி, சுரீம், மஹாஹரி சுவாஹா என்ற மந்திரத்தைச் சொல்லி பிடுங்கி இந்த வேரை கொஞ்சம் நறுக்கி வாயில் போட்டு மென்று அடக்கிக் கொண்டு கல், காசு இவைகளைக் கடித்தால் நொறுங்கக் கடிக்கலாம். இது ஒரு விந்தையாகும். இச்செடியின்பத்து இலைகளைத் தினம் ஒரு வேளை வீதம் அரைத்துசாப்பிட்டு வந்தால் சித்தி புத்தி, கூர்மை, ஆயுள் விருத்தி,அதிக நினைவுகள் இவைகளுக்கு இந்த விதைகளையும் அரைத்துப் பாலில் கலந்து சாப்பிடலாம். நல்ல பலன்கள் கிடைக்கும்.

# அஸ்திஜுரம் நிவர்த்திக்கும்

**பாடல் எண். 22**

சக்தி காணைக்கு சங்கிரமனாள் காப்பு
கட்டித் தைப்பூசத்திலே ஓம் பார்பாயாம்
பனந்தி மகா சந்திம காலி என்றிம் மந்திரம்
சொல்லிப் பிடுங்கிச் சமூலமும் பொடி பண்ணித்
தினமும் தின்று சாதிக்க ஆயுத்த மாமை
இதன் கிழங்கு எருமைப் பாலிரைத்துக்
குடிக்க அஸ்திச் சுரம் சத்தம்பிக்கும்.

**விளக்கம் :**

சக்தி சாரணைக்கு சங்கிரம நாளில் மஞ்சள் நூல் கொண்டு காப்புக்கட்டி தைப்பூசத்திலே ஓம் பார்பாயாம் பனந்தி மகா சத்திம காலி என்றிம் மந்திரம் சொல்லிப் பிடுங்கி இந்தச் செடியின் சமூலத்தை நிழலில் காய வைத்துப் பொடி செய்து தினமும் 3 கிராம் வீதம் 2 வேளை 24 நாட்கள் சாப்பிட்டால் நினைத்த காரியம் சாத்தியமாகும்; ஆயுள் அதிகமாகும்.

இந்தக் கிழங்கைக் காய வைத்து 5 கிராம் எடை வீதம் ஒரு நாளைக்கு எருமை பாலில் அரைத்துத் தொடர்ந்து ஆறு நாட்கள் குடித்தால் அஸ்திஜுரம் தீரும்.

**அஸ்தி ஜுரத்தின் குணம் :**

உடல் குளிரும், தலைவலிக்கும், தாது மிகத்துடித்து நிற்கும், குலையும் நாவுத் தொண்டையும் வெந்த புண்ணாகும், நாவு வெளுக்கும், நாசியிலிருந்து நீர் வடியும். இத்தகைய குறி குணங்கள் இருந்தால் அஸ்தி ஜுரம் என்று சொல்லலாம்.

**பத்தியம் :**

அரிசி உடைத்த கஞ்சி வைத்துச் சாப்பிடலாம். மூன்றாம் நாள் மிளகு ரசம் வைத்துச் சாப்பிடலாம்.

# எலும்புருக்கி நோய்க்கும், விந்து விருத்திக்கும்

**பாடல் எண் : 23**

பூமிச் சக்கரை கிழங்கு, யிருக்குற
அளவும் குளி வெட்டி வெளி கண்டு விநாயக
பூசை பண்ணி மந்திரம்; பாதாள செவ்
பராதச ரூபி நம என்று பிடுங்கி ஆவின்
பால் வார்த்தரைத்துக் கொள்ளச் சுக்கில
ஸத்த பமை நெய்யிலரைத்துக் கொள்ள
எலும்புருக்கி தீரும்.

**விளக்கம் :**

பூமியில் இருக்கும் பூமிச் சக்கர கிழங்கு இருக்கின்ற அளவுக்குச் சுற்றிலும் குழியாக வெட்டி கிழங்கு மட்டும் வெளியில் தெரியும்படி செய்து இந்தக் கிழங்கிற்கு வினாயக பூஜை (கணபதி பூஜை) செய்துவிட்டுப் பாதாள செவி பராதச ரூபி நம என்று 108 தடவை ஜெபித்துப் பிடுங்கி இந்தக் கிழங்கைக்காயவைத்து 5கிராம் எடைக்குத் தினமும் பசுவின் பால் விட்டு அரைத்து 24 நாட்கள் சாப்பிட்டால் ஆண்மை, இந்திரியம் அதிகமாகும். மேற்படி கிழங்கைத் தினம் 5 கிராம் எடை எடுத்து நாள் ஒன்றுக்கு 2 வேளை வீதம் 24 நாட்கள் சாப்பிட்டு வந்தால் எலும்புருக்கி நோய் போகும். இந்தக் கிழங்கு சில மருந்துகளுடன் சேர்த்து லேகியம் செய்தும் சாப்பிடலாம். இந்த எலும்புருக்கி என்பது டி.பி, என்று சொல்லும் க்ஷய ரோகம், காச ரோகம், ஈழை இருமல் இத்தகைய குணங்கள் உடையது. இந்த நோய் ஏற்பட்டால் உடலிலுள்ள வலிமை குன்றிச் சோர்வுடனும், களைப்புடனும் இருக்கும். இத்தகை நோய் உள்ளவர்கள் நல்ல சத்துள்ள ஆகாரங்களைச் சாப்பிட்டு நல்ல ஓய்வு எடுத்துக்கொள்ள வேண்டும்.

# கெர்ப்ப ஸ்தம்பனத்திற்கு நிவர்த்தி

**பாடல் எண் : 24**

குதிரை வாலி புல்லு வேரை தீப தூபமங்
கொடுத்து கோழி பெலியிட்டுப் பிடுங்கி
குளிசமாடிக் கட்ட கெற்ப கெற்ப ஸ்தம்
பனமாகும்.

**விளக்கம்**

குதிரை வாலி புல்லு வேருக்கு தீப தூபம் கொடுத்துப் பிறகு சேவல் கோழி பலி கொடுத்து இதனைப் பிடுங்கித் தண்ணீர்விட்டு

நனைத்துக் கையில் கட்ட கர்ப்ப ஸ்தம்பனமாம். (கற்பம் சிதைவு இல்லாமல் பாதுகாக்க இப்படிச் செய்யலாம்) மேலும், இதனை அரைத்துத் தலையில் தடவிக்கொண்டு குளிக்கலாம்.

# அகஸ்தன தம்பன மூலிகை

**பாடல் எண் : 25**

நரிவெருட்டி வேரை நாயத்துக் கிழமை
நாள் காப்புக் கட்டி வியாழக் கிழமை நாள்
பிடுங்கவும் மந்திரம்: சடாயதும், சடாயதும்
தும் சடாய, சடாய என்று பிடுங்கிப் பொடி
பண்ணிக் காத்து வாக்கிலே தூரவ துஷ்ட
மிருகங்கள் ஓடிப்போம் சறுவ சித்தியுண்டாம்
விரையைத் தின்றுவர வச்சிர காயம் இந்த
மூலிகைக்கு மந்திரம் ஓம் வச்சிர சுருபி
சுரி மஹா ஹரி ஸ்வாஹா வரு.

**விளக்கம் :**

நரி வெருட்டி வேரை ஞாயிற்றுக்கிழமையன்று காப்புக்கட்டி வியாழக்கிழமையன்று சடாயதும், சடாயதும், தும் சடாய, சடாய என்ற மந்திரத்தைச் சொல்லிப் பிடுங்கி இதனை நன்றாகக் காய வைத்துப் பொடி செய்து இந்தப் பொடியைத் துஷ்ட மிருகங்கள் இருக்கும் இடத்தில் காற்று அடிக்கும் பக்கத்தில் தூளி விட்டால் மிருகங்கள் எல்லாம் ஓடிப்போகும். சர்வ சித்தியும் உண்டாகும் மேற்படி விதையை 2 கிராம் எடைக்குப் பாலில் அரைத்து சாப்பிட்டால் மேற்சொன்ன பலன்கள் கிடைக்கும்.

# சுக்கில ஸ்தம்பனம்

## பாடல் எண் : 26

பூமிச் சக்கரைக் கிழங்கு இருக்கிறயளவு
குழி வெட்டி வெளி கண்டு வினாயக பூசை பண்ணி
மந்திரம் பாதாள செவி பார்சத ரூபி நம என்று
பிடுங்கி ஆவின் பால் வாத்தரைத்துக் கொள்ள
சுக்கில ஸ்தம்பனம்.

## விளக்கம் :

பூமிச்சக்கரைக் கிழங்கு பூமியில் முளைத்து இருக்கும் போது இந்தக் கிழங்கைச் சுற்றிக் குழி வெட்டிக் கிழங்கு மட்டும் வெளியில் தெரியும்படி செய்து வினாயக பூஜை செய்து பாதாள செவி பார்சத ரூபி நம என்று ஒன்பது தடவை சொல்லிக் கிழங்குடன் பிடுங்கிக் கிழங்கைக்காயவைத்துக்கொண்டு தினம்ஒருவேளைக்கு 5 கிராம் வீதம் 48 நாட்கள் பசும்பாலில் அரைத்து உட்கொண்டால் சுக்கில ஸ்தம்பனம் ஆகும். (இந்திரிய விருத்தியாகும்) இந்தக் கிழங்கு சில முக்கியமான லேகிய மருந்துகளில் சேர்க்கப் படக்கூடியவை ஆகும்.

# மிருக உச்சாடனம்

## பாடல் எண் ; 27

மான் செவிக் கள்ளிக்கு கெந்தகம் புஷ்பம்
சாத்தி காப்புக் கட்டி மறுநாள் கட்டின
கப்பை யவுத்துப் போட்டு மந்திரம் சுருணி
சுருணி ஆங்கார சத்தி.

## விளக்கம் :

மான் செவிக் கள்ளிக்கு, சந்தனம், புஷ்பம் சாத்தித் தீப தூபம் காண்பித்துக் காப்புக் கட்டி மறுநாள் கட்டிய

காப்பை அவிழ்த்துப் போட்டு விட்டு சுருணி சுருணி ஆங்கார சத்தி என்ற மந்திரத்தை 9 தடவை சொல்லி வேருடன் பிடுங்கி வேரை மட்டும் குளிசமாடிக் கையில் கட்டிக்கொண்டால் மிருகங் களும் வசியமாகும்.

# நர உச்சாடனம்

## பாடல் எண் : 28

சாடய உச்சாடைய என்று மந்திரஞ் சொல்லிப்
பிடுங்கிக் குளிசமாடிச் சுடலை சாம்பலு கூட்டி
களிகிண்டி கிண்டிக் கிடக்கிற லைக் கடையிரப்
போதைக்க உச்சாடனம் வரயிது நர உச்சாடனம்.

**விளக்கம் :**

இச்சுவடியில் இப்பாடல் முழுமை பெறாது இருக்கும் காரணத்தால் விளக்கம் தர இயலவில்லை.

# சகல பூதங்கள் ஓடிப்போகும் வினோதம்

## பாடல் எண் : 29

அரமுறி சுண்டி வேரை தீப தூ பங் கொடுத்து
மந்திரம் ஓம் அகோர கோர ரூபி பூதோட
சாயச் சாட உறய என்று மந்திரம் சொல்லி
ஆணி வேரறாமல் பிடுங்கி எருக்கலம் பஞ்சும்
இந்த வேரும் திரிச்சு வேம்பெண்ணை வாத்து
வெளக்கேத்தி வெளக்கை வெளியிலே பிடிக்க
இதுக்குச் சொன்ன மந்திரம் ஆயிரத் தெட்டு
உரு செவிக்க சகல பூதங்கள் ஓடிப் போம்
இது பூத உச்சாடனம்.

**விளக்கம் :**

அரமுறி சுண்டி வேருக்குத் தீப தூபம் கொடுத்து ஓம் அகோர கோர ரூபி பூதோட சாயச்சாட உறய என்ற மந்திரத்தை ஒன்பது தடவை சொல்லி இந்தச் செடியை வேரறுகாமல் பிடுங்கி எருக்கன் செடியிலிருந்து எடுக்கப்பட்ட பஞ்சை இந்த வேரில் சுற்றித் திரியாக்கி வேப் பெண்ணெய் விட்டு விளக்கேற்றி மேற்சொன்ன மந்திரத்தை 1008 தடவை உரு ஜெபித்துக் கொண்டு இந்த விளக்கை எடுத்துக் கொண்டு வெளியில் போனால், சகல பூதங்கள் இந்த வெளிச்சத்தைப் பார்த்து விட்டு ஓடிப்போகும்.

# பெண்களின் முலைப்பாகம் வத்திப்போகும் விந்தை

**பாடல் எண் : 30**

சுண்டியிலையைக் காப்புக் கட்டி மறுநாள்
மந்திரம் சோர சோரி சேஷ தேவி
யங்கிலி என்று மந்திரம் சொல்லிப் பிடுங்கி
உலத்திப் பொடி பண்ணி கெந்த பொடியில்
கூட்டி வேண்டாத பெண்களுக்கு முலை மேலே
தடவ முலை வத்திப் போம் யிது பரிச
உச்சாடனம்.

**விளக்கம் :**

சுண்டியிலையைக் காப்புக் கட்டி மறுநாள் சோர சோரி சேஷ தேவி யங்கிலி என்ற மந்திரத்தை 9 தடவை சொல்லி வேருடன் பிடுங்கி இதனை நிழலில் காய வைத்துப் பொடி செய்து கெந்தகப் பொடியில் இதனைக் கலந்து இதில் கொஞ்சம் தண்ணீர் சேர்த்து பெண்களின் முலை பாகத்தின் மேல் தடவினால் பெண்

க்ளின் முலை பாகம் வத்திப் போகும். இது செய்வதின் பயன் முலைபாகம் ஒன்று சின்னதாகவும், ஒன்று பெரியதாகவும் இருந்தால் மட்டும் இதனைச் செய்ய வேண்டும். மேலும் அதிகமான பால் சுரந்து மார்புப் பக்கம் வீக்கமாக இருந்தால் கூட இதனைச் செய்யலாம். அல்லது குழந்தைக்குப் பால் கொடுக்கும் தாய்மார்கள் இதனைச் செய்யக் கூடாது, பால் கட்டிக் கொண்டு முலைப்பாகம் வீக்கம் அடைந்து இனிக் குழந்தைக்குப் பால் கொடுக்கத் தேவை இல்லை என்று முடிவு செய்த பின்னர் மேல் சொன்ன மருந்தை முலை மீது பூசவும். இப்படிப் பூசப்பட்ட பிறகு எக்காரணத்தைக் கொண்டும் குழந்தைக்குப் பால் கொடுக்கக்கூடாது. மீண்டும் குழந்தை பால் குடிக்காத அளவு பார்த்துக் கொள்வது நல்லது:

# கண்டங்கத்திரிச் செடியின் மகிமை

## பாடல் எண் : 31

கண்டங்கத்திரியை கேட்டைமை க்ஷத்திரத்
திலே தோண்டித் குடம் பெலி கொடுத்து
செவ்வாய்க்கிழமை நாள் பிடுங்கியும்
மந்திரம் சோர சோர பூதோ உச்சாடனம்
கரோகதி சுவாஹா என்று பிடுங்கிக் குழிசமர்டி
வைத்துக் கொள்ளவும். பூதவித்து வேஷணியாம்.

## விளக்கம் :

கண்டங்கத்திரிச் செடிக்குக் கேட்டை நட்சத்திரத்தில் தீப தூபம் காண்பித்துக் குடம்பலிகொடுத்துத் தோண்டிச் செவ்வாய்க் கிழமை அன்று சோர சோர பூதோ உச்சாடனம் கரோகதி சுவாஹா என்ற மந்திரத்தை 9 தடவை சொல்லிப் பிடுங்கிக் குளிசமாடிக் கையில் கட்டிக் கொண்டால் பூதங்கள் எல்லாம் வசியமாகும்,

# செங்கத்திரி மூலிகையின் மகிமை

**பாடல் எண் : 32**

செவ்வாய்க்கிழமை செங்கத்திரிக்கிக் காப்புக்
கட்டி செம்மரையாடு பெலி கொடுத்து வெள்ளிக்
கிழமை நாள் பிடுங்கி மந்திரம் மஹ சுவா வீர
தரசாமுண்டி ரக்ஷ ரதேஷணி சுவாஹ என்று
சொல்லிப் பிடுங்கி வைத்துக் கொள்ளவும்
இருவரும் பிரிய வேணுமென்றால் பிரியும்.

**விளக்கம் :**

செங்கத்திரிச் செடிக்குச் செவ்வாய்க்கிழமை நாளில் காப்புக் கட்டி தீப தூபம் காண்பித்துச் செம்மறி ஆடு பலி கொடுத்து வெள்ளிக்கிழமை நாளில் மஹ சுவாவீர தரசாமுண்டி ரக்ஷரதே ஷணி சுவாஹ என்ற மந்திரத்தை 1008 தடவை சொல்லிப் பிடுங்கி வேரைக் கையில் கட்டிக் கொண்டால் இந்த வேரை யார் மீதாவது போட்டால் அவர்கள் பிரிவார்கள். நட்பு முறியும், நட்பு கெட்டு போகும்.

# பூத பிசாசு அண்டாமல் இருக்க

**பாடல் எண் : 33**

காட்டாமணக்கு வேரை வியாழக்கிழமை
நாள் வேரறாமல் தொடை கோ செலம் விட்டு
அது வத்தின பிறகு தூப தீபங் கொடுத்து மந்திரம்
எறண்டியிருந்து முகியிசுவரி சருவபூத பிசாசு
துவேஷணியென்று பிடுங்கிக் கட்ட பூத பிசாசு
துவேஷணிகா என்று கட்ட.

**விளக்கம் :**

காட்டாமணி வேருக்கு வியாழக் கிழமையன்று அந்தச் செடி-யைச்சுற்றித் தண்ணீர்விட்டு இந்தத் தண்ணீர் காய்ந்த பிறகு இந்த வேருக்குத் தீப தூபம் காண்பித்து எறண்டியிருந்து முகியிசுவரி சருவபூத பிசாசு துவேஷணி என்ற மந்திரத்தை 1008 தடவை சொல்லி வேருடன் பிடுங்கிக் குளிச மாட்டிக் கையில் கட்டிக் கொண்டால் பூத பிசாசுகள் அண்டாது.

# கீழா நெல்லி மூலிகையின் விநோதம்

**பாடல் எண் : 34**

கீழா நெல்லி புதன் கிழமை நாள் காப்புக்
கட்டி வியாழக் கிழமை நாள் தேங்காய்
உடைச்சுப் பிடுங்க நீராம் பூமி வித்து
வெஷணிப் பஞ்ச மூலிச் சகலச் சருவா பக்தார்.........த்த
.........சுலீவென்று பிடுங்கிக் குக்கி முன்
உடைத்த தேங்காய் நெய் வாங்கி அஞ்சுமை
யக ஓடும் இது பூமி வித்து வேஷன்.

**விளக்கம் :**

புதன்கிழமை நாள் அன்று கீழா நெல்லிச் செடிக்குக் காப்புக் கட்டி வியாழக்கிழமை நாள் ஆன்று தேங்காய் உடைத்துத் தீப தூபம் காண்பித்து நீராம் பூமி வித்து வெஷணி பஞ்சமூலிச் சகலச் சருவா பக்தார் சுலீவென்று மந்திரத்தை 9 தடவை சொல்லி இந்தச்செடியை பிடுங்கி முன்பு உடைத்த தேங்காயில் எண்ணெய் எடுத்து இந்தச் செடியைப் போட்டுக் காய்ச்சி எண்ணெயை மட்டும் இறுத்தி உடலில் தடவிக் கொண்டால் அனைத்து உஷ்ணம் சம்பந்தமான ரோகங்களும் தீரும். வாரம் ஒரு முறை தலை தேய்த்து இந்த எண்ணெயில் குளிக்கலாம்.

# சரு வாஞ்சனம் நிவர்த்திக்கு

## பாடல் எண் : 35

ஆடு தீண்டாப் பாளையைச் சனிக்கிழமை நாள்
காப்புக் கட்டி ஞாயத்துக் கிழமை நாள் வெள்ளாட்டு
துள்ளுமறி பலி கொடுத்து சறுவ வித்து வேஷணி
சறுவ பதார்த்த தேவ சுவாகா என்று பிடுங்கி
வெட்டுப்பட்டவள் தலையோட்டைப் பொடி செய்து
ரெண்டையுஞ் சட்டியிலே போட்டுக் கருக்கி
புத்தில தேனில் குழப்பிக் கையிலே
போடச் சறுவாஞ்சனம்.

## விளக்கம் :

ஆடு தீண்டாப் பாளைச் செடிக்குச் சனிக்கிழமை நாள் அன்று காப்புக் கட்டி, ஞாயிற்றுக்கிழமையன்று வெள்ளாட்டுக் கடாவைப் பலி கொடுத்துச் சறுவ்வித்து வேஷணி சறுவப் பதார்த்த தேவ சுவாகா என்ற மந்திரத்தை 108 முறை சொல்லி வேருடன் பிடுங்கி வெட்டுப்பட்டவள் தலை ஓட்டைக் கொஞ்சம் எடுத்து அதைச் சுட்டுப்பொடி செய்து இந்த இரண்டையும் புது சட்டியில் போட்டுக் கருக்கிச் சாம்பல் செய்து இத்துடன் புற்றில் எடுத்த தேனில் கலந்து குழப்பிக் கையிலே போட சர்வாஞ்சனம் ஆகும்.

# வெஷணமாம்

## பாடல் எண் : 36

பூனைக் கா்லு சுன்னபூ வெலிப் பாழானமும்
கூட்டிச் சமனாக அரைத்து ஆள் பேரில் போடினும்
வித்து விஷணமாம் குட்ட வியாதி யமா னை
வித்து வெஷ்ணமாம்.

**விளக்கம் :**

பூனைக்காலு சுனையூ யெலிப் பாஷாணமும் சேர்த்து அரைத்து ஆள் பேரில் போடினும் வித்து வெஷ்ணமாம். குட்ட வியாதிய மானை வித்து வெஷ்ணமாம்.

# மிருகங்களைக் கை காட்டி அழைக்கும் விந்தை

**பாடல் எண் : 37**

ஆகருஷ்ணம் துடரிக்கு ஞாயத்துக்
கிழமை நாள் காப்புக் கட்டி மந்திரம் மிறுக
ஆகருஷிணி மிருகேசுவரி சுவாவென்று பிடுங்கிக்
குளிசமாடி மோதிரத்தில் வைத்துக் கொண்டு
மிருகங்க்ளைக் கைகாட்டி அழைக்க வரும்.

**விளக்கம் :**

துடரிச் செடிக்கு ஞாயிற்றுக் கிழமை நாள் அன்று காப்புக் கட்டி, மிருக ஆகருஷிணி மிருகேசுவரி சிவாவென்று 1008 முறை சொல்லி வேருடன் பிடுங்கிக் குளிசமாடி மோதிரமாகச் செய்து கையில் கட்டிப் போட்டுக் கொண்டு மிருகங்களைக் கையால் அசைத்து அழைத்தால் மிருகங்கள் அருகில் வரும். இது ஒரு விந்தையான செயல் ஆகும்.

# தெய்வத்தை அழைக்கும் விந்தை

**பாடல் எண் : 38**

முன்னை வேரில் கிரண காலத்திலே காப்புக் கட்டிக்
கிராணம் விடுகிபோது பெரும் பூசணிக்காய்
பெலி குடுத்து அதுக்கு மந்திரம் சர்வ தேவ்தா
கட்டின சுவாகா வென்று எதைலில் வோலத்திப்

பொடி பண்ணி வெள்ளெருக்கம் பஞ்சுலே
வத்து திரிச்சி வெளக்கேத்தி அந்த வெளக்
கேததி அந்த வெளக்குடைய பிருகாசத்திலே
இருந்து யெந்த தேவதை வரவேணுமென்று னெனைச்சால்
அந்தத் தேவதை வர கனத்துடனே கண்டுனது
ரேக்கானத் தோத்தும் அங்கை ஆரினாகதாலும்
காணப்படும் மத்தவாறு.

**விளக்கம் :**

முன்னைச் செடியின் வேருக்குக் கிரகண காலத்தில் காப்புக் கட்டிக் கிரகணம் விடுகிறபோது பெரும்பூசணிக்காய்பலிகொடுத்து சர்வதேவதா கட்டின சுவாகா என்ற மந்திரத்தை 1008 முறை ஜெபித்து இந்தச் செடியினைப் பிடுங்கி நிழலில் காயவைத்துப் பொடி செய்து வெள்ளெருக்கம் செடியில் எடுத்த பஞ்சுடன் மேற் சொன்ன பொடியை எருக்கம் பஞ்சில் வைத்துச்சுருட்டித்திரியாக்கி நல்லெண்ணெய் ஊற்றி விளக்கேற்றி இந்த விளக்கு சுடர் வெளிச்சத்தில் அருகில் இருந்துகொண்டு எந்தத்தேவதையை நினைத்-தாலும் அல்லது இஷ்ட தேவதை வரவேண்டும் என்று நினைத்தாலும் அந்த தேவதையின் முகத்தை மனதில் நினைத்து ஒரு ஜாமம் இந்த விளக்கின் சுடரைப் பார்த்துக்கொண்டிருந்தால் நீ நினைத்த தெய்வம் உன் கண்ணில் தெரியும். வசியமும் ஆகும். இதனைச் செய்யும் போது போது வேறு எந்த நினைவுகளும் இன்றி இதன்படி செய்யவேண்டும்.

# துஷ்ட மிருகங்களை அழைக்கும் வினோதம்

**பாடல் எண் : 39**

குப்பமேனி ஒரு செனி பூண்டாய் யிருக்கிற
வெடத்திலே தூ கது மெழிகிதுப் பாவவு பணி
அவடத்தில் பால் பொங்கலிட்டு ஆயித கலங்
கொம்புனாலே கெல்லி பிடுங்கவும் மந்திரம்

மது சயி மிருகா கருஷணி விசுவாமுத்திர வாத
வாத சுவாகா வென்று பிடுங்கி அந்த வேர்
வாயிலிருக்க துஷ்ட மிருகங்களை அழைத்தாலும் வரும்.

**விளக்கம் :**

குப்பைமேனிச் செடி தனியாக இருக்கிற இடத்தில் நன்றாக சாணம் கொண்டு மெழுகிச் சுத்தம் செய்து கோலமிட்டு அந்த இடத்தில் பால் பொங்கலிட்டு அந்தச் செடியைச் சுற்றிலும் இரும்புப் பாறையினால் கொத்திவிட்டு மதுசயி, மிருகா, கருஷணி விசுவாமித்திர, வாத வாத சுவாகா, என்று 1008 முறை மந்திரத்தைச் சொல்லிப் பிடுங்கி வேரை மட்டும் தனியாக நறுக்கி ஒரு துண்டை மட்டும் வாயில் போட்டுக் கொண்டு மென்று கொண்டு துஷ்ட மிருகங்களை அழைத்தால் வசியமாகும். மிருகங்கள் நமக்கு அடங்கும். நம்மைப் பார்த்து ஓடாது நிற்கும்.

# தலை சுருளி செடியின் வேரின் அதிசயம்

**பாடல் எண் : 40**

தலை சுருளி வேருக்கு கோரு வட்டமியான
கிருஷ்ணன் பிறந்த நாளையில் காப்புக் கட்டி
மரு அஷ்டமினாள் ஆடு பன்னி கோழியும்
பெலி குடுத்துப் பிடுங்க மந்திரம்: பஷி பஷி
ஓம் பஷி சிவ பஷிராச பஷிராச கருஷணி ராச
மாதங்கி வாத வாத சுவாகா என்று குளிச
மாடி தலையில் தரிக்க நாம்பாத்து எங்கே
அழைச்சோமோ அங்கே வருவார் ராச்க்கள்.

**விளக்கம் :**

கோகுலாஷ்டமியன்று (கிருஷ்ணன் பிறந்த நாள்) தலை சுருளி வேருக்குக் காப்புக் கட்டி அடுத்து வரும் அஷ்டமி நாள் அன்று ஆடு, பன்றி, கோழி, இவைகளைப் பலி கொடுத்து, பஷி, பஷி ஓம்

பஷி சிவ பஷி ராச கருஷணி ராச மாதங்கி வாத, வாத சுவாகா என்ற மந்திரத்தை 1008 தடவை ஜெபித்து மேற்படி செடியை வேருடன் பிடுங்கிக் குளிசமாடி உச்சந்தலையில் தரித்து யாரை எங்கு அழைத்தாலும் அவர்கள் அங்கு வருவார்கள். இது ஒரு வினோத செயலாகும்.

# ஆள் மீது ஆவேசம் வரச் சொல்லும் வினோதம்

**பாடல் எண் : 41**

கறியா நங்கை வேர் சனிக்கிழமை நாள்
தேயத்தில் காப்புக் கட்டி மத்தியானத்தில் பிடுங்கவும்
மந்திரம் சறுவ சேகா கருஷணி சறுவ மோகினி
சறுவ கருஷணி சிவா வாவென்று பிடுங்கிக்
குளிசமாடி வாயிலடக்கிக் கொண்டு மைப் பாத்து
ஆர் பேரில் ஆவேசம் வரவேணுமென்று நினைத்தால் வரும்

**விளக்கம் :**

கறியா நங்கை வேருக்குக் காலையில் காப்புக் கட்டி சறுவ சேகா கருஷணி சறுவ மோகினி சறுவ கருஷணி சிவா வாவென்று ஒன்பது தடவைச் சொல்லி மேற்படிச் செடியை வேர் அறுகாமல் மத்தியானத்தில் பிடுங்கிக் குளிசமாடி வாயிலடக்கிக் கொண்டு யாரை நாம் பார்க்கிறோமோ அவர்களுக்கு ஆவேசம் வரும். ஆடுவார்கள்.

# தெய்வ பேதமை

## பாடல் எண் : 42

கோழியவரை சோதினாள் காப்புக் கட்டி
சித்திரை நட்சத்திரத்தில் பிடுங்கி அரிகாபேதி மாமம்
பேதி நம என்று பிடுங்கவும் தெய்வ பேதமை

**விளக்கம் :**

சித்திரை நட்சத்திரத்தில் ஜோதி நாள் அன்று கோழி அவரை காப்புக் கட்டி தீப தூபம் காண்பித்து அரிகாபேதி மாமம் பேதி நம என்ற மந்திரத்தைச் சொல்லிப் பிடுங்கவும். தெய்வ பேதமை ஆகும்.

# லோக பேதமை

## பாடல் எண் : 43

காட்டுச் செம்பசலையைத் திருவாதிரை
நாளையில் காப்புக்கட்டி செஞ்சாவல் பெலி
கொடுத்து அசுபதியில் இரும்பினாலே கெல்லி
பிடுங்கவும். சிறியும் சீறியும் சீறியும் என்று
பிடுங்கவும். தெய்வ பேதமை யிது லோக பேதமை

**விளக்கம் :**

காட்டுச் செம்பசலையைத் திருவாதிரை நாளில் காப்புக் கட்டிச் சிகப்புச் சேவல் கோழி பலி கொடுத்து அசுபதியில் இரும்பினால் செய்யப்பட்ட கடப்பாரையைக் கொண்டு இந்தக்கொடியைச்சுற்றி லும் தோண்டி சீறியும், சீறியும் சீறியும் என்ற மந்திரத்தை ஒன்பது தடவை ஜெபித்துப் பிடுங்கவும். தெய்வ பேதமை இது லோக பேதமையாகும்.

# தீயில் நடக்கும் வினோதம்

**பாடல் எண் : 44**

வடதுத்திஷ சாகத்தில் காப்புக் கட்டி
லலலலலலலல என்று சோதியில் பிடுங்கி
தாம வாத்தரைத்துக் காலில் தடவி அக்கினி
யில் நடக்கலாமிது அக்கினி ஸத்தம்பனம்

**விளக்கம் :**

வடதுத்தி செடிக்கு விசாக நட்சத்திரத்தில் காப்புக் கட்டித் தீப தூபம் காண்பித்து லலலலலலலல என்று மந்திரத்தைச் சொல்லிச் சோதியில் பிடுங்கி தாம (வெள்ளை) அல்லது காடி விட்டு அரைத்துக் காலில் தடவி அக்கினியில் நடந்தால் (தீயில் நடந்தால்) அக்கினியும் வசியமாகிக் காலில் சுடாது. தீயில் நடந்தால் சுடாது. இது ஒரு வினோதமான செயல் ஆகும்.

# பிசாசை விரட்டும் விந்தை

**பாடல் எண் : 45**

சங்கம் வெருக்கு வெள்ளிக்கிழமை
தாம்பு கட்டி சாவல் பெலி கொடுத்து
பூதபேதி மகாபேதி என்று பிடுங்கவும்
பிசாசு பிடித்த பேருக்குக் கட்டப்
போகாத பிசாசும் போம்.

**விளக்கம் :**

சங்கச் செடி வேருக்கு வெள்ளிக்கிழமை நாள் அன்று மஞ்சள் கயிறு கட்டி (காப்பு கட்டி) சேவல் பலி கொடுத்து பூத பேதி, மகா பேதி என்ற மந்திரத்தை 108 முறை

சொல்லிப் பிடுங்கி அந்த வேரை மட்டும் தனியாகப் பிடுங்கிக் கையில் கட்டினால் போகாத பிசாசும் அலறி அடித்துக்கொண்டு ஓடும்.

# மாவிலங்குச் செடியின் மகிமை

**பாடல் எண் : 46**

மாவிலங்கை ஒரு செடியாய் நிற்கிறது
பாத்து வெள்ளெருக்க நாறால் காப்புக்
கட்டி சீதேவியார் செங்கழுநீர் பூச்சாத்தி
அர்ச்சனை பண்ணி மது மாங்கிஷ
நைவேத்தியம் பண்ணி உதார வணக்கார
ரறீகுலி ஒம்படு

**விளக்கம் :**

தனியாக முளைத்திருக்கும் மாவிலங்கு செடிக்கு வெள்ளெருக்க நாரால் காப்புக் கட்டி பூச்சாத்தி அர்ச்சனை பண்ணி மதுபானம், மாமிசம் வைத்து நைவேத்யம் பண்ணி உதார வணக்கார ரறீ குலி ஒம்படு என்ற மந்திரத்தைச் சொல்லிப் பிடுங்கிக் குளிசமாடிக் கையில் கட்டிக் கொண்டால் அய்யன், துர்க்கை பிடாரி முதலானவை ஓடிப் போகும்.

# இரத்தப் பிரமியத்துக்கு வயிற்றில் இறந்த பிள்ளை வெளியில் வந்து விழ மருந்து

**பாடல் எண் ; 47**

ரத்தப் பிரமியத்துக்குப் பிள்ளை விழ காட்ட
மருந்து: தவசி முருங்கையிலை எலுமிச்சம்பழம்
அஞ்சுஇலை யரைத்துட்டி வெள்ளாட்டு

வெல்லம் கட்டி மூனுனாள் குடிக்கத் தீரும்
கள்ளிவேர் எருக்கலம் வேர் மருக்காரை வேர்
யிமூன்று வேரும் காடி வாத்து அரைத்து
யோனியில் தடவப் பிள்ளை விழும்

**விளக்கம் :**

இரத்தப் பிரமியத்துக்கு மருந்து: தவசி முருங்கை இலையை ஒரு கைப்பிடி அளவு எடுத்துக் கொண்டு இத்துடன் ஐந்து எலுமிச்சம்பழத்தின் சாற்றைப் பிழிந்து எடுத்து இவை இரண்டையும் நன்றாக அரைத்துக் கொண்டு உருண்டையாக உருட்டிக் கொண்டு இதில் ஐந்து கிராம் எடைக்கு எடுத்து வெள்ளாட்டுப் பால், வெல்லம் இவை சேர்த்துத் தினம் 2 வேளை வீதம் 3 நாள் சாப்பிடவும்.

**பத்தியம் :**

புளிப்பு, காரம் நீக்கவும், இத்துடன் அசைவ உணவும் நீக்கவும்.

**தீரும் வியாதி :**

இரத்தப் பிரமியம்

## இரத்தப் பிரமியத்தின் அறிகுறிகள் :

நீர்த்தாரையில் கடுப்பும் குத்தலும் கண்டு சிறுநீரில் இரத்தம் விழும். உடல் உஷ்ணமாயிருக்கும். கை கால்கள் சோர்ந்து உடலும் பலம் கெட்டு நாளடைவில் உடல் மெலிந்து போகும்.

### பொதுவாக இந்த வியாதி வரும் காரணம் :

பல பெண்களிடத்தில் உடல் உறவு கொள்வதினாலும், நோய் உள்ள பெண்களிடத்தில் உடல் உறவு கொள்வதினாலும் மூலத்தில் அக்கினி கொண்டு தாது கெட்டு இத்தகைய பிரமியங்கள் ஏற்படுகின்றன. இவற்றில் இரத்தப் பிரமியம், சுக்கிலப் பிரமியம், சீல் பிரமியம் ஆகியவையாகும். எனவே, நோயில்லாத பெண்களிடத்தில் உடல் உறவு கொள்வதே நன்மை பயக்கும்,

### வயிற்றில் இறந்த பிள்ளை வெளியில் விழுவதற்கு :

கள்ளி வேர், எருக்கம் வேர், மருக்காரை வேர் அந்த மூன்றையும் சமனெடை எடுத்துக் காடி வார்த்து அரைத்துப்பெண் யோனியில் ( பெண் மர்ம ஸ்தானத்தில் ) தடவினால் வயிற்றில் இறந்தப் பிள்ளை வெளியில் வந்து விழும்.

## பீடை நிவர்த்திக்கு

### பாடல் எண்: 48

நீர்மேல் நெருப்புக்கு கன்னி கழியாத பிள்ளை
நூத்த நூல் கொண்டு காப்புக் கட்டி தேனும்
தினை மாவும் நைவேத்யம் பண்ணிச் செஞ்சேவல் பலி
கொடுத்து அக்கினி ரூபி, அக்கினிச் சூலி சற்வக்கிரக
நிர்வாணி சர்வசுவரி நமாவென்று பிடுங்கிக் கட்ட
சமஸ்த்தான பீடையுந்தீரும்.

**விளக்கம் :**

நீர்மேல் நெருப்பு செடிக்கு திருமணம் ஆகாத பிள்ளை நூத்த நூலைக் கொண்டு காப்புக் கட்டித் தேனும் தினைமாவும் நைவேத்தியம் பண்ணிச் சிகப்பு சாவல் பலி கொடுத்து அக்கினி ரூபி, அக்கினிச் சூரி சர்வக்கிரக நிர்வாணி சர்வேஸ்வரி நம என்று 9 தடவை சொல்லப் பிடுங்கிக் குளிசமாடிக் கையில் கட்ட நிரந்தரமான (நிலையான) பீடைகள் இருந்தாலும் பீடை தீரும்.

# சீந்திக் கொடி மூலிகையின் விநோதம்

## பாடல் எண் : 49

சீந்திக் கொடிக்கு வெள்ளிக்கிழமை னாள் காப்புக்
கட்டி அந்தச் செடியிலே சென்று ர ர ர ர ர ர ர ர
வென்று செபித்து யெட்டானாள் பிடுங்கிக் குளிச
மாடித் தலையில் தரித்துக் கொண்டு சத்துருவுடனே
யெதுத்துப் பேசலாம் எதுள்ளி பெசப் பயப்படுவன்.

**விளக்கம் :**

சீந்திக் கொடிக்கு வெள்ளிக்கிழமை நாள் அன்று காப்புக்கட்டி அந்தச் செடியின் அருகில் சென்று ர ர ர ர ர ர ர ர என்ற மந்திரத்தை 9 முறை சொல்லி எட்டாம் நாள் இந்தச் சீந்திக் கொடியைப் பிடுங்கிக் குளிசமாடி தலையில் தரித்துக்கொண்டு போனால் எதிரிகளிடத்தில் எதிர்த்துப் பேசலாம். எதிரி பேச பயப்படுவான் எதிரிகள் பகைவர்கள் நம் இடம் அன்பாகப் பேசுவார்கள்.

# வாத பித்த சிலேத்துவ சுரம் தீர மருந்து

**பாடல் எண் : 50**

அம்மாவாசினாள் பாதரை மா கடியில் சென்று
வடக்கே போர வேரைத் தோண்டிக் காப்புக்
கட்டி கோழி பெலி கொடுத்து பாமானந்தி
பாபேதனி மாம்பரி பஞ்சமி சுவாகா வென்று
ஒரு வேட்டிலே அரவெட்டி அரைத்து வென்னீரில்
குடுக்க வாத பித்தம் சேஷம மயிதி லெருத்த
சுரம் தீரும்.

**விளக்கம் :**

அம்மாவாசை நாளன்று பாதரை மரத்தடியில் சென்று வடக்கு நோக்கிப் போகும் வேரைத் தோண்டிக் காப்புக்கட்டி கோழி பழி கொடுத்து பாமானந்தி பாபே தனி மாம்பரி பஞ்சமி சுவாகா என்ற மந்திரத்தை 108 தடவை சொல்லி ஒரே வெட்டாக இந்த வேரை வெட்டி ஒரு துண்டாக எடுத்து வெந்நீர் விட்டு அரைத்துத் தினம் இரண்டு வேளை வீதம் மூன்று நாள் கொடுக்கவும்.

**பத்தியம்;**

மிளகு ரசம் சாதம் கரைத்துச் சாப்பிடவும்.

# மாரண மூலிகை

## (விஷம் தீண்டியதற்கு மருந்து)

**பாடல் எண் : 51**

பேதனுவு-மாரண மூலிகை கார்த்திகை கிளங்கு
கார்த்திகை நட்சத்திரத்தில் காப்புக்கட்டி மரு
கார்த்திகையில் ஆடு பெலி கொடுத்து மந்திரம்
சரவணபவ ரய நமாவென்று பிடுங்கி வைத்துக்
கொள்ளவும், விஷந் தீண்டினால் கொஞ்சம்
தண்ணீரிலரைத்துக் கரைத்து ஊள்ளே குடிக்க
விஷமானதெல்லாம் பாரணமாம்.

**விளக்கம் :**

கார்த்திகை நட்சத்திரத்தில் கார்த்திகைக் கிழங்குக்குக் காப்புக் கட்டி அடுத்த கார்த்திகையில் ஆடு பலி கொடுத்து சரவணபவ ரய நமாவென்று பிடுங்கி வைத்துக் கொண்டு விஷ ஜந்துக்கள் தீண்டினால் இந்தக் கிழங்கில் கொஞ்சம் எடுத்துத் தண்ணீரில் அரைத்துக் கண்களில் மூன்று சொட்டுக் கலிக்கம் இடவும். (கலிக்கம் என்பது கண்களை திறந்து கண் விழிகளின் மேல் மருந்து போடுவது தான் கலிக்கம் என்று சொல்வது) அதிக விஷம் உடம்பில் பரவி இருந்தால் இந்தக் கிழங்கைத் தண்ணீர் விட்டு அரைத்துக் கலக்கி உள்ளுக்குக் குடிக்கச் சொல்லவும். விஷமெல்லாம் தீரும்.

**பத்தியம் :**

ஒரு நாளைக்கு எந்த ஆகாரமும் சாப்பிடக் கூடாது.

# பிசாசுகளை மரணம் செய்ய

## பாடல் எண் : 52

ஒருவர் பேரில் பிசாசு பிடித்து இருந்தால் அந்தப்
பிசாசை மரணம் பண்ண வேணுமென்றால் அந்தப்
பிசாசென்று நிசம் பண்ணி அந்தப் பிசாசு பேமாய்
பச்சை நாபியினாலே பண்ணி அய்யனார் காலடியிலே
புதைக்க அர அர அர வென்று பன்னீராயிரம்
உருவேத்தி
யெந்த பிசாசு மரணம்.

## விளக்கம் :

ஒருவர் மேல் பிசாசு பிடித்திருந்தால் அந்தப் பிசாசை மரணம் செய்ய (விரட்ட) அந்தப்பிசாசு பிடித்தவர்கள் போல் தோலிலாவது பழைய கந்தைத் துணியிலாவது பொம்மை மாதிரி செய்து அய்யனார் காலடியில் புதைத்து அர அர அர என்று பன்னீராயிரம் முறை உருவேத்தி ஜெபித்தால் பிசாசு மரணமாகும்.

# சர்வ பிசாசுகளை அழிக்க

## பாடல் எண் : 53

நெரி விஷத்தை அமாவசிய னாளரைத்து
நாமிறுக பசு பட்சி சிகர்மூர் மாரண சுவாகா
வென்று வெட்டுப் பட்டவன் தலையோட்டிலே
யெழுதிக் கீளே புதைத்து அதின் பேரிலே
யிருந்து கொண்டு கோர கோர கோர
சங்கரரிய சங்கராய சங்கரரிய என்று
செவிக்கச் சருவமும் மரணம்

**விளக்கம் :**

நெரி விஷத்தை அமாவாசை நாளன்று அரைத்து நாமிருக பசு பட்சி சிகரமா மாரண சுவாகா வென்று மந்திரத்தைச் சொல்லி வெட்டுப்பட்டு இறந்தவனின் மண்டை ஓட்டில் அரைத்த நெரி விஷத்தைத் திணித்து பூமியில் புதைத்து அதன் மேலிருந்து நின்று கொண்டு கோர கோர கோர சங்கராய சங்கராய சங்கராய என்று ஒன்பது தடவை மந்திரத்தைச் சொல்லி ஜெபித்தால் எல்லாப் பிசாசும் அழிந்து போகும்.

# துஷ்ட மிருகங்களை மரணம் செய்ய

**பாடல் எண் : 54**

ஓடுவயை பாட்டிமத்தில் காப்புக் கட்டி மரு
னாளத்தியாச்சியத்தில் பிடுங்கித் தண்ணீரில் கலக்கி
மிருகங்களுக்கு வாத்தால் மரணம்

**விளக்கம் :**

ஓடுவயை என்ற கொடிக்குப் பாட்டி முகத்தில் (அமாவாசைக்கு மறுநாள்) காப்புக் கட்டித் தீப தூபம் காண்பித்து மறுநாள் மாலையில் பிடுங்கித் தண்ணீரில் இந்த மூலிகைக் கொடியை நசுக்கிக் கசக்கிக் கலக்கி மிருகங்களுக்கு வைத்தால் மிருகங்கள் குடித்து விட்டு இறந்து விடும். இந்த முறைகளை மக்களுக்குத் தொந்தரவும், ஆபத்தையும் விளைவிக்கக் கூடிய துஷ்ட, கொடிய மிருகங்களுக்கு மட்டும் தான் செய்ய வேண்டும். இதனை நாம் சோதனை செய்து பார்ப்பது நல்லது அல்ல என்பது ஆசிரியர் கருத்து.

# கண்டமாலை, மூல பவுத்திரம், தீராத புண்களுக்கு மருந்து

**பாடல் எண் : 55**

கொடிவேலி சித்திர நட்சத்திரத்தில் காப்புக்
கட்டி சோதி நட்சத்திரத்தில் பிடுங்கவும் அக்கினி
ரூபி, அதிக சுவாலி நமா வென்று பிடுங்கி
பாலிலே
அரைத்துக் குடிக்க கண்டமாலை மூலப்
பவுத்திரம்
தீரும் தீராத ரணங்களெல்லாம் தீந்துபோம்.

**விளக்கம் :**

கொடிவேலி என்பது மருந்து மூலிகைகளிலே மிக உயர்ந்த மூலிகையாகும். இந்த மூலிகைக்கு ருத்திர மூலம் என்றும், சித்திர மூலம் என்றும் அழைக்கலாம். இந்த மூலிகை குத்தாக கொடியாக வளரும். இப்படிப்பட்ட கொடிவேலி மூலிகைக்குச் சித்திர நட்சத்திரத்தில் காப்புக் கட்டித் தீப தூபம் காண்பித்து சுவாதி நட்சத்திரத்தில் அக்கினிரூபி அதிக சுவாலி நமா வென்ற மந்திரத்தைச் சொல்லி வேருடன் பிடுங்கி இந்த வேரில் மேல் உள்ள பட்டைகளில் சிறிதளவு எடுத்து பசும் பாலில் அரைத்துக் கலக்கிக் குடிக்கவும். இந்த மேற்கண்ட வியாதிகள் உள்ளவர்கள் மட்டும் தான் உபயோகம் செய்ய வேண்டும். இந்தப் பட்டையின் குணம் தனி-யாகப் பட்டையை அரைத்து மேல் தடவினால் தடவின இடம் புண்ணாகிவிடும். அப்படிப்பட்ட கொடி வேலி மூலிகை ஆகும். இதற்கு மாத்து சிறிதளவு சுண்ணாம்பு இத்துடன் சேர்த்து அரைத்துக் கொண்டு கரையாத கட்டிகளுக்கு மேல் தடவினால் கட்டி மாயமாக மறைந்து விடும். இதுவே கொடி வேலியின் சிறப்பு அம்சமாகும்.

# சில் விஷக் கடிக்கும், தேள் கடிக்கும் மந்திரம்

**பாடல் எண் : 56**

நச்சுப்புல்லு வேரை னாயத்துக் கிளமை னாள் காப்புக்
கட்டி விஷகிரி விஷகிரி என்று பிடுங்கிக் குளிசமாடி
வச்சுக் கொண்டு சில விஷம் பனிரெண்டும் தேள்
கொட்டினால் தலையிலேயிருந்து முத்தால முக்காலிந்த
வேரைத் தடவக் கொட்டுவாய்க் கடுப்புள்படி நிற்கும்
சில விஷ மாரணம்.

**விளக்கம் :**

ஞாயிற்றுக் கிழமை நாளில் நச்சுப்புல் வேருக்குக் காப்புக் கட்டித் தீப தூபம் காண்பித்து விஷகிரி, விஷகிரி என்று 108 முறை மந்திரத்தைச் சொல்லிப் பிடுங்கிக் குளிசமாடி வைத்துக் கொண்டு சில் விஷம் (சிறு விஷக்கடி பனிரெண்டுக்கும்) தலையிலிருந்து உள்ளங்கால் வரை இந்த வேரை ஒன்பது முறை மேற் சொன்ன மந்திரத்தைச் சொல்லித் தடவி விட்டால் விஷம் இறங்கி விடும். தேள் கொட்டி (தேள் கடித்து) கொட்டுவாய் (கடித்த இடத்தில்) இந்த வேரை ஒன்பது முறை தடவினால் வலி நிற்கும். விஷமும் இறங்கி விடும்.

# பேய் அவயமிட்டுக் கொண்டு போகும் வினோதம்

**பாடல் எண் : 57**

மருதணி மரத்தில் கிரானந் தொட்டு யிருக்குற போது காப்புக்
கட்டி கிரகணம் விடுகிறபோது வெட்டி விழ காட்டி கண்ட

துண்டமாக நறுக்கி உலத்திப் புதுப் பானையிலடைத்துத் தயிலம்

வடித்து அந்த தயிலத்துக்குத் தூப தீபம் கொடுத்து லவுரகரி முரகரி

சுவாகா உம்பட்டு என்று பன்னீராயிரம் உரு ஜெபித்து யிந்த

தயிலத்துக்கு பெலி கொடுத்துச் சுத்தமான தலத்தில் வய்த்து

யர்தா மொருவருக்கும் பேய் பிடித்து வந்தால் அவர்களுக்குப்

பார்க்க வேணுமென்றால் நெத்தியிலே திலதமிட்டுக் கொண்டு

அந்தப் பிசாசு எதிராய்க் குறித்துப் பார்த்துக் கொண்டு யிருக்க

பேர்போன போனென்று அவய மிட்டுக் கொண்டு போம்.

**விளக்கம் :**

கிரகணம் பிடித்திருக்கும் சமயத்தில் மருதாணி மரத்திற்குக் காப்புக் கட்டி. கிரகணம் விடுகிறபோது இந்தக் காப்பு கட்டிய மருதாணி மரத்தை வெட்டிக் கீழே சாய்த்து சிறிய துண்டுகளாக வெட்டி நிழலில் உலர்த்தி (காய வைத்து) புது பானையில் போட்டு மேல் மூடியிட்டு சீலை மண் செய்து (காற்றுப் போகாத அளவுக்கு நன்றாக மூடி குழித்தைலம் இறக்கி (செய்து) ஒரு பாத்திரத்தில் தைலத்தை வடித்து எடுத்துக் கொண்டு இதற்கு தீப தூபம் காண்பித்து லவுரகரி முரகரி சுவாகா உம்பட்டு என்ற மந்திரத்தைப் பன்னிரெண்டாயிரம் முறை ஜெபித்து இந்தத் தைலத்தை நல்ல சுத்தமான மூடி போட்ட பாட்டிலில் போட்டு வைத்துக் கொண்டு

யாருக்காவது பிசாசுபிடித்திருந்தால் அவர்களுக்குப்பேய் போக்கு வதற்கு நெற்றியில் இந்தத் தைலத்தைத் திலகமிட்டுக் கொண்டு பேய் பிடித்தவர்களை நெற்றியில் வைத்த திலகத்தை உன்னிப் பாகப் பார்க்கச் சொன்னால் பேய் அவயமிட்டுக் கொண்டு போகும்

# மேக சொரிகளுக்கு மருந்து எண்ணெய்

**பாடல் எண் : 58**

தேங்காய் நெயிட்டி ஒண்ணு குங்குமப்பூ விராகனிடை
கோரோசினை விராகனிடைச் சாதிக்காய் விராகனிடை
சாதிபத்திரி விராகனிடை அதிமதுரம், விராகனிடைச்
செங்கழுநீர்க்
கிழங்கு விறாகனிடை, கஸ்தூரி பணவிடை யிது
வெல்லாம்
பண்ணித் தேங்காய் நெய்யில் கலந்து காய்ச்சிப் பூசவும்.

**விளக்கம் ;**

மேக சொரி ரோக படலம் மற்ற தோல் சம்பந்தமான படை இவைகளுக்கு நிவர்த்தி எண்ணெய் மருந்து.

## தேவைப்படும் மருந்து வகைகள்

| | | | | கிராம் எடை |
|---|---|---|---|---|
| 1. | நன்றாக் முற்றிய தேங்காய் | | (1) | 54.2 |
| 2. | குங்குமப்பூ விராகனிடை | | (1) | 4.2 |
| 3. | கோரோசினை | விராகனிடை | (1) | 4.2 |
| 4. | சாதிக்காய் | ,, | (1) | 4.2 |
| 5. | சாதிபத்திரி | ,, | (1) | 4.2 |
| 6. | அதிமதுரம் | ,, | (1) | 4.2 |
| 7. | செங்கழுநீர்க்கிழங்கு | ,, | (1) | 4.2 |
| 8. | கஸ்த்தூரி | பணவிடை | (1) | 488 மி.கி. |

இவைகளை நன்றாக இடித்துப் பொடி செய்து 4 லிட்டர் தண்ணீர் ஒரு பானையில் ஊற்றி அதில் இந்த மருந்துப் பொடி-களைப்போட்டு, அத்துடன் தேங்காயை நன்றாகத் திருகி போட்டு நன்றாகக் காய்ச்சி எண்ணெய் பக்குவம் வந்த பிறகு இறக்கி ஆறின பிறகு வடித்து வைத்துக் கொள்ளவும்.

**தீரும் வியாதிகள் :**

மேக சொரி. அதிக உஷ்ணம் தீரும்.

**எண்ணெய் சாப்பிடும் அளவு :-**

தினம் 1 வேளை உள்ளங்கையளவு

**எண்ணெய் சாப்பிடும் காலம் :-**

4 நாட்கள்.

# பாம்பு கடித்து உயிர் போகும் நிலையில் இருந்தாலும் பிழைக்க வைக்கும் வினோதம்

**பாடல் எண் : 59**

அன்பது சங்கம்பழம், அன்பது சுக்கு, தேனு கடுகு
காசாடை கலை வெள்ளுள்ளி பல்லு
மூப்பது..................ன்பு
ஒரு பிடி இது சேர நன்றாயரைத்து உண்டை செய்து
நிழலுணத்தி வைத்துக் கொள்ளவும், பாம்பு
கடித்தால்
உயிர் போனாலும் சவத்துக்கு ஒரு கண்ணிலும் ஒரு
னாசியிலும் விட்டு ஒன்னரை நாழிகை
பார்த்திருந்தால்
ஒரு கண் மிழிக்கும் ஒரு னாசி காத்துப் பரியும் இனி
நீங்கள் பாருங்கோளென்று போனால் உபசரித்தால்
மருனாசியிலும், கண்ணிலுமிடவும் உயிர் வரும்.

## விளக்கம் :

யாருக்காவது விஷப் பாம்பு கடித்து உயிர் போனது போல் இருக்கும் நிலையில் இந்த உடல் மீது ஒரு குச்சியால் ஓங்கி எந்த பாகத்திலாவது அடித்தால், அடித்த இடத்தில் அந்தக் குச்சியின் தழும்பு தடித்து காணப்படும். இப்படி இருந்தால் விஷப் பாம்பு கடித்து விஷம் அதிகமாகிப்பரவி உயிர் பிரிந்தும் உடலில் உள்ள ஜீவன்கள் இன்னும் இறக்கவில்லை என்பதை மேற் சொன்ன சோதனையின் மூலம் அறியலாம். இப்படிப் பட்ட சவத்திற்குக்கீழ்க் கண்ட முறையில் சிகிச்சை செய்து மீண்டும் பிழைக்க வைக்கலாம்.

## தேவைப்படும் மருந்துகள்

| | | |
|---|---|---|
| 1. | சங்கம்பழம் | ஐம்பது பழம் |
| 2. | சுக்கு | 3.5 கிராம் எடை |
| 3. | கடுகு | 165 மில்லி கி. எடை |
| 4. | வெள்ளுள்ளி | 30 பல்லு (30 இதழ்) |
| 5. | பூண்டு | ஒரு கைப்பிடி அளவு |

இவைகள் அனைத்தையும் நன்றாக அரைத்து உருண்டை செய்து நிழலில் உணர்த்தி வைத்துக் கொள்ளவும். பாம்பு கடித்து மேற் சொன்ன குறிகுணங்கள் உள்ள உடலுக்கு ஒரு கண்ணிலும், ஒரு மூக்கிலும் மேலே செய்து வைத்துள்ள மருந்து உருண்டையைத் தண்ணீர் விட்டு உரைத்து மூன்றுசொட்டு வீதம் விடவும். பிறகு ஒண்ணரை மணி நேரம் கழித்துப் பார்த்தால் மருந்து விட்ட கண்ணும் மூக்கும் இவைகளிலிருந்து சற்று உணர்வுகள் தெரியும் (அதாவது கண் இமைக்கும் மூக்கிலிருந்து காற்று லேசாக வரும்) இப்படிக் காணப்பட்டால் உடன் மறு கண்ணுக்கும் மறு மூக்குக்கும் மேற் சொன்ன மாதிரியே மருந்தை தண்ணீரில் உரைத்து மூன்று சொட்டு விடவும். அடுத்த ஒண்ணரை மணி நேரத்துக்குள்ளாக எல்லா அவயங்களும் அசைவு கொடுக்கும். அசைவு கொடுத்து போன உயிர் மீண்டும் வந்து விடும்.

# நூலினால் இரும்புத்துண்டு அறுக்கும் வித்தை

**பாடல் எண் : 60**

இறுபருக்க பீங்கானோடு பொடி செய்து ஊமத்தைச்
சாத்தில் விட்டு வைத்து மூணு கிழை திரிச்சுத்
தோச்சு இரும்பு அறுக்கவும்.

**விளக்கம் :**

பீங்கான் ஓடுகளை நன்றாகப் பொடி செய்து துணி கொண்டு வடிகட்டி இத்துடன் ஊமத்தைச் சாறுவிட்டுக் கலந்து இதில் மூன்று இழை நூலை இதில் நனைத்து ஊறவைத்துச் சற்று நேரம்கழித்து வெயிலில் காய வைத்துக்கொண்டு மற்றவர்கள் கண்முன் இந்த நூலைக் கொண்டு இரும்புத்துண்டை அறுக்கின்றேன் என்று சொல்லி அறுத்துக் காண்பிப்பதற்காக இது ஒரு வித்தையாக அக் காலத்துச் சித்தர்கள் சுவடிகளில் எழுதி வைத்துள்ளார்கள். ஏன் இப்படி எழுதி வைத்திருக்கிறார்கள் என்பதை ஆராயும் போது வல்லவனுக்குப் புல்லும் ஆயுதம் என்ற பழமொழி போன்றவை களில் இதுவும் ஒன்றாகும்.

# தண்ணீரில் விளக்கு எரியும் விநோதம்

**பாடல் எண் : 61**

தண்ணீர் வாத்து விளக்கேத்தவும்.-
அத்திப்பாலில் மெல்லிய சீலையிலே னார்ஞட்டி
திரியாகத் திரிச்சு விளக்கேத்தவும்.

**விளக்கம் :**

அத்திப்பாலில் மெல்லிய துணி திரியை நனைத்து விளக்கில் போட்டு தண்ணீர் ஊற்றி இந்தத் திரியைக் கொளுத்தினால் எரியும். மற்றவர் கண்களுக்கு விளக்கு தண்ணீரில் எரிகிற மாதிரி இருக்கும். இது ஒரு விந்தையான செயல் ஆகும். மேலும் இந்த விளக்கு ஏற்றிய தண்ணீருடன் ஆட்டு மூத்திரத்தைக் கலந்து தண்டில் பூசி புணர்ந்தால் நல்ல போகம் ஆகும். நீண்ட நேரம் உணர்ச்சிகள் இருக்கும். புணர்ச்சி செய்யும் போது அதிகமான சக்தியும் கிடைக்கும்.

## போகமாம்

**பாடல் எண் : 62**

ஊமத்தையைச் சுட்டு எண்ணெயில் பாம்புத் தோலில்
பூசி நனைச்சு நெருப்பில் போட்டு அந்தப் பொகையில்
எலுமிச்சம்பழ மாவது பூச சென்றாவ டிச்சு
சிறியாள கய்யிற் குடுக்க வருவாள் முகந்தாற்
போகமாம்.

**விளக்கம் :**

ஊமத்தையின் சமூலத்தைச் சுட்டு சாம்பலை பாம்புத் தோலில் எண்ணெயைப் பூசி நனைத்து நெருப்பில் வாட்டி அந்தப் புகையில் எலுமிச்சம் பழத்தைக் காண்பித்து இந்த எலுமிச்சம் பழத்தைக் கையில் கொடுத்தால் மனதைக் கொடுக்க முன்வருவாள். இந்தப் புகையை வாசனை பிடித்தால் போகம் அதிகமாகும்.

# போகம் அதிகரிக்கச் செய்யும் மருந்து

**பாடல் எண் : 63**

முறளக் கிளிஞ்சியை பிட்டு அதிலே வெண்காரம்
பொரிச்சுப் போட்டு வய்க்க சாறம் விழும்.
அதை சிமிளிலடைத்து வச்சுக் கொண்டு அரசம்பால்
வாத்துக் கொழப்பி வெத்திலையில் தடவி மடிச்சி
குடுக்கப் போக முத்தும்.

**விளக்கம் :**

கடல், குளம், குட்டை இவைகளில் கிளிஞ்சிப்பூச்சி வகைகள் உயிர் வாழ்கின்றன. இந்தக் கிளிஞ்சிப் பூச்சிகளில் பலவகை உண்டு. அந்த வகைகளில் ஒன்றான முறளக் கிளிஞ்சியைக் கொண்டு வந்து அதனைத் திறந்து இதில் வெண்காரத்தைப் பொரித்துப்போட்டு வைக்கவும். சற்று நேரம் கழித்து இதிலிருந்து சாரம் வரும். இதனை மூடி போட்ட நல்ல டப்பியில் அடைத்து வைத்துக்கொண்டு இதில் சிறிதளவு எடுத்து அரசம்பால் கலந்து வெத்திலையில் தடவி மென்று தின்றால் போகம் அதிகரிக்கும். காம உணர்ச்சிகள் அதிகமாக இருக்கும். நரம்பு தளர்ச்சிக்கும் நல்ல மருந்து.

# புணர்வதற்கு மை செய்யும் முறை

**பாடல் எண் : 64**

எருக்க மயில வினாயக பூசை பண்ணி புரந்த
கோலத்துடனே
நின்று கொழுந்து யெல்லாங் கிள்ளி கசக்கிச் சாறு
சீலையி
லூட்டித் திரி யாக திரிச்சி நிழலுணத்தி
நல்லெண்ணையில்
உளர எடுத்துப் பூசிப் புணரவும்.

**விளக்கம் :**

எருக்க மயிலை செடிக்கு, விநாயக பூசை (கணபதி பூஜை) செய்து பிறந்த கோலத்துடன் (நிர்வாணமாக) நின்று கொண்டு இந்தச் செடியின் கொழுந்து இலைகளை எல்லாம் பறித்துக் கையினால் கசக்கிச் சாறு எடுத்து இதில் துணி நூலைக்கொண்டு நனைத்துத் திரியாகத் திரிச்சு நிழலில் காயவைத்து, நல்லெண்ணெய்யில் உலர எடுத்துப்பூசிப் புணரவும். உணர்ச்சிகள் அதிகமாக இருக்கும்.

# நீர் முள்ளி விதையின் விநோதம்

## பாடல் எண் : 65

*நீர்முள்ளி அரிசினையப் பொடி செய்து தண்ணீரிலொக்கக் கலந்து செக்கிலிட எண்ணெய் சுவறும் காணாது குசவன் சூளையில் போட வேகாது கொல்லன் உலையிட இரும்பு வேகாது.*

**விளக்கம் :**

1. நீர் முள்ளிச்செடியின் விதையை நன்றாகப்பொடி செய்து தண்ணீரில் கரைத்து எண்ணெய் ஆட்டும் செக்கில் இதைக் கொஞ்சம் ஊற்றினால் எண்ணெய் வற்றிப்போகும். இது ஒரு விந்தையாகும்.

2. மண்பாண்ட செய்யும் குயவன் சூளையில் இந்த நீர் முள்ளிப் பொடி கலந்த தண்ணீரை ஊற்றினால் சூளையில் வைத்த மண்பாண்டங்கள் வேகாது.

3. இரும்பு அடிக்கும் கொல்லன் உலையில் நீர் முள்ளிப் பொடியைத் தண்ணீரில் கரைத்து ஊற்றினால் உலையில் வைத்த இரும்பு வேகாது. (பழுக்காது) இவைகள் யாவும் இந்த நீர் முள்ளி விதையின் மகிமைகளை எடுத்துச் சொல்கிறது.

# ஆகாச வினோதம்

## பாடல் எண் : 66

கருனாய்க் குட்டி யிட்டவுடனே தொப்புளறுத்து
உலத்திப்
பொடி செய்து செம்பிலாவது, வெள்ளியிலாவது
அடைத்து
கயிலிட்டு எலுமிச்சங்காவை யெறிந்து கையையெந்த
கையில் விழாது நிற்கும் பின்னை யெதை யெறிந்தாலும்
நிற்கும் அரையில் கட்டி முன்னேயிருக்க போகியாது
பின்னே யிழுத்தால் போகமாம்.

### விளக்கம் :

கருப்பு நிற நாய் குட்டி போட்டவுடன் அந்தக் குட்டியின் தொப்புள் கொடியை அறுத்துக் காய வைத்துப் பொடி செய்து செம்பிலாவது அல்லது வெள்ளியிலாவது தாயத்து செய்து இந்த தாயத்தில் இந்தப் பொடியைப் போட்டு மூடிக் கையில் கட்டிக் கொள்ளவும். எலுமிச்சங்காயை எறிந்து கையை எந்த கையில் விழாது நிற்கும். பின்னை எதை எறிந்தாலும் நிற்கும் அரையில் கட்டி முன்னேயிருக்க போகியாது. பின்னே இழுத்தால் போகமாம்.

# நஞ்சுக்கு (விஷக்கடிக்கு) தண்ணீர் ஓத மந்திரம்

## பாடல் எண் : 67

கருவிலை நஞ்சிரத்தில் கருக்குவாய், எருக்குல்லை சுட்டி;
ஓடு கர்பு கழுதை விண்டு மண்சோறு மங்கை நலராதான்

உண்டு மயங்கிக் கிடக்குறான் எங்குறலைக் கெட்டு இருளை
இருள் கொள்ள இந்திரன் தன் வண்டு கொல்ல மயில்
புனங்காத்திருந்த வெடுவீச்ச மகனே, நஞ்சு இல்லை,
நஞ்சுண்ட கண்டர்க்கு நஞ்சு அமுதமாம் சிவாக
ஆகா என்றி
என்னுயிர்க் காத வழி எழுகிற ஆதித்தனை அனுமரார்
கனியன்று
பாஞ்சாப் போலோ இன்னார் பேரில் நஞ்சு, இன்னார்
போலப்
பாய் சுவாக

**விளக்கம் :**

இந்த மந்திரத்தை ஒன்பது தடவை சொல்லி ஓதி இந்தத் தண்ணீரை உட்கொள்ளவும். நஞ்சு விஷக்கடிக்கு நல்லது. குணம் ஆகும்.

# முச்சுப்பிடிப்புக்கு மந்திரம்

**பாடல் எண் : 68**

ஓம் ஆதாரம் வரவர அவத்து வாவாசி பத்து
வரவர சேர் உயிர்ப் பிராணி வரவர ஆதிவிந்து
அனுதி விந்து சுக்கில விந்து சந்திர விந்து சதா
கொடி விந்து நிமி ஒப்பாவாற் உருவவர ஆமசத்தி ஓடி
வர ஓங்காளி ஓம்பிடாரி ஓம் நமசிவாய நம ஓம்
றாத எருதுக்கு எந்திரம் ஹூலன

**விளக்கம் :**

உடம்பில் சில பாகங்களைத் தவறான திசைகளில் திருப்பினாலோ வாய்வு என்ற காற்று அழுக்கம் சில இடங்களில் அசையாது நின்று விட்டால் இந்த பாகத்தில் வலியுடன் கூடிய இழுக்கிற மாதிரி இருக்கும். இதைதான் நாம் மூச்சுப்பிடிப்பு என்று சொல்கிறோம். இது நிவர்த்திக்கு மேற்சொன்ன மந்திரத்தை ஒன்பது தடவை ஜெபித்து மூச்சுப்பிடித்த பாகத்தின் மேல் கையால்தடவினால் மூச்சுப்பிடிப்பு நீங்கும். மனிதர்களுக்கு மூச்சுப் பிடிப்பது போல் கால்நடைகளுக்கும் இது மாதிரி மூச்சுப்பிடிப்பு ஏற்படுவதும் உண்டு. இதன் நிவர்த்திக்கு இந்த ஷ்ன எந்திரத் தை எழுதி மேற் சொன்ன மந்திரத்தை ஒன்பது தடவை சொல்லி ஜெபித்தால் நிவர்த்தி ஆகும்.

# தலைமயிர் கறுக்க வைக்கும் வினோதம்

**பாடல் எண் : 69**

நெல்லி முள்ளி சதிபாலில் ஊற வைத்துக்கொண்டு
எண்ணெயிட்டு முளுகுகிறபோது அரப்பாக அரைத்து
முழுகத் தலை நரைக்கு மாத்து பொன் பருத்தியிலைச்
சாறு தயிலத் தேச்சு முழுகவு கறுப்பாம்.

**விளக்கம் :**

நெல்லி முள்ளி விதையை சதிபாலில் ஊற வைத்து அரைத்து எண்ணெய் தேய்த்து தலை முழுகும்போது, இதனை அரப்பாக பயன்படுத்தித் தலை முழுகவும். நரைத்த முடியைமாற்றும் பொன் பருத்தி இலைச் சாற்றைத் தினமும் தலைக்குத் தேய்த்து முழுகி வந்தால் நரை முடியும் கறுப்பாகும். இது ஒரு விந்தையாகும். மேலும் இந்த நெல்லி முள்ளியின் மகிமைக்காகச் சொல்லப்பட்டு உள்ளது.

# விஷம் போக முகமதியர் மந்திரம்

**பாடல் எண் : 70**

அல்லா எறுத்து அச்கி டொக்குந் தரயுபிக்கு
சுபிக்குனா கித்தி வரு விஷம் சரிச் சரிப் பகிப்
பகி விஷ விஷ நகி நகி யோ யோ விஷம்.

**விளக்கம் :**

இந்த மந்திரம் விஷக்கடிகளுக்கு முகமதியர்கள் ஓதும் மந்திரம் இந்த மந்திரத்தைச் சுமார் 108 தடவை சொல்லி ஜெபித்தால் சில, விஷக்கடிகளுக்கு நல்ல பலன்களைக் கொடுக்கும்.

# குஷ்ட வியாதிக்கு

**பாடல் எண் : 71**

அகில் பட்டை, புங்கம்பட்டை, தேவதாரம், வேப்பம்
பட்டை, வில்வப்பட்டை, கடுக்காய், வெட்டிக் கொட்டி
விளாம்பட்டை யிந்த மட்டும் சமன் கூட்டிப் பானையில் விட்டு
மெழுகிட்டு தைலம் இறக்கி, பதமாகப் பண்ணி, வெது வெது
குஷ்டம் பதினெட்டும் ஒரு மண்டலம் சாப்பிடக் குஷ்ட வியாதி தீரும்.

**விளக்கம் :**

குஷ்ட வியாதி பதினெட்டு வகைகள் உண்டு. இவைகளில் சில குறிப்பிட்ட குஷ்ட வியாதிகளைப் பற்றி அவற்றின் அறிகுறி களைப் பற்றிக் கீழே கொடுக்கப்பட்டுள்ளது.

## 1. வெண் குஷ்டம்: குறி குணம்:

தேகத்தில் வட்டம் வட்டமாக வெள்ளை விழுந்து உடல் முழுவதும் பரவிச் சற்றுத் தோல் தடித்து அதிகமாய்ப் படர்ந்து அசறு உண்டாகி உதிர்ந்து கொண்டு இருக்கும். இப்படி இருந்தால் வெண் குஷ்டம் என்று பெயர்.

## 2. செங்குஷ்டம்: குறி குணம்:

தேகத்தில் (உடம்பில்) செந்நிறமாய் வட்ட வட்டமாக விழுந்து பரிசமற்றிருக்கும். இதைச் செங் குஷ்டம் என்று சொல்லலாம்.

## 3. கருங்குஷ்டம்: குறி குணம்:

முழங்கால், மூக்கு, இமையின் அடியில் பரிசமற்றுக் கருமையாகத் தோன்றிப் படரும் தேகமாதியந்தமும், தீப்போல்காந்தும், தினவெடுக்கும், சரம் பற்பொடி போல் அதிகம் உதிரும், தாது வற்றும். இந்த அறிகுறிகள் காணப்பட்டால் இதற்குக் கருங்-குஷ்டம் என்று பெயர்.

## 4. பெரு வியாதி: (குஷ்டம்) குறி குணம்:

உடல் சிவந்து திமிர்த்துப்பரிசற்று மூக்கு, இமையினடி, காது தடித்து, கை, கால் குறுகி வெடித்து, புண்ணாகி வெடி நாறும், முகம் வியர்க்கும், நாசி அடைக்கும், காது வழி சீ ஒழுகும், சுவை கெடும். இதனைத்தான் பெரும் வியாதி குஷ்டம் என்று சொல்வார்கள்.

## இந்த வியாதிக்குத் தேவைப்படும் மருந்துகள்:

| | | | |
|---|---|---|---|
| அகில் பட்டை | — | 100 | கிராம் எடை |
| புங்கன் பட்டை | — | 100 | ,, |
| தேவதாரம் | — | 100 | ,, |
| வேப்பம் பட்டை | — | 100 | ,, |

| | | | |
|---|---|---|---|
| வில்வப் பட்டை | — | 100 | கிராம் எடை |
| கடுக்காய் | — | 100 | ,, |
| எட்டிக்கொட்டை | — | 100 | ,, |
| விளாம் பட்டை | — | 100 | ,, |

**மருந்து செய்யும் விதம் :**

மேற்கண்ட மருந்துகளைச் சமனெடை எடுத்துக் காய வைத்து இடித்துத் தூள் செய்து ஒரு புதுப் பானையில் போட்டு நன்றாக மூடிச் சீலை மண் செய்து காய வைத்து இந்தப் பானையின் அடியில் ஒரு சிறு துவாரம் செய்து விராட்டியைக் கொண்டு எரித்துக் குழித் தைலமாக இறக்கி இந்தத் தைலத்தை ஒரு பாட்டிலில் பத்திரமாக வைத்துக் கொள்ளவும்.

**மருந்து சாப்பிடும் முறை :**

தினம் ஒரு வேளை அளவு: 5 கிராம் எடை.

**பத்தியம் :**

புளி, புகை, மதுபானம், சில அசைவ உணவுகள் நீக்கவும்.

**தீரும் வியாதிகள் :**

குஷ்டம் பதினெட்டும் குணம் ஆகும். மேலும் இந்த மருந்து சாப்பிடும்போது உடல் உறவு இருக்கக்கூடாது.

# காமாலைக்கும், மாலைக்கண்ணுக்கும் மருந்து

**பாடல் எண் : 72**

**பெருங்காயம், வாழைப் பழத்தில் விட்டு மிழுங்கக்**
**காமாலைக் கண் தீரும்.**

கல்லுப்பு வெள்ளெருக்கம்பூ, சுக்கு இவை மூன்றும்
தண்ணீரிலொக்கக் கொண்டு முலைப்பால்
வார்த்தரைத்து
உண்டை பண்ணி உலத்தி வைத்துக் கொண்டு
ஏழு பொழுது
கண்ணிலிடக் காமாலை தீரும்.

## விளக்கம் :

காமாலையில் பல வகைகள் உண்டு. கீழே கொடுக்கப் பட்டுள்ளது.

1) காமாலை 2) வறக்காமாலை 3) வாத காமாலை 4) பித்த காமாலை 5) சிலேத்தும காமாலை 6) மஞ்சள் காமாலை இவைகள் ஒவ்வொன்றின் குறி குணங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன.

## 1. காமாலை குறி குணம் :

உடல் அரைத்துப் புண்போல் நொந்து, கண்கள் வெளுத்து, நா உலர்ந்து, வயிறு பொருமிக் கழிந்து, நீர் மஞ்சள் நிறமாய் இறங்கி, தாகம், மூர்ச்சை, அசதி கண்டால் காமாலை என்று சொல்லலாம்.

## 2. வறக்காமாலை : குறி குணம் :

உடல் வறண்டு, முகம் மதைத்து விழி, நகம் வெளுத்து, தாதுகெட்டு பலம் குறைந்து நடக்க முடியாது களைப்பு, இளைப்பு, கை கால் அசதி நித்திரை இல்லாமலும் அன்னம் செல்லாது (பசியின்மை) இந்தக் குறி குணங்கள் இருந்தால் இதற்கு வறக் காமாலை என்று பெயர்.

### 3. வாத காமாலை குறி குணம் :

எப்போதும் தேகம் உலர்ந்து, கடுத்து, வலித்து கண் வெளுப்பாகவும், மூலத்தில் அக்கினி மந்தித்து அன்னம் சாப்பிட முடியாமலும், கை கால்கள் சோர்ந்து பலம் கெட்டு அயர்ந்து, புறங்கால் அதைத்து, மலம் கட்டி, வயிறு பொருமி, ஆயாசம், களைப்பு உண்டானால் வாத காமாலை என்று சொல்லப்படும்.

### 4. பித்த காமாலை குறி குணம் :

தேகம் வறண்டு, வெளுத்து, முகம் கனத்து, கை, கால், தீப் போல் காந்தி, செருமலெடுத்து விழுநீர் மண் சளித்து அன்னம் ஜீரணம் ஆகாது. வயிறு பொருக்கழித்து வாந்தி, கிறுகிறுப்பு அசதி கண்டால் பித்த காமாலை என்று பெயர்.

### 5. சிலேத்தும காமாலை குறி குணம் :

தலை, மூக்கு, முகம், வியர்த்து உடல் நடுங்கி நாக்கு கண் நீர் வெளுத்து முழி வீங்கி இருமல் விக்கல் எடுத்து நித்திரை (தூக்கம்) கெட்டு நடந்தால் மேல் மூச்சு ஏற்பட்டு இளைப்பு இவைகளுடன் இருந்தால் இதற்குச் சிலேத்தும காமாலை என்று பெயர்.

### 6. மஞ்சட் காமாலை குறி குணம் :

உடலில் அதிகமான உஷ்ணம் அதிகரித்து உணவு சாப்பிட முடியாமல் கண் மலர், சிறுநீர் இவைகள் மஞ்சள் நிறமாகி இருந்தால் இதற்கு மஞ்சள் காமாலை என்று சொல்வார்கள். இது அதிக அளவிற்கு உடம்பில் உள்ள இரத்தத்தைக் கெடுத்து விட்டால் இரத்தம் விஷத் தன்மையாகி உடம்பெல்லாம் மஞ்சள் நிறமாகி, அரிப்பு ஏற்பட்டு, உடம்பிலுள்ள முக்கியமான அவயவங்களைக் கெடுத்து உயிருக்கு ஆபத்து வரக்கூடும். இது பயங்கர வியாதிகளில் ஒன்றாகும்.

**காமாலைக்கும், மாலைக்கண்ணுக்கும் மருந்து:**

நல்ல பெருங்காயத்தை ஒரு சிறு துண்டெடுத்து வாழைப் பழத்தில் வைத்துத் தினம் ஒரு வேளை வீதம் ஆறு நாள்கள் சாப்பிட்டால் காமாலை குணமாகும்.

கல்லுப்பும், வெள்ளெருக்கம் பூ, சுக்கு, இவைகளைச் சம னெடை எடுத்து இந்த மூன்றையும் தண்ணீர் விட்டுச் சுத்தம் செய்து விட்டு முலைப்பால் விட்டு நன்றாக அரைத்து உருண்டை செய்து காய வைத்துக் கொண்டு ஏழு நாள்களுக்கு முலைப்பால் விட்டு உரைத்து மூன்று சொட்டுகள் வீதம் கண்களில் விட்டால் காமாலை தீரும்.

**மஞ்சட் காமாலைக்கு மருந்து:**

கீழாநெல்லி வேரைப் பசும்பால் விட்டு அரைத்துத் தினம் இரண்டு வேளை வீதம் ஆறு நாள்கள் சாப்பிட்டு வரவும்.

**பத்தியம்:**

எண்ணெய், நெய்ப் பதார்த்தங்கள் நீக்கி இத்துடன் அசைவ உணவு நீக்கவும். மோர் சாதம் மட்டும் சாப்பிடவும். சாத்துக்குடி பழச்சாறு அதிகமாகக் கொடுக்கவும்.

# இருமலுக்கு மருந்து

**பாடல் எண்: 73**

வெள்ளைக் காக்குறட்டான் வேர், சீரகம், சர்க்கரை, காக்குறட்டான் கால் விராகனெடை உரைச்சு நெய் வார்த்து விளக்கேத்தி, விளக்கிலே காச்சிச் சுண்டின பின்பு அரைச்சு அதிலே மூணு மருந்தை உரைச்சுக் கொடுக்கவும். இப்படி மூணு நாள் குடுக்கவும். புளிப்பு, கைப்பு ஆகா.

**விளக்கம் :**

இருமலில் பலவகை உண்டு. அதிகமான உஷ்ணம் மிஞ்சி உடலைத் தாக்கி இருமல் வருகிறது. இந்த இருமல் தனியாகவும், ஜுரத்துடனும், சளியுடனும் வரலாம். இப்படி அதிகமான இருமல் அடிக்கடி வந்தால் தொண்டை வற்றிக் காய்ந்து இரத்தம் கூட வரும்.

**பொதுவான இருமலுக்கு மருந்து :**

| | | எடை |
|---|---|---|
| 1. | வெள்ளைக் காக்குறட்டான் வேர் | ... 10 கிராம் |
| 2. | சீரகம் | ... 5 கிராம் |
| 3. | சர்க்கரை | ... 10 கிராம் |

வெள்ளைக் காக்குறட்டான் வேரையும் சீரகத்தையும் நெய்யில் வறுத்துக் கொண்டு, இடித்து, தூள் ஆக்கிச் சர்க்கரை கலந்து வைத்துக்கொண்டு தினம் இரண்டு வேளை வீதம் 3 நாள் சாப்பிடவும்.

**பத்தியம் :**

புளிப்பு, கசப்பு ஆகாது.

# ஒத்தைத் தலைவலிக்கு

**பாடல் எண் : 74**

**ஒரு தலைவலிக்கு ஒருதலை பூண்டு அரைச்சு**
**மெழுகு உருக வச்சு அதிலே போட்டு வலிச்ச**
**பிறத்திலே போடவும்: ரெண்டு நாழிகையிலே**
**நிற்கும். இது கை கண்டது.**

**விளக்கம் :**

ஒருதலைப் பூண்டு அரைத்து, மெழுகை அனலில் உருக வைத்து இதில் அரைத்த பூண்டைப் போட்டுக் கலக்கி வலிக்கிற இடத்தில் கொஞ்சம் எடுத்துத் தடவினால் சில நிமிடங்களில் தலைவலி நிற்கும். இது கைகண்ட மருந்து. தலைவலி பலகாரணங்களினால் வருகின்றது. அத்தகைய தலைவலிகளில் இது ஒரு தலைவலி. இந்த வலி நெற்றியில் ஒரு பக்கமாக வலிப்பதால், இதற்கு ஒற்றைத் தலைவலி என்று பெயர். கண்கள் பாதிப்பு இருந்தாலும் மலச்சிக்கல் இருந்தாலும் இந்த ஒத்தைத் தலைவலி வரலாம்.

# குளிர் ஜுரத்திற்கு மருந்து

**பாடல் எண் : 75**

தும்பையிலை, ஊமத்தைப்பூ, வெள்ளைப் பூண்டு
பொன்னிறமாக
வறுத்து, பூண்டு கருதில் குத்தி அனல் காச்சி
அம்மியில அரைச்சி
மூணுண்டை பண்ணி ஒருண்டை சாப்பிடவும் தீரும்
மொளகு
சேத்துக் கொள்ளவும் வன்னி வேர் சேத்துக்
கொள்ளவும்
குளிர் சுரம் தீரும்.

**விளக்கம் :**

குளிர் ஜுரம் என்பது மற்ற ஜுரங்களில் ஒன்றாகும். இதன் அறிகுறி உடல் நடுக்கம். அதிக காய்ச்சல், உடல் வலி இவைகள் இருக்கும். இக்காய்ச்சல் பெரும்பாலும் இரவு நேரத்தில்தான் வரும்.

**தேவைப்படும் மருந்துகள் :**

1. தும்பை இலை — ஒரு கைப்பிடி அளவு
2. நல்ல வேளைப்பூ — ஒரு கைப்பிடி அளவு
3. பூண்டு — 10 கிராம்

(இவை யாவும் ஈரப்பதமாக இருக்கவேண்டும்)

**செய்யும் முறை :**

பூண்டை ஒரு கம்பியில் குத்தி அனலில் காண்பித்து (நெருப்பில் சுட்டு) எடுத்துக்கொண்டு மேற்சொன்ன இரண்டு இலைகளையும் சுட்ட பூண்டையும் ஒன்றாகச்சேர்த்து அம்மியில் நன்றாக அரைத்து, மூன்று உருண்டையாகச் செய்து, தினம் ஒரு உருண்டை வீதம் வன்னிவேர்க் கஷாயத்தில் கலந்து மூன்று நாளைக்கு சாப்பிடவும்.

**பத்தியம் :**

மிளகு ரச சாதம் மட்டும் சாப்பிடவும்.

**தீரும் வியாதி :**

குளிர் ஜுரம் (குளிர் காய்ச்சல்)

# இருமலுக்கு கையில் கட்டும் மூலிகையின் விநோதம்

**பாடல் எண் : 76**

மருதாணி வேரை ஆதிவாரனுள் வடக்கே போற வேர்
விசாக நட்சத்திரத்தில் கொண்டு வந்து அந்த வேரை
மூனாய் மடிச்சு முடிஞ்சு மெல்லிய சீலையில் முடிஞ்சு கையிலே
கட்ட மூணு நாளையிலே யிருமல் விட்டுப் போம்.

**விளக்கம் :**

ஞாயிற்றுக்கிழமை நாளில், மருதாணி வேருக்குக் காப்புக் கட்டி இந்த வேரில் வடக்குத் திசை நோக்கிப் போகின்ற வேரை விசாக நட்சத்திரத்தில் கொண்டு வந்து அந்த வேரை மூன்றாக மடித்து கட்டி மெல்லிய துணியில் இத்த வேரை முடிந்து கையிலே கட்டி-னால் மூன்று நாளில் இருமல் விட்டுப்போகும். இருமல் வருவதை யும் தடைசெய்யும். அதாவது இந்த இருமல் கால திசை மாறுகின்ற காரணத்தால் வரும். இருமலுக்கு நல்ல பலனைக் கொடுக்கும்.

# வாழாத பெண்ணை மீண்டும் வாழ வைக்கும் வினோதம்

**பாடல் எண் : 77**

ஒரு தலைப் பூண்டு, அவிரி, சிறிசாய் யிருக்கிற அவிரி வேரை ஆதிவார்ஞள் வேரராமல் பிடுங்கி வந்து ரெண்டையும் நறுக்கி நல்லெண்ணையிலிட்டு கொதிக்க வைத்து அந்த பெண்சாதி தலையிலே மூணுநாள் இட கூடியிருப்பாள்.

**விளக்கம் :**

ஒரு தலைப்பூண்டையும், அவிரி வேர் சிறிசாய் இருக்கிற வேரை ஞாயிற்றுக்கிழமை நாள் அன்று வேரறுகாமல் பிடுங்கிவந்து இதனைச் சிறு துண்டுகளாக நறுக்கி இத்துடன் ஒரு தலைப் பூண்டையும் சேர்த்து 100 கிராம் நல்லெண்ணெயில் கொதிக்கக் காய்ச்சி இது ஆறின பிறகு ஒரு பாத்திரத்தில் எடுத்து வைத்துக் கொண்டு வாழாத பெண் தலையிலே மூன்று நாள் தடவிக் கொண்டு இருந்தால் மீண்டும் கணவருடன் கூடி இருப்பாள். ஒற்றுமையாக இருப்பாள். நம்பிக்கையுடன் செய்யவும்.

# சகல காய்ச்சலுக்கும் மருந்து

## பாடல் எண் : 78

காய்ச்சல் சறுவத்துக்கு:- சாட்டறணை வேர், முடை
கொத்தான் வேர், மௌகு, சுக்கு, அசமதாம்
வெள்ளைப் பூண்டு, ரீகம் யிது வெல்லம் மிள நீரில்
அரைத்துக் குடுக்கவும். பத்தியம் சிறுபயது, கஞ்சி,
காச்சி குடுக்கவும். ஒத்தரயாளி சமூலம், உலத்தி
பொடி செய்து விரல் கடை பிறமானம் நல்லெண்ணையில்
தின்னவும் ஜோவு தீரும்.

## விளக்கம் :

காய்ச்சல் என்பது பலவகைப்படும். குளிர் காய்ச்சல், நடுக்குக் காய்ச்சல், வாத சுரம், பித்த சுரம், பித்தவாதசுரம், சிலேத்தும சுரம், முறைக்காய்ச்சல் (முறை சுரம்) ஆஸ்த்த சுரம் இப்படி உள்ள சுரங்கள் நிவர்த்திக்குக் கீழ்சொன்ன மருந்தைக் கொடுக்கலாம்.

## தேவைப்படும் மருந்துகள் :

| | | எடை |
|---|---|---|
| 1. | சாரணை வேர் (சாட்டாணை வேர்) | ... 10 கிராம் |
| 2. | முடைக்கொத்தான் வேர் | ... 10 கிராம் |
| 3. | மிளகு | ... 5 கிராம் |
| 4. | சுக்கு | ... 5 கிராம் |
| 5. | அதிமதுரம் | ... 5 கிராம் |
| 6. | வெள்ளைப் பூண்டு | ... 5 கிராம் |
| 7. | சீரகம் | ... 5 கிராம் |

**மருந்து செய்யும் முறை :**

மேற்சொன்ன மருந்துகளை மேலே குறிப்பிட்ட அளவுப்படி எடுத்து சுத்தம் செய்து நன்றாகக் காயவைத்து இளம் வெந்நீர் விட்டு எல்லாவற்றையும் அரைத்து மூன்று கிராம் எடைக்கு உருண்டை செய்து நிழலில் காயவைத்து வேளைக்கு ஒரு உருண்டை வீதம் தினம் 2 வேளை வீதம் 5 நாள்களுக்குக் கொடுக்கவும்.

இந்த உருண்டை மருந்து சாப்பிடும்போது உத்தாமணி சமூலத்தின் பொடியில் ஒரு கிராம் வீதம் எடுத்து நல்லெண்ணெய் கலந்து சாப்பிடவும்.

**பத்தியம் :**

சிறு பயறு கஞ்சி வைத்துச் சாப்பிடவும். (பச்சைப் பயறு கஞ்சி)

**தீரும் வியாதிகள் :**

சகல காய்ச்சல்களும் தீரும்.

## காய்ச்சலுடன் கூடிய இருமலுக்கு மருந்து

**பாடல் எண் : 79**

மணத்தக்காளி, ஈர வெங்காயமும் நறுக்கிப்
போடவும். விளக்கெண்ணை, முலைப்பால் ஆவாரை
இலை சரு சமனமாக எடுத்துக் கொடுக்கவும்.

**விளக்கம் :**

உடலில் அதிகமான காய்ச்சல் இருக்கும்போது தொண்டை வற்றிப் புண்போல் இருக்கும். இதனால் தொண்டை கரகரப்பு ஏற்பட்டு இருமல் வரும். தொண்டை வலியும் இருக்கும்.

### தேவைப்படும் மூலிகை மருந்து :

| | | |
|---|---|---|
| மணத்தக்காளி இலை | — | ஒரு கைப்பிடி அளவு |
| ஆவாரை இலை | — | ஒரு கைப்பிடி ,, |
| வெட்டிய சின்னவெங்காயம் | — | ஒரு கைப்பிடி ,, |

### செய்யும் முறை :

மேற்சொன்னவைகளை சுத்தம் செய்து ஒரு புதுச் சட்டியில் போட்டு இத்துடன் தேவைப்படும் அளவிற்கு விளக்கெண்ணெயும் முலைப்பாலும் ஊற்றி அடுப்பில் வைத்து நன்றாக வதக்கி, தினா மூன்று வேளை வீதம் மூன்று நாளைக்கு இப்படியே செய்து சாப்பிடவும்.

### பத்தியம் :

குளிர்ச்சியான பதார்த்தங்களை நீக்கவும்.

### தீரும் வியாதிகள் :

காய்ச்சலுடன் கூடிய இருமல் தீரும். தொண்டை வலியும் தீரும்.

## கடுப்புடன் கூடிய கழிச்சலுக்கு
### (கஷாய மருந்து)

### பாடல் எண் : 80

கடுப்பு கழிச்சலுக்கு வேப்பனாக்கு ஒரு பிடி
கொண்டு வந்து
கையி அடங்கின் மாத்திரம் அறுத்து எடுத்துக்
கொண்டு மூனு
திப்பிலி பத்து சீரம், யிளவ்வரையாக வறுத்துக் கொண்டு,
வேப்பனாக்கு பொன்னிறமாக வறுத்துக் கொண்டு
ரெண்டுப்பு

தண்ணீர் விட்டு காச்சி, திப்பிலி, சீரகம் பொடி செய்து அதை கிஷயாமா யிறுத்துக்கொண்டு அதில் இந்தப் பொடியை போட்டு கலக்கி குடிக்கவும் யிந்தப்படினாலு ஆறு நாள் குடிக்கவும், கடுப்பு கழிச்சல் தீரும்.

**விளக்கம் :**

## கடுப்பு கழிச்சல் வருவதன் காரணம் :

உடம்பில் அதிகமான உஷ்ணம் தாக்கி மூலத்தைப் பாதித்து வலியுடன் கழிச்சல் போகும். அன்னம் செல்லாது. அடிக்கடி மலம் போகும். உடம்பு மெலிந்து போகும்.

## நிவர்த்திக்குத் தேவைப்படும் மருந்துகள் :

| | |
|---|---|
| வேப்ப இலை | — ஒரு கைப்பிடி அளவு |
| திப்பிலி | — 10 கிராம் |
| சீரகம் | — 10 கிராம் |

## மருந்து செய்யும் முறை :

வேப்ப இலையை புதுச் சட்டியில் போட்டு பொன்னிறமாக் வறுத்துக் கொண்டு இத்துடன் இரண்டு லிட்டர் தண்ணீர்விட்டு நன்றாகக் காய்ச்சி 300 மில்லி (முந்நூறு மில்லி) அளவு வரும் வரை சுண்டக் காய்ச்சி வடிகட்டி எடுத்துக்கொண்டு வேளைக்கு இருபத்தைந்து மில்லி (25 மில்லி) அளவுக்கு இந்தக் க்ஷாயத்தை எடுத்து இத்துடன் திப்பிலி, சீரகம் வறுத்துப் பொடி செய்த தூளில் இரண்டு கிராம் எடைக்கு எடுத்துக் கலந்து தினம் இரண்டு வேளை வீதம் ஆறு நாள்கள் சாப்பிடவும்.

**பத்தியம் :**

காரம், இனிப்பு, புளிப்பு, நீக்கம். அரிசிக் கஞ்சி தயிருடன் சேர்த்துச் சாப்பிடவும்.

**தீரும் வியாதி :**

சகல கடுப்பு கழிச்சல் தீரும்.

# அனைத்து ஜன்னிக்கும் மருந்து

**பாடல் எண் : 81**

சறுவ சன்னிக்கு: சாதிலிங்கம், விராகனிடை சாதிக்காய்
விராகனிடை க. யிந்துப்பு விராகனிடை க. சுக்கு விராக
னிடைக. வெங்காரம் விராகனிடை க. திப்பிலி விராகனிடை க.
ஆக மருந்து கூட்டி கஞ்சா சாத்திலரைத்து குண்டுமணி
பிறாமணாம்
உண்டை செய்து நிழலிலுலத்தி வைத்துக் கொண்டு
அதிசாரத்துக்கு
மதுமுள்ள சுரதுக்கு சக்கரையில் மருரிச்சு குடுக்கவும், சர்வ
சுரமுமாலும் தயிரும் சோறும் உண்ணவும் எருணம தயிரும்
கொடுக்கவும்.

**விளக்கம் :**

உடலில் அதிகக் காய்ச்சல் அடித்து அனைத்து நரம்பு மண்டலங்களையும் பாதித்துச் சுய நினைவுகளுடன் எதையும் செய்ய முடியாத நிலை ஏற்படும். குறிப்பாகக் கை, கால், கண் இவைகள் இயக்கமின்றி இருப்பதைத் தான் ஜன்னி என்று சொல்கிறோம்.

இந்த ஜன்னி பதின்மூன்று வகைப்படும்,

1) அசாத்திய ஜன்னி, 2) அந்தக ஜன்னி, 3) சிதாங்க ஜன்னி 4) கண்டகுச்ச ஜன்னி 5) போக்க கேந்திர ஜன்னி 6) அடினியாச ஜன்னி 7) உருத்திரதாக ஜன்னி 8) பீர்த்தட்டி ஜன்னி 9) தாத்திரிக ஜன்னி 10) சித்தி லிப்பிரம ஜன்னி 11) தாந்திரக ஜன்னி 12) பிரளய ஜன்னி 13) கருனியாச ஜன்னி,

## இவைகள் அனைத்திற்கும் மருந்து

### தேவைப்படும் மருந்துகள் :

1. சாதிலிங்கம் — ஒரு விராகனிடை (4.2 கிராம்)
2. ஜாதிக்காய் — ஒரு விராகனிடை ,,
3. இந்துப்பு — ஒரு விராகனிடை ,,
4. சுக்கு — ஒரு விராகனிடை ,,
5. வெங்காயம் — ஒரு விராகனிடை ,,
6. திப்பிலி — ஒரு விராகனிடை ,,

### மருந்து செய்யும் முறை :

இவைகள் அனைத்தையும் கஞ்சா சாற்றில் அரைத்து 130 மில்லி கிராம் எடை வீதம் (ஒரு குண்டுமணி) உருண்டை செய்து இந்த உருண்டைகளை நிழலில் காயவைத்துப் பத்திரமாகப் பாட்டிலில் அடைத்து வைத்துக்கொள்ள வேண்டும்,

### அளவு :

130 மில்லி கிராம் வீதம், தினம் 2 வேளை 6 நாள்கள் கொடுக்கவும்.

### அனுமானம் :

நாட்டுச் சர்க்கரையில் கலந்து சாப்பிடவேண்டும்.

**பத்தியம் :**

தயிர் சாதம், எருமைத் தயிர் இதைத் தவிர மற்றவை எதுவும் கொடுக்கக்கூடாது.

**தீரும் வியாதிகள் :**

சகல ஜன்னிகளும், அதிகமான ஜுரங்களும் நிவர்த்தியாகும்.

# ஜுரத்திற்கு மாத்திரை

**...ல் எண் : 82**

சுர குளி:- அபினி விராகனிடை அஞ்சு சுத்தி பண்ணி,
நேர் வாளம், விராகனிடை அஞ்சு அதி விடையம்
விராகனிடை அஞ்சு கிராம்பு விராகனிடை பத்து
ஆக மருந்து ஏழும் வெற்றிலைச்சாறு வாத்து
அரைத்து குன்றுமணி பிறமாணம் உண்டை பண்ணி
நிழலுணத்தி வைத்துக் கொண்டு ஒரு உண்டை
இஞ்சிச் சாத்தில் இடவும். ஒரு சாமத்திலே
சுரம் நிற்கும். குருணைப்பச்சரிசி கஞ்சி காச்சி
கொடுக்கவும்.

**...ளக்கம் :**

மனித உடம்பில் எப்பொழுதும் இருக்கும் உஷ்ணத்தை விட அதிகமாய் இருந்தால் இதைத்தான் ஜுரம் என்றும் காய்ச்சல் என்றும் சொல்லுகிறோம்.

...ந்த ஜுரத்தில் பலவகை உண்டு. இத்தகைய காய்ச்சலுக்கு ...ருந்து :

## தேவைப்படும் மருந்து வகைகள்:

| | |
|---|---|
| அபின் | — 5 விராகனிடை (21 கிராம்) |
| சுத்தி செய்த நீர்வாளம் | — 5 விராகனிடை (21 கிராம்) |
| அதிவிடையம் | — 5 விராகனிடை (21 கிராம்) |
| கிராம்பு | — 10 விராகனிடை (42 கிராம்) |

### மருந்து செய்யும் முறை:

மேற்சொன்ன மருந்துகள் அனைத்தையும் வெற்றிலைச் சாறு விட்டு அரைத்து ஒரு குண்டுமணி ( 130 மி.கி. ) எடைக்கு உருண்டை பண்ணி நிழலில் உலர்த்தி வைத்துக் கொண்டு கொடுத்தால் ஒரு ஜாமத்தில் ஜுரம் நிற்கும். (ஒரு ஜாமம் 3 மணி நேரம்).

### அளவு:

ஒரு வேளைக்கு 130 மில்லி கிராம்

### கால அளவு:

தினம் 2 வேளை வீதம் 6 நாள்கள் சாப்பிடவும்.

### அனுபானம்:

இஞ்சிச் சாற்றில்.

### பத்தியம்:

பச்சரிசிக் குருனையில் கஞ்சி வைத்து சாப்பிடவும்.

### தீரும் வியாதி:

சுரம் தீரும்.

# கழுத்துப் பிடிப்புக்கு மருந்து

## பாடல் எண் : 83

ஊமத்தஞ் சாறும், கத்திரிச் சாறும், தேனும் அரைத்து
பிடலைவயிலே தடவ, உடை குலையும்.

**விளக்கம் :**

ஊமத்தஞ்சாறு, கத்திரி சாறு, தேன் இவை மூன்றையும் சேர்த்து அரைத்துக் கழுத்துப் பிடரி வலிக்குத் தடவினால் வலி நீங்கி விடும். கழுத்துப் பிடிப்பு, வீக்கம், கட்டி இவைகளும் குணம் ஆகும்.

# தலையிலே தேங்காய் உடைக்கும் வினோதம்

## பாடல் எண் : 84

சிறுபிள்ளடி வடக்கே போர வேரை குளிசமாடி
நாவிலடக்க தலையிலே தேங்காய் உடைக்கலாம்
தேங்காய் உடையும்.

**விளக்கம் :**

வடக்கே போற சிறுபிள்ளடி வேரை நறுக்கித் தண்ணீரில் நனைத்து வாயில் கடித்துக் கொண்டு இருக்கும்போது தலையில் தேங்காய் உடைக்கலாம். இதை ஏன் இப்படி செய்திருக்கிறார்கள் என்றால் மேற்சொன்ன சிறுபிள்ளடி வேரை மனிதன் வாயினால் கடித்து நாக்கில் படும்படி செய்தால் இதன்மேல்பாகம்அனைத்தும் உணர்ச்சிகள் இன்றி மரத்துப்போகும் இத்தகைய குணங்கள் அடங்கிய வேர் உள்ளது என்று மக்களுக்கு அறியச் செய்வதற்காக அக்காலத்துச் சித்தர்கள் இத்தகைய விந்தைகளைச் செய்திருக்கிறார்கள் என்பதை இந்தச் சுவடியின் மூலமாக அறிகிறோம்.

# குழந்தை பாக்கியம் இல்லாதவர்களுக்கு சாங்கியம் (சடங்குகள்)

**பாடல் எண் : 85**

பிள்ளை பிற மாட்டாதவளுக்கு:
செகன்னாதக் கிளங்கு, கார்த்திகை நட்சத்திரத்தில் பிடுங்கி
வைத்துக் கொண்டு பிள்ளைப்பிற மாட்டாதவளுக்கு தேனில்
கிழங்கை உரைச்சு தொப்பிளில் தடவவும், பிள்ளை சூளை
விழும், யெலந்தை மேல் புல்லுருவி, அவிட்ட நட்சத்திரத்தில்
குளிசமாடி கையிலக் கட்ட வசியு, வசீகரம், வேறு வினோதம்
வேம்பு மேல் புல்லுருவி, சுவாதி நாள் குளிசமாடி கபாடந்
தட்டகம் பாடந் தட்டகம் பாடத் தீர்க்கும் பூசத்தி நா குளிசமாடி
கட்டி இருக்க தெய்வம் பணிவிடை செய்யும்.

**விளக்கம் :**

1) செகன்னாதக் கிழங்கைக் கார்த்திகை நட்சத்திரத்தில் பிடுங்கி வைத்துக் கொண்டு கர்ப்பம் தரிக்காதவர்களுக்கு இந்தக் கிழங்கைத் தேனில் உரைத்துத் தொப்புளில் தடவினால் கர்ப்பம் தரிக்கும். (விழும் சூளை)

2) அவிட்ட நட்சத்திரத்தில் எலந்தை மரத்தின் மேல் இருக்கும் புல்லுருவியைக் கொண்டு வந்து சிறியதாகக் கட்டி, கையில் கட்டிக் கொண்டால் கர்ப்பந்தரிக்க சாங்கியம்.

3) சுவாதி நாள் அன்று வேப்ப மரத்தின் மேல் உள்ள புல்லுருவியைக் கொண்டுவந்து அரைத்துத் தலையிலும், வயிற்றிலும் பூசிக் கொண்டால் கர்ப்ப சாங்கியம் நிவர்த்தி ஆகும். இந்த வேரைச் சிறியதாக மடக்கிக் கையில் கட்டிக் கொள்ளவும், இவைகள் எல்லாம் கர்ப்பம் தரிக்கச் சடங்குகள் ஆகும்.

# பல் பூச்சி விழச் செய்வதற்கு மருந்து

**பாடல் எண் : 86**

பாப்பார் முள்ளிப்பழம், முன்னையிலையும் அந்தப் பழத்தைக்
காணமயிலே, விரையைப் பிதுக்கி அனலிலே செத்தே காச்சினா
பின்பு இலையும் கூடாபெட்டு ரெண்டையும் சத்தே திராவி,
அந்தப் பல்லிலே வைக்கவும். வச்ச பின்பு உமுஞ்சு போட்டு
வெண்ணீர் வாத்துக் கொப்பளிக்கப் பூச்சி விழும்.

**விளக்கம் :**

முள்ளிப் பழத்தினுள்ளே இருக்கும் விதையைப் பிதுக்கி எடுத்துக் கொண்டு அனலில் சற்றுச் சூடாக்கி, இத்துடன் முன்னையிலையும் சேர்த்து இரண்டையும் பூச்சிப் பல்லிலே வைத்துக் கடித்துச் சற்று நேரம் கழித்துக் கீழே துப்பிவிட்டு வெந்நீர் விட்டு வாயை நன்றாகக் கொப்பளித்தால் பூச்சிப் பற்களில் இருக்கும் பூச்சிகள் இறந்து கீழே விழும்,

# சித்து வினோதம்

## தலைமுடி சடை பிடிக்கச் செய்யும் வினோதம்

**பாடல் எண் : 87**

மாடறு விறுத் மயிர் சடை பிடிக்க நீர் முள்ளி
விரை
அரைத்து அரப்புடன் முழுகச் சடைப்பிடிக்கும்
இதுக்கு
மாத்து முடக்கொத்தான் யிலையை அரைத்துப்
பூசினால்
சடை விட்டுப் போம்.

**விளக்கம் :**

அக்காலத்துச் சித்தர்கள் மிகப்பெரிய சித்தர்கள் என்று சொல்லிக்கொள்வதற்காகவும், ஒரு பெரிய முனிவர் என்று சொல் வதற்கும் இந்த எண்ணங்களைக் கொண்ட சித்தர்கள் அக்காலத்து மக்களிடத்தில் அவர்களது தலைமுடிகளைக்கூடச் சடை விழும்படி செய்து காண்பித்திருக்கிறார்கள். எப்படி என்றால் நீர்முள்ளிச் செடியின் விதையை அரப்புடன் அரைத்துத் தலையில் தேய்த்து முழுகினால் சடை விழுந்தது போல் எல்லாத் தலைமுடிகளும் ஒன்றோடொன்று ஒட்டிக்கொண்டு சடை விழுந்தது போல் மற்றவர் கண்களுக்குத் தெரியும். இச்சடை விழுந்ததைத் திரும்பி முன்மாதிரி தலைமுடி இருக்க முடக்கொத்தான் இலையை அரைத்துத் தலையில் பூசவும். சடை எல்லாம் விட்டுப்போகும்.

# காய்ச்சின இரும்பைக் கையால் எடுக்கும் வினோதம்

**பாடல் எண் : 88**

மருக்காலம் வேர் அரைத்துப் பசுவின் வெண்ணையில்
கொழப்பிக் கையில் தடவவும் மழு வெடுக்கலாம்.

**விளக்கம் :**

மருக்காலம் வேரைத் தண்ணீர் விட்டுக் கெட்டியாக அரைத்துப் பசு வெண்ணெயில் குழப்பிக் கையில் தடவிக் கொண்டு காய்ச்சிய இரும்பைக் கையால் எடுக்கலாம். கை சுடாது. இது ஒரு வினோதமான செயல் ஆகும்.

# போக வினோதம்

## (அதிகமான காம உணர்ச்சி ஏற்படச் செய்ய மருந்து)

**பாடல் எண் : 89**

சங்கம் பழச்சாறு, மாதளைப் பழச்சாறு அரைத்துப் பூசிப்
புணரவும் பின் தொடர்ந்து வருவாள்.

**விளக்கம் :**

சங்கம் பழத்தின் சாற்றையும், மாதுளைப் பழத்தின் சாற்றையும் சேர்த்து அரைத்துக் கலந்து தண்டின் மீது (ஆண் உறுப்பு) மீது தடவிக்கொண்டு உடல் உறவு கொண்டால் அவளுக்கு அதிகமான அளவுக்குக் காம இன்பம் ஏற்படும். ஆகவே மீண்டும் உன்னுடன் உடல் உறவிற்காகத் தேடிக்கொண்டு வருவாள். அந்த அளவிற்குக் காம உணர்ச்சிகள் அதிகமாக இருக்கும்.

# யோக பலன்கள் கிடைக்க வினோதம்

**பாடல் எண் : 90**

சுழல் வண்டு உழக்கு கருஞ்சுரை வேரை ஒழுக்கு
போத உலத்திப் புதுக் கலசத்தில் வயித்து தயிலமிறக்கி
அந்த தயிலத்தை எடுத்துட திலதமிட எல்லாருக்குத்

தெரியாது அத்தை கண்ணிலிட சித்திறகளைக்
காணலாம்

அத்தை உள்ளங்கையில் வயித்து எட்டு ரெண்டு எழுதித் திரப்பட கலத்தை வயித்த எல்லாம்.

**விளக்கம் :**

சுழல் வண்டு 50 மில்லி (பூச்சி இனத்தைச் சேர்ந்தது) கருஞ் சுரை வித்து 50 மில்லி இவை இரண்டையும் காயவைத்துப் புதிய பானையில் போட்டு நன்றாக மூடி, குழித்தைலம் இறக்கி அந்தத் தைலத்தைப் பத்திரமாக எடுத்து வைத்துக் கொண்டு, அந்தத் தைலத்தில் சிறிதளவு எடுத்து நெற்றியில் திலகமிட்டுக் கொண்டு யாருக்கும் தெரியாது அதை கண்களில் விட யோக பலன்களைக் காணலாம். இதை உள்ளங்கையில் வைத்து எட்டு, இரண்டு (அ.உ.) என்ற எழுத்தை எழுதிச் சதிரப்பட காலத்தில் வைத்தால் எல்லாம் வினோதமாகும்.

# சித்து வினோதம்
# பெண் ஓடாமல் இருக்க விந்தை

**பாடல் எண் : 91**

ஆணை வணங்கி இலையைக் கசக்கி முந்தாணியில் தடவ ஓடாள்.

**விளக்கம் :**

ஆணை வணங்கி இலையைக் கசக்கி ஒரு பெண்ணின் சீலையின் முன் பாகத்தில் (முந்தானையில்) தடவி விட்டால் அவள் ஓட மாட்டாள். இது ஒரு வினோதமானது.

# சித்து வினோதம் தலை மயிர் வெளுக்க, கறுக்க வினோதம்

## பாடல் எண் : 92

தலைமயிர் வெளுக்க, கறுக்க வினோதம், வெடி
மருந்து கூட்டு, குறடு, கந்தகம், எலுமிச்சம் பழத்தில்
திணித்து எட்டுனாள் வச்ச பிறகு எண்ணையில் பிரிந்து
தலையில்
தேய்க்க மயிர் வெளுக்கும். மாத்து கருப்பஞ்சாறு
எண்ணையில் பிழிந்து தலையில் தேய்க்கக் கறுப்பாம்.

## விளக்கம் :

அக்காலத்து சித்தர்கள் சில மூலிகைகளைக் கொண்டும், சில காய்கனிகளைக் கொண்டும் நிறங்களை மாற்றி இருக்கிறார்கள். அதைப்போல் இதன் கீழ் கொடுக்கப்பட்டுள்ள கந்தகத்திற்கு மாற்று (எதிர்ப்பு) கருப்பஞ்சாறு என்பதை இந்தச் சித்து வினோதமான தலைமுடியை வெளுக்கச் செய்வதற்கும் வெடி மருந்தில் சேர்க்கக் கூடிய குழாய் கந்தகத்தில் ஒரு சிறு துண்டை எடுத்து முழு எலுமிச்சம் பழத்திற்குள் சொருகி வைத்து, எட்டு நாள் சென்று இதனை எடுத்துத் தேங்காய் எண்ணெயில் பிழிந்து கலந்து தலையில் தேய்த்துக்கொண்டால் தலைமயிர் வெளுக்கும். இதனை மாற்றிக் கருப்பு முடியாகச் செய்ய கரும்புச்சாற்றைத் தேங்காய் எண்ணெயில் பிழிந்து தலையில் தேய்த்துக்கொண்டால் தலைமயிர் கருப்பு நிறமாக மாறும். இந்த வினோதத்தை ஏன் செய்தார்கள் என்றால் ஒவ்வொரு மருந்து வகைகளுக்கும் எதிர்ப்புத்தன்மை உண்டு என்று நாம் அறிந்து கொள்வதற்காக மேலே குறிப்பிட்டுள்ள வினோத செயலைக் கொண்டு நாம் தெரிந்து கொண்டோம்.

# வினோத அஞ்சனம்
# (அரையாப்புக் கட்டிக்கு மருந்து)

**பாடல் எண் : 93**

வினோத அஞ்சனம். அரையாப்புக்கு கிழக்கே போற
உத்தாமணி வாயி பேசாமல் போயறுத்து விடவும், தெய்வ
அஞ்சன மணிலா வரை கொண்டு வந்து கருக
வறுத்துப்
பொடி செய்து சிந்தாமணக் கெண்ணெயில்
கொழப்பிப்
போட்டுப் பாக்க நினைத்த காரியம் பார்க்கலாம்.

**விளக்கம் :**

அரையாப்பு கட்டியினால் மிகத் தொந்தரவுகளுடன் கஷ்டங்களுடன், வலியுடன் எந்தக்காரியத்தையும் நினைக்க முடியாமலும், செய்ய முடியாமலும் கஷ்டப்பட வேண்டி இருக்கும். இதற்கு நிவர்த்தி செய்யக்கிழக்கு திசையிலே போகிற உத்தாமணி வேரை நறுக்கி எடுத்துக் கொண்டு இத்துடன் தெய்வ அஞ்சன மணிலா விதை இந்த இரண்டையும் ஒரு புதுச் சட்டியில் போட்டுக் கறுக வறுத்துப் பொடி செய்து சித்தாமணக்கு எண்ணெயுடன் கலந்து அரையாப்புக் கட்டியின் மீது பூசி மூன்று தினங்கள் கட்டுக் கட்டினால் நிவர்த்தியாகும்.

# பெண்கள் வீட்டு விலக்கு வருவதற்கான மருந்து

**பாடல் எண் : 94**

பெண்மபுறியுவும்:- துதுப்பைக்கு திங்கள் கிழமை னாள்
காப்புக் கட்டி, செவ்வாய்க்கிழமை னாள் வேரறாமல்
பிடுங்கிக் குளிசமாடி கட்டி விலங்கிலுரைக்க விடும்
நொச்சிச்சாறு உத்தாமணிச் சாறும் பாலும்
சுண்ணாம்பில் கூட்டி வெத்திலை தடவிக் கொடுக்க
அழியும்.

**விளக்கம் :**

துதுப்பைக்குத் திங்கள்கிழமை அன்று தீப தூபம் காண்பித்துக் காப்புக் கட்டிச் செவ்வாய்க்கிழமை அன்று காப்புக் கட்டிய துதுப்பைச் செடியை வேரறாமல் பிடுங்கிக் குளிசமாடி கட்டி விலங்கிலு அரைக்க விடும் இத்துடன் நொச்சிச்சாறு, உத்தாமணிச் சாறு பாலு சுண்ணாம்புடன் கலந்து வெத்திலையில் தடவிக் கொடுத்தால் அழியும். (வெளியாகும்).

# பாம்பு ஆடாது செய்யும் வினோதம்

**பாடல் எண் : 95**

வினோதம் பாம்பு: பாவட்டக் கொழுந்து வடக்கே
போற வேர்
தேச்சிக் கொண்டு கெல்லி பிடுங்கி ஆணம் பாம்பு ஆடும்
போதுயிருந்த
வேரை மடங்கிப் பிடிக்கவும். பாம்பு ஆடாது.

**விளக்கம் :**

வடக்கே போற பாவட்டக் கொழுந்து கொடியின் வேரை ஒரு குச்சிகொண்டு தோண்டி அதைப் பிடுங்கி வேரை மட்டும் மடக்கிக் கையில் பிடித்துக்கொண்டு பாம்பு ஆடுகிற பொழுது பாம்பின் எதிரில் இந்த வேரைக்காண்பித்தால் பாம்பு ஆடாது நின்றுவிடும். பொதுவாக ஆடும் பாம்பு முன் கையை எதிரில் ஆட்டினாலும் பாம்பு நிற்கும்.

# பிள்ளை பெற மாட்டாதவளுக்கு விநோதம்

**பாடல் எண் : 96**

பிள்ளை பெற மாட்டாதவளுக்கு வேளைக்
கல்லுயிடித்துப்
பொடி செய்து சீலை வடிகொண்டு னல்ல யிரக்
குழம்பி
னூலில் தடவி யிரும்பை அறுக்கலாம். பிள்ளை வீழ
அதிமதுரம், தேனும் குழப்பித் தின்னவும். பிள்ளை
விழும்.

**விளக்கம் :**

குழந்தை பிறக்கக் கஷ்டமான தாய்மார்களுக்கு வேளைக் கல்லு நன்றாக இடித்துப் பொடி செய்து துணியினைக் கொண்டு வடிகட்டி இந்தப் பொடியுடன் அதிமதுரம் தேனும் சமன் எடை எடுத்து குழப்பி (நன்றாகக் கலந்து) சாப்பிட்டால் பிள்ளை பிறக்க ஏதுவாக இருக்கும். சுலபமாகக் குழந்தை பிறப்பதற்கு இந்த மருந்தைப் பயன் படுத்தலாம். இந்த வேளைக் கல்லு பொடியைத் தண்ணீரில் குழப்பி நூலில் தடவிக் காயவைத்து இரும்புத் துண்டைக் கூட அறுக்கலாம். அந்த அளவிற்கு இந்த வேளைக் கல்லின் பொடியில் இத்தகைய சக்தி உண்டு.

# சித்தி வினோதம்
# அளக்கும் படியும், அரைக்கும் அம்மியும் நடக்க வைக்கும் வினோதம்

**பாடல் எண் : 97**

சித்தி வினோதம் வெள்ளி குன்றி வேர் சமூலமும் பசுவின் பால்
வொத்தரைத்து உண்டை செய்து அதிமதுரமும் பிறா வெச்சமும்
னாழில் தடவ னாழி நடக்கும் அம்மியில் தடவ அம்மி நடக்கும்
காதிலணிக்கு நெட்டை குராவுயிதுவும் கையில் தடவிப் புளியிலையை
உருவிக் கையில வச்சி உளக்கு எலியாதும்.

**விளக்கம் :**

வெள்ளைக் குன்றி வேரின் சமூலத்தைப்பசுவின் பால் விட்டு அரைத்து இத்துடன் அதிமதுரமும் புறா மலம் இவைகளைச் சேர்த்து அரைத்து உருண்டை செய்து வைத்துக்கொண்டு அளக்கும் படியில் இதைக் கொஞ்சம் எடுத்துத் தடவினால் அளக்கும் படியும் நடக்கும். இதைப்போல் அரைக்கும் அம்மிக்கும் தடவினால் அம்மியும் நடக்கும். நெட்டை குரா மரம் மூலிகையை அரைத்துக் கையில் தடவிக்கொண்டு புளியமரத்தின் இலையை உருவிக் கை:யில் வைத்துக் கொண்டு அளக்கும் படியைக் கையால் அமுக்கினால் எளிதாக நகரும். இது ஒருவினோதமான செயல் ஆகும்.

# சித்த வினோதம்

## பாடல் எண் : 98

சுக்கு, சுக்கு திப்பிலி (காக) பேப்புடல் (காக)
கொத்தமல்லி (காக) கோஷ்ட்டம் (காக)
உண்டையிடவும் சீந்தி தண்டு சிறுதாஞ்சொரி பேப்புடல்
சிறு தேக்கு (காக) கொஷ்ட்டம் (காக)
சுக்கு, சுக்கு திப்பிலிக

**விளக்கம் :**

பிரயோகத்தை கூறப்படவில்லை. இதன் காரணத்தினால் விளக்கம் தர முடியவில்லை.

# மூஞ்சோறு வினோதம்

## பாடல் எண் : 99

மூஞ்சோறு அடித்து நிழலுணத்தி வய்த்து வலைது காலை
பொடி செய்து தனக்கு வேண்டியவன் பேரில் தடவ
வருவாள் வேறு குன்னிவேர் செவ்வாய்க்கிழமை னால்
வடக்கே போன வேர் பிடிங்கி வந்து எலுமிச்சம்
பழச்சாறு விட்டு அரைத்துத் தனக்கு வேண்டினவள்
பேரில் தடவவும் வேறு.

**விளக்கம் :**

மூஞ்சுறு அடித்து நிழலுணத்தி வைத்து (நிழலில் காயவைத்து) இதன் வலது காலை நறுக்கி (வெட்டி) பொடி செய்து தனக்கு வேண்டியவர் பேரில் தடவ பின் வருவாள். இதைப்போல் குன்னி வேர் வடக்கு திசையில் போகிற வேரைப் பிடுங்கி வேரை மட்டும் தனியாக எடுத்து எலுமிச்சம் பழச் சாற்றை விட்டு அரைத்துத் தனக்கு வேண்டினவள் பெயரில் தடவினால். பின்வருவாள் இது ஒரு வினோத செயல்.

# உண்ணாக்கு நிவர்த்திக்கு மருந்து

**பாடல் எண் : 100**

உண்ணாக்கு ஒட்டடை கூரிய சுண்ணாம்பு ஒரு அன்னாவாசல்
தெற்கோலம் மூணும் அரைத்து உண்ணாக்கில் மூணு பொழுது
தடவச் சால தீரும்.

**விளக்கம் :**

ஒட்டடை, சுண்ணாம்பு, தக்கோளம் மூன்றையும் சமன் எடை எடுத்து அரைத்து (பசை போல செய்து) உள் நாக்கில் மூன்று நாள் தடவ உள் நாக்கு வளர்ச்சி நிவர்த்தி ஆகும். வாயின் உள்ளே இருக்கும். சின்ன நாக்கு துண்டு மாதிரி இருக்கும். இதனைத் தான் நாம் உண்ணாக்கு என்று சொல்வது.

# வினோத திலகம்
# நெற்றியில் வைக்கும் வசிய மை

**பாடல் எண் : 101**

வினோதம் திலதம் மணத்தக்காளி யெலையும்,
கிலுகிலுப்பை
யெலையும் ரெண்டு நறுக்கித் தனக்கு வேண்டியவள்
மேலே
தடவ வருவாள், வேறு பேய்ப் பீக்கஞ் சாத்தைக்
கசக்கித்
திலதமிட அழைத்து வருவாள் அவன் கய்யில்
கசக்கி
முந்தாணியில் தடவ ஓடாள்.

**விளக்கம் :**

மணத்தக்காளி இலையும், கிலுகிலுப்பை இலையும் இந்த இரண்டையும் நன்றாக அரைத்துத் தனக்கு வேண்டியவர் மேல் தடவினால் பின் வருவாள். நீ எங்கு அழைத்தாலும் பின் வருவாள். பேய்ப்பீக்க இலையைக் கசக்கிச் சாற்றை எடுத்து நெற்றியில் திலகம் இட்டுக் கொண்டால் இந்தத் திலகத்தைப் பார்த்தவர் மிக உறுதியாகப் பின் வருவாள். மேற்படி இலையை ஆண் கையினால் கசக்கி ஒரு பெண்ணின் முந்தாணியில் தடவினால் அந்தப் பெண் உன்னை விட்டு ஓடமாட்டாள். இது ஒரு வினோதம் ஆகும்.

# அரையாப்பு விநோதம் அரையாப்புக்கட்டி மேல் பூசும் மருந்து

**பாடல் எண் : 102**

உத்தாமணிப் பாலில் வெண்ங்காரமும் பொடி செய்து
சிறுநீர்
வாத்து அரைத்து ஆணியில் பூசியிருக்க ஆணி
கரையும்.

**விளக்கம் :**

உத்தாமணிச் செடியின் பாலில் வெண்காரத்தைப் பொடி செய்து அரைத்து இத்துடன் சிறுநீர் விட்டு அரைத்து அரையாப்புக் கட்டியின் முலையின் மேல் தடவி நன்றாகத் துணி கட்டு கட்டி விட்டால் அரையாப்புக் கட்டி கரைந்துவிடும். அல்லது உடைந்து அழிந்து விடும். சாதாரண கட்டியாக இருந்தாலும் கரைந்து விடும்.

# அரையாப்புக்கும், காமாலைக்கும் மருந்து

**பாடல் எண் : 103**

அரையாப்புக் காமாலைக்கு கௌக்கே போற
உத்தாமணி
வாய் பேசாமல் அறுத்து விடவும். அரையாப்புத் தீரும்.
வேறு
காமாலைக்கு வெள்ளை தண்டாயிருக்கிற சித்தாமணிக்கு
எலை
யொங் கொழுந்தாய் ஒரு குத்து எலை தண்ணீர் விடாம
லரைத்து
மூணுண்டையாகப் பண்ணி முழுகவும் காமாலை தீரும். யிது
கயி கண்டது.

(வேறு) யிதுக்குப் பத்தியம் வென்னீருப் சோறும் ஒரு நாள்
மறுனாள்
னல்ல எண்ணை தேச்சு முழுகி புளி மௌகு நீருவாத்து சோறு
திங்கவும்
சகலமும் கூட்டவும்.

**விளக்கம் :**

கிழக்கு திசையில் வளர்கின்ற உத்தாமணிக் கொடியை யாருடனும் வாய் பேசாமல் வேருடன் பிடுங்கி அந்தக் கொடியின் பாலை அரையாப்புக் கட்டியின் மேல் தடவிக் கட்டினால் கட்டி கரைந்து விடும். காமாலைக்கு மருந்து வெள்ளைத் தண்டாயிருக்கிற சிந்தாமணிக்கு இலைகளில் கொழுந்தாக இருக்கும் இலைகளை ஒரு கைப்பிடி அளவு எடுத்துக்கொண்டு தண்ணீர் விடாது அரைத்து மூன்று உருண்டையாகச் செய்து மூன்று நாள்களுக்கு 3 வேளை வீதம் சாப்பிடவும்.

**பத்தியம் :**

வெந்நீர் விட்ட சாதம் சாப்பிடவும். அல்லது மிளகு ரசம் சாதம் சாப்பிடலாம். ஒரு நாள் விட்டு நல்லெண்ணெய்த் தேய்த்து தலை முழுகவும். அடுத்த மறுநாள் பத்தியம் இன்றிச் சாப்பிடலாம்.

**தீரும் வியாதிகள் :**

மாலைக் கண் என்ற காமாலை தீரும்.

## நாகசெந்தூர மருந்தின் பயன்களும் செய்யும் முறையும்

**பாடல் எண் : 104**

னாத சிந்தூரம் ஒரு பண விடையில் திற கடுகு
வெதிப்பி தேனில் னாள் கொள்ள வெறுகடி
பிறமாணங்

கொள்ள கிளயிறுமல், எலிகடி, மந்தார காசம்
அறிகுறல் நெஞ்சு நோக்காடு, சொத்துக் கோயி
தொண்ணூத்தாறும் மற்றக் கெர்ப நூத்திருவத்
தெட்டு உஷ்ண ரோகம் முன்னூத்திருவதும் ஆறு
சுக்கிலப் பிறமேயம் பதினெட்டு யிந்திர கட்டி அஞ்சு
கல்லடய்யன் பதினாறு குணம் பதினாறு சேரம், ரோகம்
பன்னிரெண்டு அத்திரம்மயிருதாறு முரடு கைஎறப்பு
கல்லெரிப்பு இவைகள் தீரும். பதினெட்டு செதை
படையப்பன்.

## விளக்கம் :

## நாகசெந்தூரம் செய்யும் முறை :

நாகம் என்பது ஒரு உலோகமாகும். இந்த நாகத்தைச் சுத்தி செய்ய இலுப்ப எண்ணெயில் பத்து தடவை உருக்கிச் சாய்த்து விட்டால் நாகம் சுத்தியாகும். இப்படி சுத்திச் செய்த நாகத்தில் முப்பத்தி ஐந்து கிராம் எடைக்கு எடுத்துக்கொண்டு அயச் சட்டி யில் (இரும்புச் சட்டியில்) இந்த நாகத்தை உருக்கிக் கொண்டு இதில் வளையலுப்பு மஞ்சள் பொடி இந்த இரண்டில் சமன் எடை எடுத்துக்கொண்டு (அதாவது சமன் எடை என்பது வகைக்கு முப்பத்தி ஐந்து கிராம் எடை) இதனை நன்றாக இடித்துப் பொடி செய்துமேற்சொன்ன அயச்சட்டியில் உருக்கிக்கொண்டு இருக்கும் நாகத்தின் மேல் போட்டு நன்றாகக் கிண்டி பிறகு இதற்கு மேல் சென்னாயுருவி சமூலத்தை இடித்துச் சிறுக, சிறுகப் போட்டு நன்றாகக் கிண்டி சிகப்பு நிறமாக வரும் வரையில் கிண்டிக் கொண்டு இருக்கவும். சிகப்பு நிறம் வந்தவுடன் சட்டியை அடுப்பை விட்டு இறக்கி வைத்து விட்டு நன்றாகச் சூடு ஆறிய பிறகு சிகப்பு நிறமாகிய நாகத்தை எடுத்துக் கல்வத்தில் வைத்து அரைத்து நன்றாகப் பொடி செய்து பாட்டிலில் அடைத்து வைத்துக் கொள் ளவும்.

**தினம் அளவு:**

ஒரு வேளைக்கு ஒரு பண எடை (488 மில்லி கிராம் எடை)

**அனுமானம்:**

வியாதிகளுக்குத் தக்கபடி (சுக்கு, மிளகு, திப்பிலி) (திரிகடுகு சூரணத்தில்) கொடுக்கலாம்.

**தீரும் வியாதிகள் :**

1. காசம் (ஈளை இருமல்)
2. எலிக்கடிக்கு
3. மந்தார காசம்
4. அரிகுரல் (கீச்சுக் குரல் சத்தம்)
5. நெஞ்சு நோக்காடு (சுவாச காசம்)
6. மகா வியாதிகள் (தொண்ணூற்று ஆறு)
7. கற்ப தோஷம் நூற்று இருபத்து எட்டு
8. உஷ்ண ரோகம் முந்நூற்று இருபது
9. சுக்கிலம் ஆறு வகை
10. பிற மேகமும் பதினெட்டு வகை தீரும்
11. இந்திரக்கட்டி ஐந்து வகைகளும் தீரும்
12. கல்லடைப்பான் பதினாறு குணம் தீரும்
13. குன்மம், பதினாறு குணம் தீரும்
14. சோரம், ரோகம் பன்னிரண்டு வகை தீரும்
15. அத்திரம் இருபத்து ஆறு வகை தீரும்
16. முரடு, மருப்பு, கை எரிப்பு, கல்லெரிப்பு இவைகள் தீரும்.
17. தோல்படைகள் பதினெட்டு வகை தீரும்

**பத்தியம்:**

வியாதிக்குத் தகுந்தபடி உணவு சேர்க்கவும். நீக்கவும்.

# இருமலுக்கு அடை மருந்து

## பாடல் எண் : 105

யிருமலுக்குச் சிறுதாளியிலை ஒரு பிடி அரைக்கால்
படி அரிசி ரெண்டு மரைத்து மூணு அடையாகத்
தட்டிப் பசுவின் நெய்யில் வாத்து சுட்டு மூணு நாள்
சாப்பிட யிருமல் தீரும்.

**விளக்கம் :**

இருமல் என்பது அதிக உஷ்ணம் உடலில் தாக்கித்தொண்டை வற்றிப் போய் இருமல் வருகிறது. இந்த இருமலில் பல வகை உண்டு. சில சாதாரணமான இருமலுக்குக் கீழ்க்கண்ட மூலிகை மருந்து கொண்டு இருமலைப் போக்கலாம்.

**தேவையான மருந்துகள் :**

1) சிறுதாளி இலை ஒரு கைப்பிடி அளவு
2) புழுங்கல் அரிசி 100 கிராம் எடை

இந்த இரண்டையும் மாவு மாதிரி அரைத்து மூன்று அடையாக ஊற்றி இதில் நெய் விட்டு இப்படி மூன்று நாள்கள் சாப்பிட்டால் இருமல் குணம் ஆகும்.

# அந்தர வாய்வுக்கு மருந்து

## [விரை வீக்கம் வலிக்கு]

**பாடல் எண்: 106**

அந்தர வாயுவுக்கு: கடுகு பலம் (க) பூண்டு பலம் (க)
மிளகாய் இலை ஒரு கைப்பிடி வெள்ளறுக்கு இலை
ஒரு பிடி
ஆக னாலு வகையும் அரைத்துச் சாந்து தேங்காய்
கொட்டாங்
கச்சியில் வயித்து வேது காட்டி விரை தாழை
யிறங்கும், விவு
வலி நிற்கும் மேலுக்கு வெண்றை வாத்து
சாப்பிடவும்.

**விளக்கம் :**

மனிதனுக்கு வரும் வாய்வுகளில் அந்தர வாய்வு என்பது ஆண்களின் விதைகளில் வாய்வு தங்கிக் கொண்டு, இதன் காரணத்தால் வலி, விரை வீக்கம் விரை கீழ் இறங்குதல் சற்று காச்சல் இவைகளுடன் இருக்கும். இதன் நிவர்த்திக்கு

1 கடுகு பலம் (ஒன்று) 35 கிராம் எடை
2 பூண்டு பலம் (ஒன்று) 35 கிராம் எடை
3 மிளகாய்ச் செடி இலை ஒரு கைப்பிடி அளவு
4 வெள்ளை எருக்கன் இலை ஒரு கைப்பிடி அளவு

இந்த நான்கு வகைகளையும் ஒன்றாகச் சேர்த்து அரைத்து இந்தச் சாந்தை உருண்டையாகச் செய்து தேங்காய் ஒட்டில் வைத்துச் சூடு காட்டி வேது காண்பித்துவிட்டு இந்தச் சாந்தை விரையின் மீது பூசிக்கொள்ளவும்.

**தீரும் வியாதி:**

விரை வீக்கம், விரை வலி, விரை கீழ் இறக்கம்.

**பத்தியம்:**

வெந்நீர் விட்டுச் சாதம் சாப்பிடவும்.

# இடுப்பு வாய்வுக்கு மருந்து

**பாடல் எண்: 107**

யிடுப்பு வாய்வு மூக்கரட்டை யிலை ஒரு பிடி,
அரிசி கால்படி நல்லெண்ணை ஒரு கரண்டி
யிவையில் களியாகக் கிண்டிச் சாப்பிடவும். னாள்
மூன்று சாப்பிடவும். யிடுப்பு வாய்வு நிற்கும்.

**விளக்கம்:**

மனிதன் உடம்பில் வாய்வு என்று சொல்லும் காற்று அமுக்கம் சில இடங்களில் தங்கிக்கொண்டால் அந்த இடத்தில் வலி, வீக்கம் அசைவுகள் இன்றி மிகக் கஷ்டமாக இருக்கும். இப்படிப்பட்ட வாய்வு இடுப்புப் பக்கம் வந்து தங்கிக்கொண்டால் இடுப்பு வலி, வீக்கம், அசைய முடியாது இருக்கும். இதன் நிவர்த்திக்கு

1. மூக்கரட்டை இலை ஒரு கைப்பிடி அளவு (பச்சையானவை)
2. புழுங்கல் அரிசி உடைத்தது 150 கிராம் எடை அளவு
3. நல்ல எண்ணெய் - 10 கிராம் எடை

இந்த மூன்று வகைகளை ஒரு பானையில் போட்டுக் களி கிண்டி தினம் 2 வேளை வீதம் மூன்று நாள்களுக்கு இதைக் களி மாதிரி செய்து சாப்பிடவும்.

**பத்தியம்:**

வாய்வு உணவு வகைகளை நீக்கவும்.

**தீரும் வியாதிகள் :**

இடுப்பு வாய்வு, கழுத்து வாய்வு, முழங்கால், முழங்கை குதிகால், இவைகளில் வாய்வு இருந்தாலும் நிவர்த்தியாகும்.

# வாய்வு கழிச்சலுக்கும், அஜீரண கழிச்சலுக்கும் மருந்து

**பாடல் எண் : 108**

சாறனைக் கொழுந்து ஒரு பிடி வேக வச்சு
பிளியிட்டு
கடைஞ்சு மிளகு நீர் சமைச்சு குடிக்கவும். கச்சக்
கருவாடு
கூட்டவும். புளியுப் பிறணி னெருப்பில் போட்டு
வசம்பு கூடப்
போட்டுக் குடிக்க நிற்கும். நெல்லினாறு வேயனாறு
நரிர்பயத்த
வேற் முசு முசுக்கை வேற் பேய்பிடல் கிஷாயம்
வச்சு குடிக்க
னிக்கும் குமிழில் தயிர் வாத்து மூன்று னாள்க் கொள்ள
கிறிச்சம்
நிற்கும் அம்மான் பச்சரிசி கொண்டு வந்து
மெண்ணு சாம
முழுங்க நிற்க்கும்.

**விளக்கம் :**

மனிதன் உடல் பாகங்களில் வாய்வு தங்கிக்கொள்வது போல் வாய்வு குடல், இரைப்பை ஆகிய இடங்களில் தங்கிக்கொள்வசு உண்டு. இதன் காரணத்தால் சாப்பிட்ட உணவு சரியாக ஜீரணம் ஆகாது கழிச்சல் போகும். இவைகள் நிவர்த்திக்கு

1. சாறனைக் கொழுந்து ஒரு கைப்பிடி அளவு எடுத்து இதனுடன் புளியைக் கொஞ்சம் கரைத்து வேகவைத்து நன்றாக கடைந்து மிளகு ரசம் போல் வைத்துச் சாதம் சாப்பிடவும். இத்துடன் கச்ச கருவாடு நெருப்பில்ச் சுட்டு சாப்பிடவும். இப்படிச் சாதம் சாப்பிட்ட பிறகு புளிய மரத்தின் மீது உள்ள காய்ந்த பட்டைகளை நெருப்பு உண்டாக்கி இந்த நெருப்பில் வசம்பைச் சுட்டு கரியாக்கி இதில் ஒரு கிராம் எடையுடன் தேன் கலந்து தினம் 3 வேளை வீதம் 3 நாள்களுக்குச் சாப்பிட்டால் வாய்வு கழிச்சல் நிற்கும்.

## அஜீர்ண கழிச்சல் நிவர்த்திக்கு :

1. நெல்லிப்பட்டை 70 கிராம் [இரண்டு பலம்]
2. வேப்பம் பட்டை 70 கிராம் ,,
3. நரிப்பயிர் வேர் 70 கிராம் ,,
4. முசுமுசுக்கை வேர் 70 கிராம் ,,
5. பேய்ப் பிடல் 70 கிராம் ,,

இந்த ஐந்து வகைகளை நன்றாக இடித்து ஒரு புதுப் பானையில் போட்டு இரண்டு லிட்டர் தண்ணீர் ஊற்றிச் சுண்டக் காய்ச்சி 500 மில்லி வரை சுண்டியவுடன் இந்தக் கிஷாயத்தை வேளைக்கு 30 மில்லி வீதம் தினம் இரண்டு வேளை குடிக்கவும். தயிர் சாதம் சாப்பிடவும். இத்துடன் அம்மன் பச்சரிசி இலையைக் கொண்டு வந்து சுமார் 5 கிராம் எடைக்கு வாயில் போட்டு மென்று சாற்றை மட்டும் முழுங்கவும். அஜீரண கழிச்சல் நிற்கும். இது ஒரு கை கண்ட மருந்து ஆகும்.

# கிரந்தி நோய்க்கு மை வகை

## பாடல் எண் : 109

துத்தம் துரிசி யெலுமிச்சம் பழரசம் வெண்ணைக்கு
வகைக்கு [க] யிந்த மட்டுக்கு என்று கூட்டிச் சிமிழில்
வச்சுக் கொண்டு சுண சுண்ணாம்பு புண் வாயிலே போடவும்
காஞ்சிபோகும்.

### விளக்கம் :

அதாவது இந்த வியாதி தோலைப்பற்றிய வகை கொண்டது. சொரிப்படைகளைப் போல் இருக்கும். தேகத்தில் எரிவு, தினவு கண்டு கறுப்பாய்த் தடித்ததில் அடிக்கடி செம்முளை போல் ஏற்பட்டு நீர்க்கட்டி வெடித்து வற்றிக்கருமையான அசரு உண்டாகி உதிரும். தழும்பும் கறுப்பாய் இருக்கும். சிலசமயம் ரணமாக இருக்கும். இதனைக் கருங்கிரந்தி என்றும், தேகத்தில் செம்மை நிறமாய் வட்ட வட்டமாய்த் தடித்துப் படர்ந்து இவை களின் மத்தியில் வெண்மையாய்ச் சற்றோரங்களில் முளை முளை யாய்ச் சீல்கட்டி வற்றிச் சிவந்த சருகு போலுதிர்ந்து தழும்பு சிகப்பாய் இருக்கும். இதனைச் செங்கிரந்தி என்றும் தேகத்தில் சிறு சிரங்கு போல் தோன்றிப் படர்ந்து மாருத்தினவு அரிப்புக் காணும். இதை அரிகிரந்தி என்றும் தேகாதியந்தமும் கழற்காய் போல் தோன்றி ஒவ்வொன்றாக வெடித்துப் புண்ணாகும். இதை ஆலங்காய் கிரந்தி என்றும் தேகத்தில் கள்ளிப்பூப் போல் தடித்து அரித்து ரணமாகும். இதைக் கள்ளிப்பூ கிரந்தி என்றும் இப்படி நான்கு வகை கிரந்தி நோய் உண்டு.

### இதன் நிவர்த்திக்கு :

| | | | |
|---|---|---|---|
| 1. | துத்தம் [துரிசு] | ஒரு பலம் | — 35 கிராம் |
| 2. | எலுமிச்சம் பழ ரசம் | ,, | — 35 கிராம் |
| 3. | வெண்ணெய் | ,, | — 35 கிராம் |

இந்த மூன்று வகைகளை நன்றாக அரைத்துக் கலந்து ஒரு டப்பியில் வைத்துக்கொள்ளவும். வெற்றிலையில் சுண்ணாம்பு தடவுவது போல் அந்த அளவிற்கு உபயோகிக்க வேண்டும்.

**அனுமானம் :**

வெற்றிலையில் தடவிக் கொடுக்க வேண்டும்.

**பத்தியம் :**

அசைவ உணவு, புளி, அதிக உப்பு நீக்கவும்.

**தீரும் வியாதிகள் :**

அனைத்து வகையான கிரந்தி நோய்.

# சீத மண்டலி கடிக்கு மருந்து

**பாடல் எண் : 110**

சீத மண்டலி கடித்துச் செத்துடல் குளர்ந்து வெறக்கில்
கொகுவா முத்திருக்கும் செவியுடன் காடி கூட்டி
வேது கொண்டு அதனாலேதான் மெய் குளிர்ரே
நெய்யினோடே ஓதிய மிளகு, நீத்தை உடன் கலந்து
உண்ணால் தீரும்.

**விளக்கம் :**

சீத மண்டலி என்பது ஒரு வகையான பாம்பு இனத்தைச் சார்ந்தது. இது கடித்தால் உடல் நடுக்கும். வியர்வை அதிகமாக இருக்கும். உடல் குளிரும். இந்த நிலையின் போது கொகுவா முத்தி இருக்கும். செவியுடன் காடி கூட்டி (கலந்து) முகத்தில் வேது காண்பித்தால் சற்று உணர்வுவரும். விரும்பிஓதிய மிளகைச் சுட்ட சாம்பலை நெய்யில் கலந்து உட்கொண்டால் நிவர்த்தி ஆகும்.

# சீந்த மண்டலி கடிக்கு மந்திரம்

## பாடல் எண் : 111

ஓம் கெருடன் ஓங்கார கருட சிவ, சிவ தூத
கெருட, முத்தியோசன கெருட, ஆதித்தன்
சடைமுடி
மேலாடி வருகின்ற னாகமே, உன்னனாங்கார
மெல்லாம்
அஞ்செழுத்தில் ஓதில் வருகுளேன், பாம்பு தன்
பக்கத்தில்
குஞ்சுக் கீரை தேடப் போகச் சேமரகா பேரில்
கெருடன்
கண்டு சிற கெடுத்து அமித்தி கொத்தி குடல்
பிடுங்குவேன்
மகா பேங் கெருடன் பார்த்தாண்ணை யிறங்கு
சுவாகா
ம.ம.ம.ம.ம.ம.ம. கூடும் வேண்டியது

என்ற மந்திரத்தை 108 தடவை சொல்லி மந்திரிக்க வேண்டும். இப்படி 3 தினங்கள் செய்ய வேண்டும்.

# கால் வாய்வு வீக்கத்திற்கு மருந்து

## பாடல் எண் : 112

புளியிலைச்சாறு, கடுகு, அரைத்துப் பூசிக்கொள்ளத்
தீரும்
வாத மடக்கிச்சாறு, பதினஞ்சு மெளகும் அரைத்துக்
குழப்பி(று)
னாள் சாப்பிட்டால் தீரும், சந்து வாதம் தீரும்
பொடுதலைச்
சாறு, சிறங்கை நல்லெண்ணை சிறங்கை யிது
சாரித்து மூனு
னாள் கொள்ளத் தீரும்.

**விளக்கம் :**

மனிதன் உடலில் வாய்வு பரவி இந்த வாய்வு கால்களில் வந்து இறங்கிக் கொண்டால் இதன் காரணத்தால் காலில் வலியும் வீக்கமும் இருக்கும். இப்படிக் காலில் வீக்கம் இருந்தால்,

புளிய இலைச்சாறு எடுத்து இத்துடன் 20 கிராம் எடைக்குக் கடுகை அரைத்து வீக்கம் உள்ள இடத்தில் தடவினால் வீக்கம் வடியும். குணம் ஆகும்.

**சந்து வாதம் நிவர்த்திக்கு :**

வாதமடக்கி இலைச் சாறுடன் பதினைந்து மிளகை, யும் சேர்த்து அரைத்து மூன்று நாள்கள் தினம் இரண்டு வேளை வீதம் சாப்பிடவும். அல்லது பொடுதலைச்சாறு ஒரு உள்ளங்கை அளவும், நல்லெண்ணெய் ஒரு உள்ளங்கை அளவுடன் சேர்த்துக் கலந்து தினம் இரண்டு வேளை வீதம் மூன்று நாள்கள் சாப்பிட்டால் குணம் ஆகும்.

**பத்தியம் :**

வாழைக்காய், பரங்கிக்காய், பூசணிக்காய். பட்டாணி, மொச்சை, பச்சைப்பயிர், தட்டைப்பயிர் இவைகளை நீக்கவும்.

## வாத நிவர்த்திக்கு

**பாடல் எண் : 113**

தேங்காய் மூன்றும் தேங்காயி பால்படி (2)
நல்லெண்ணை படி (2) வெள்ளைச்சாறனைச்சாறு
படி (2)
மூன்றும் கலந்து குடிக்க வாதம் தீரும்.

**விளக்கம் :**

வாதம் என்பது வாய்வைப் பற்றிய வியாதி ஆகும். மனித உடலில் அனைத்து நரம்புகள் வாத நீர் அதிகரித்து அபாணத்திலும் விரைகளின் நரம்பு வழியாகவும் இன்னும் சில நரம்புகளின் வழியாக வாத நீர் பரவி வியாதிகளையும் அதிகரிக்கலாம். இது மேக சம்மதத்தில், சேர்ந்த வியாதி எனப்படும். எனவே இதற்கு வாய்வு ரோகம் என்று சொல்லலாம். இத்தகைய வாதத்தில் எண்பது வகை உண்டு. பொதுவான சில வாத நிவர்த்திகளுக்குக் கீழ்க்கண்ட மருந்தைக் கொடுக்கலாம்.

1. தேங்காய்ப்பால் ... 2 லிட்டர்
2. வெள்ளைச்சாறணைச்சாறு ... 2 லிட்டர்
3. நல்லெண்ணெய் ... 2 லிட்டர்

இந்த மூன்று வகைகளையும் ஒரு புதுப் பானையில் ஊற்றி எண்ணெய்ப் பக்குவம் வரும் வரை காய்ச்சி வடித்து ஒரு பாட்டிலில் வைத்துக்கொண்டு தினம் இரண்டு வேளை வீதம் 48 நாள்கள் சாப்பிடவும். இந்த மருந்தைத் தொடர்ந்து சாப்பிடவேண்டும்.

**அளவு :**

ஒரு தேக்கரண்டி வீதம்.

**பத்தியம் :**

அனைத்து வாய்வு வகையான உணவுகளையும் நீக்கவும்.

வாழைக்காய், பூசணிக்காய், பரங்கிக்காய், மொச்சைக் கொட்டை, தட்டைப்பயிர், பச்சைப்பயிர், துவரை, உருளைக் கிழங்கு, கொண்டக்கடலை ஆகியவைகளை நீக்கவும்.

**தீரும் வியாதிகள் :**

அனைத்து வாய்வு சம்பந்தப்பட்ட வியாதிகளும் மேற்படி எண்ணெயை (மூக்கின் வழியாக) நசியம் பண்ணினால் பீனிசம் நிற்கும். சிரசு வாத ரோகங்களும் நிவர்த்தி ஆகும். மண்டை வலி, ஒத்தைத் தலைவலி இவைகள் நிவர்த்தியாகும்.

# முலை சுரக்க (பால் சுரக்க)

## பாடல் எண் : 114

ஆலங்கனி பசுவின் பாலில் போட்டுக் காய்ச்சித் தோய வர்கச்
சோறுடனே மூணு நாள் கூட்ட சுரக்கும்.

**விளக்கம் :**

ஒரு கைப்பிடி அளவு ஆலங்கனியை 300 மில்லி பசுவின் பாலில் போட்டு நன்றாகக் காய்ச்சி ஆறின பிறகு தயிராகத் தோய்த்து, மூன்று நாள்கள் சாப்பிட்டால் பால் சுரக்கும். பால் கொடுக்கும் தாய்மார்களுக்கு அதிகமாகப் பால் சுரக்கும்.

# முலை சுரக்க, பசு மாட்டின் பால் மடி சுரக்க மருந்து

## பாடல் எண் : 115

முத்தின தேங்காய் — கொண்டு வந்து தினம் ஒரு
காய் துருவி சேர்த்துத் தண்ணீர் வார்த்து
வெப்பாலையிலை
பெசந்து பசுவின் நெய்யில் கலந்து குடுக்கச் சுரக்கும்.
கீழா நெல்லி வேர், தக்காளி வேர், எருமைப்
பாலிலரைத்துக்

குடுக்கச் சுரக்கும், வஞ்சிக் கிழங்கு சாட்டரனை வேர்
எருமை வெண்ணெ, விழலரிசி யில் வகை
அரைத்துப் பசுவின்
முலையில் தடவச் சுரக்கும். இது மனிதரிக்கும்
ஆகும்.

**விளக்கம் :**

1) குழந்தைக்குப் பால் கொடுக்கும் தாய்மார்களுக்குப் பால் அதிகமாகச் சுரக்கத் தினம் ஒரு முற்றிய தேங்காயைப் பூவாகத் திருகி இதனை 300 மில்லி நீராகாரத்தில் போட்டுப் பிசைந்து இத்துடன் ஒரு கைப்பிடி அளவு வேப்ப இலையையும் சேர்த்து பிசைந்து சற்றுநேரம் ஊறின பிறகு இதனை வடிகட்டி இவற்றுடன் பசு நெய் கலந்து தினம் ஒரு வேளை வீதம் பத்து நாள்கள் குடித்து வந்தால் பால் சுரக்கும். இந்தப் பாலைக் குழந்தைகள் சாப்பிடும்போது வியாதிகள் வராது.

2) கீழாநெல்லி வேரையும், தக்காளி வேரையும் சமன் எடை எடுத்து எருமைப் பாலில் அரைத்துக் குடித்தாலும் பால் சுரக்கும்.

3) வஞ்சிக் கிழங்கையும் சாட்டறனை வேரையும் விழலரிசி இவைகளைச் சமன் எடை எடுத்து எருமை வெண்ணெயில் அரைத்து முலையின் மேல் தடவினால் கூடப் பால் சுரக்கும். இவ்வாறு பசு மாட்டிற்கும் பால் சுரக்க இந்த மாதிரி செய்தாலும் பால் சுரக்கும். கூடுமான வரை குழந்தைக்குப் பால் கொடுக்கும் தாய்மார்கள், பால் அதிகமாகச் சுரந்தாலும் குழந்தைகளுக்கு அளவு படிதான் பால் கொடுக்கவேண்டும். அதாவது குழந்தைக்கு பால் ஜீரணம் ஆனபிறகுதான் பால் கொடுக்கவேண்டும் மேலும் குழந்தை தூங்கும்போதும், தாய் தூங்கும்போதும் பால் குழந்தைக்குக் கொடுக்கக்கூடாது. இப்படிக் கொடுத்தால் குழந்தைகளுக்கு வயிற்று சம்பந்தமான நோய்கள் வர வாய்ப்பு உண்டு.

# நடுக்கு சுரத்திற்கு மருந்து

**பாடல் எண் : 116**

நடுக்கு சுரத்துக்கு: மிளகு எலுமிச்சங்காயளவு அரைத்துப்
பழந் தண்ணீரில் கரைத்துச் சிலுக்குறபோது குடுக்கவும்.
ரச கெந்தகம் சுக்கு, திப்பிலி, மௌகு, கடுக்காய்,
எட்டி விரை ஆமணக்கு வேர் பட்டை, நேர் வாளம்,
சிவதை வேர் இவை சமன் கூட்டிக் கள்ளிப்பால் வாத்து
அரைத்து உண்டை பண்ணி நிழலிலுணர்த்தி வயித்துக் கொண்டு
தேனிலுரைத்துக் குடுக்க தீரும். நாயுருவி வேரும் மௌகு (கா)
எலுமிச்சம் பழச்சாத்திலரைத்துச் சுண்டைக்காயளவு கருப்பட்டியில்
குடுக்க தீரும். அரிதாரம் பணவிடை, சுண்ணாம்புடன் குடுக்கத்
தீரும். பாக்கு வெத்திலை சுண்ணாம்பு தடவியுடன் குடுக்க தீரும்.

**விளக்கம் :**

ம்னித உடம்பில் அதிகமான காய்ச்சல் அடிக்கும்போது அந்தச் சுரத்தின் வேகத்தில் உடம்பில் உள்ள அனைத்து நரம்புகளில் இரத்த அழுக்கம் அதிகரித்து ஓடும்போது உடம்பு முழுவதும் நடுக்கம் ஏற்படும். சுரத்துடன் ஏற்படுவதின் காரணத்தால் அதனை நடுக்க சுரம் என்று சொல்வார்கள்.

**இதன் நிவர்த்திக்கு மருந்து :**

1. மிளகை ஒரு சின்ன எலுமிச்சங்காய் அளவு அரைத்து உடல் நடுக்கும் போது (சிலிர்க்கும் போது) எலுமிச்சம் பழச் சாற்றில் கரைத்து உள்ளுக்குக் கொடுக்கவும்.

2. ரசம், கந்தகம், சுக்கு, திப்பிலி, மிளகு, கடுக்காய், எட்டி விதை, ஆமணக்கு வேர், பட்டை, சுத்தி செய்த நீர்வாளம், சிவதை வேர், இவைகள் அனைத்தையும் சமனெடை எடுத்து, திருகுக் கள்ளிப் பாலில் விட்டு அரைத்து உருண்டையாகச் செய்து நிழலில் உணர்த்தி வைத்துக்கொண்டு இதனைத் தேனில் உரைத்துத் தினம் இரண்டு வேளை விதம் ஐந்து நாள்களுக்குக் கொடுத்தால் நடுக்கு சுரம் தீரும்.

3. நாயுருவி வேரும், மிளகு ஒன்பதும் இவை இரண்டையும் எலுமிச்சம் பழச்சாறு விட்டு அரைத்துச் சுண்டைக்காய் அளவு பனை வெல்லம் சேர்த்து மூன்று நாள் சாப்பிடவும்.

4. அரிதாரம் (தாளகம்) 488 மில்லி கிராம் (ஒரு பண விடை) எடுத்து வெத்திலை பாக்கு சுண்ணாம்புடன் சேர்த்துத் தடவி ஒரு நாளைக்கு ஒரு வேளை விதம் ஐந்து நாள்களுக்குச் சாப்பிடவும்.

**பத்தியம் :**

அரிசிக் கஞ்சி வைத்துச் சாப்பிடவும்.

# சீழ் பிரமியத்துக்கு மருந்து

**பாடல் எண் : 117**

விஷ்ணு கிரந்தி ஒரு பிடி, தும்பை ஒரு பிடி சுக்கு
திப்பிலி,
பலக (க) யிவைகை திழாயம் வைத்து யிப்படி மூன்றுனால்
குடிக்கத்

தீரும். அம்மான் பச்சரிசி யிலையும், பச்சரிசியும்
யிடித்து பிட்டு
சுட்டுத் தின்னத் தீரும்.
வகை ரெண்டுக்கும்: வெள்ளை குங்குலியம் பலம்
-க- எலுமிச்சம்பழச்சாறு
படி பக எருமை வெண்ணை எலுமிச்சங்காயளவு
வுரைத்துக்கூட்டி அஞ்சு நாள்
தின்னத் தீரும்.
முசுமுசுக்கையிலை, பொன்னாங்கன்னி யிலை,
சிறுகீரை யிலை, ஆவாரையிலை
நீர்ப்பல விலை, தாளியிலை, தாமரைக் கிழங்கு
யிவகை சாறு பிழிந்து
அதிமதுரம், எலுமிச்சம்பழச்சாறு, கற்பூரம்,
பசுவின் நெய்யில்
வகையெல்லாம் கூட்டி மெல்லப்பூசத் தீரும்.

## விளக்கம் :

பிரமிய ரோகங்கள் வருவதற்குக் காரணம் பல மாதரிடத்தும், வேசியர்களோடும், பிணியாளரோடும், போகிப்பதாலும், அதிக மான போகத்தாலும் மூலத்தில் அக்கினி கொண்டு தாது கெட்டு பிரிமியங்கள் வருகின்றன. இந்தப் பிரிமியத்தில் பலவகை உண்டு. இந்தப் பிரிமியத்தின் பின் தொடர்ந்து நீரடைப்பு, சதையடைப்பு வெள்ளை வெட்டை, கிரந்தி சூலை, அரையாப்பு, பவுத்திரம், பிரமேகம், கிருச்சனம், கல்லடைப்பு, நீரிழிவு, நரம்புத் தளர்ச்சி, இந்த நோய்கள் வருகின்றன.

## சீழ் பிரமியத்தின் குணம் :

சிறுநீர் கழியும் போது நீர் கடுத்து எரியும், சிறுநீரில் சீழ் விழும். உடல் மெலியும், உடல் வத்திப் போகும்.

## தேவையான மருந்துகள் :

1. விஷ்ணு கிரந்தி இலை ஒரு கைப்பிடி அளவு
2. தும்பை இலை ஒரு கைப்பிடி அளவு
3. சுக்கு — 35 கிராம் எடை
4. திப்பிலி — 35 கிராம் எடை

இவைகளை இடித்து ஒரு புதுப் பானையில் போட்டு $1\frac{1}{2}$ லிட்டர் தண்ணீர் விட்டுக் கஷாயம் போல் காய்ச்சி, 300 மில்லி வரை வடித்து எடுத்துக்கொண்டு தினம் 2 வேளை மூன்று நாள் குடிக்கவும். அம்மான் பச்சரிசி இலையையும் ஒரு கைப்பிடி அளவு எடுத்து 100 மில்லி பச்சரிசியுடன் சேர்த்துப் பிட்டு சுட்டு சாப்பிடவும்.

## இரண்டாவது முறை :

1. வெள்ளைக் குங்கிலியம் பலம் — 1 (35 கிராம்)
2. எலுமிச்சம்பழச்சாறு 25 மில்லி
3. எருமை வெண்ணெய் — 25 கிராம்

இவை மூன்றையும் நன்றாக அரைத்து வைத்துக் கொண்டு தினம் மூன்று வேளை விதம் ஐந்து நாள்கள் சாப்பிடவும்.

## மூன்றாவது முறை :

1. முசுமுசுக்கை இலை ஒரு கைப்பிடி அளவு
2. பொன்னாங்கன்னி இலை ஒரு கைப்பிடி அளவு
3. சிறுகீரை இலை ஒரு கைப்பிடி அளவு

4. ஆவாரை இலை ஒரு கைப்பிடி அளவு
5. நீர்ப்பல இலை ஒரு கைப்பிடி அளவு
6. தாளி இலை ஒரு கைப்பிடி அளவு
7. தாமரைக் கிழங்கு ஒரு கைப்பிடி அளவு

இவைகள் அனைத்தையும் இடித்துச் சாறு பிழிந்து இத்துடன் அதிமதுரம், கற்பூரம், எலுமிச்சம் பழச்சாறு பசுவின் நெய் இவைகளைச் சமன் எடை எடுத்து, அரைத்து மேலே பூசினால் சீழ் பிரிமியம் குணம்.

# தும்மட்டி லேகியம் செய்யும் முறை

**பாடல் எண் : 118**

தூம்பிட்டி காயைச் காய்ச்சி ரெண்டுபடி சாறு.........
வந்த
பக்குவத்திலே பஞ்சல வணம் வகைக்கு பலம்
வேர்.........
பண்ணினது முப்பது, திருகடுகு யிது பஞ்சல வணம்.
வளையுப்பு
கல்லுப்பு, யிந்துப்பு, முப்பது காசில வணம், கடுகு
ரோகிணி
விராகணிடை 2 லேகியம் பக்குவத்திலே ஒரு
கரண்டி வெளக்
கெண்ணை விட்டு லேகிய மாக்கவும். மோகொதிரம்
பெரு
வயிறு அவுனக நீர்க்கோவை, யிவையெல்லாம்
தீரும்.

**விளக்கம் :**

நல்ல தும்மிட்டிச்சாறு 2 லிட்டர்
பஞ்ச லவணம் வகைக்கு $17\frac{1}{2}$ கிராம் (1 பலம்)
சுத்தி செய்த நீர்வாளம் பருப்பு 30 (எண்ணிக்கை)

| | | |
|---|---|---|
| சுக்கு | — | 35 கிராம் |
| மிளகு | — | 35 கிராம் |
| திப்பிலி | — | 35 கிராம் |
| வளையுப்பு | — | 4.950 கிராம் |
| கல்லுப்பு | — | 4.950 கிராம் |
| இந்துப்பு | — | 4.950 கிராம் |
| கடுகு ரோகிணி | — | 8.4 கிராம் |
| விளக்கெண்ணெய் | — | ஒரு கரண்டி |

**செய்யும் முறை :**

2 லிட்டர் குமிட்டிச் சாறை ஒரு புதுச் சட்டியில் ஊற்றி மேற்சொன்ன அனைத்து மருந்துகளையும் இடித்து நன்றாகப் பொடி செய்து இந்தச் சாற்றில் போட்டுக்காய்ச்சித் தார் பதம் போல் வரும் வரை கிண்டி விளக்கெண்ணெய் விட்டு நன்றாகக் கிண்டி லேகியமாக்கிக் கொள்ளவும். ஆறவைத்து பாட்டிலில் வைத்துக் கொள்ளலாம்.

**அளவு :**

ஒரு வேளைக்கு 5 கிராம் எடை வீதம் 24 நாள்கள் சாப்பிடவும்.

**தீரும் வியாதிகள் :**

மகோதரம், பெருவயிறு, உடல் நீர்க்கோவை இவைகள் எல்லாம் நிவர்த்தி ஆகும்.

**பத்தியம் :**

வியாதிக்கு ஏற்றபடி உணவு சாப்பிடவும். அதிகப் புளிப்பு, உப்பு நீக்கவும்.

# கலிக்கம் (கண்களில் விடும் மருந்து)

## செய்யும் முறை

**பாடல் எண் : 119**

பேதி மிஞ்சினால் மோருஞ்சோறும் குடுக்கவும், பேதி
நிற்கும்
விருகங்கெழங்கு சுத்தி பண்ணிக் கட்டவும் சிறு
கலிக்கம் கூட்டு வகை
பரமேசுவரன், பார்வதி தேவிக்குச் சொன்ன
அஞ்சனம், பூத அங்குசமான
கலிக்கம் கூட்ட மருந்து: றசம், பலம் (க)
செந்தகம் பலம் (க)
கருங்கெட்டை (க) ஒட்டை பலம் (க) புதுச்
சுண்ணாம்பு பலம் (க)
சிந்தாமணக்கு கொட்டை பலம் (க) நேர்வாளம் -
இத்தனையும்
கரு ஊமத்தைச் சாறு விட்டு நன்னா...எலுமிச்சம்
பழச்சாறு விட்டு
மற்கத்திச்சுப் பயத்தாங்காய் பிறமாணம் கயிறு
போலே அளவாக

உருட்டி நெழலிலொலத்திக் காயவச்சு யெடுத்துக் கொண்டு
எலுமிச்சம்

பழச்சாறு வாத்து காடியாவது யௌ வென்னீராவது
விட்டு ஒரைத்துக்

கண்ணில் கலிக்க மிட்டால் சகல வியாதியும் தீரும்
பூத பிசாசு, பாம்பு

விஷம் விஷ சன்னியும் பிற யிசியும் எவ்யவுவித
காமாலை சோகை (சாய)

சுரம் (ஙயவ) தலைனொவு (ங) வகை கண்ணோவு
வெள்ளை முத்து

சீதச்சுரம், வாத சுரம், ஆணை வியாதி குதிரை
வியாதியுந் தீரும்.

**விளக்கம் :**

மனிதர்களுக்கு ஏற்படும் நோய்களுக்குச் சிகிச்சை செய்யும் போது, பலவிதமான முறைகளில் செய்வது ஆகும். உள்ளுக்குக் கொடுக்கும் மருந்துகள் வெளியில் பூசும் மருந்துகள் இதுமாதிரி கண்களில் விடும் மருந்து (கலிக்கம்) அக்காலத்துச் சித்தர்கள் மிகக் கடுமையான விஷம் சம்பந்தமான நோய்களுக்குக் கண்ணில் விடும் மருந்துகளைத்தான் அதிகம் பயன்படுத்தி இருக்கிறார்கள். ஆக இந்தக் கலிக்கம் முறையினால் வியாதிகள் சீக்கிரம் குணம் அடைவதற்கும், வெகுவிரைவில் விஷம் இறங்குவதற்கும் அதிக வாய்ப்பு உண்டு என்ற அடிப்படையில் உட்கொள்ளும் சில மூலிகைகள் சில பச்ச வெட்டு மருந்துகள் (விஷ மருந்துகள்) சேர்த்து இந்தக் கலிக்கம் மருந்தைச் செய்து இருக்கிறார்கள். அதன் விளக்கம் கீழே மிக விரிவாகக் கொடுக்கப்பட்டு உள்ளது.

## அங்குசமான கலிக்கம் மருந்து வகைகள் :

| | | | |
|---|---|---|---|
| ரசம் | பலம் | 1 | — 35 கிராம் எடை |
| கெந்தகம் | பலம் | 1 | — 35 கிராம் எடை |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| கருங்கொட்டை | பலம் | 1 | — | 35 | கிராம் | எடை |
| ஓட்டை | பலம் | 1 | — | 35 | கிராம் | எடை |
| புதுச்சுண்ணாம்பு | பலம் | 1 | — | 35 | கிராம் | எடை |
| சிந்தாமணக்கு | பலம் | 2 | — | 70 | கிராம் | எடை |
| நேர்வாளம் (சுத்தி செய்தது) | பலம் | 1 | — | 35 | கிராம் | எடை |

இவைகள் அனைத்தும் கரு ஊமத்தன் சாறுவிட்டு நன்றாக அரைத்து இதில் எலுமிச்சம் பழச் சாற்றை விட்டுத் திரியாகக் குச்சி மாதிரி திரிச்சி (கயிறு மாதிரி திரிச்சு) நிழலில் காயவைத்துப் பத்திரமாக எடுத்துக் கொள்ளவும்.

## சிறு கலிக்கம் கூட்டு மருந்து வகைகள் :

| | | | |
|---|---|---|---|
| லிங்கம் | — | 500 | மில்லி கிராம் எடை |
| ரசம் | — | 500 | மில்லி கிராம் எடை |
| வெற்றிலை | — | 500 | மில்லி கிராம் எடை |

இவைகளைச்சமன் எடை எடுத்து, அரைத்துக் கண்களில் இரண்டு சொட்டு வீதம் விடவும்.

### அளவு :

பூத அங்குசமான கலிக்கம் சிறு கலிக்கம் இந்த இரண்டு வகைகளுக்கும் கண்களில் 2 சொட்டு அல்லது 3 சொட்டு வீதம் விடவேண்டும்.

### அனுமானம் :

மேற்படி கலிக்க மருந்தை எலுமிச்சம் பழச்சாறு அல்லது இள வெந்நீர் விட்டு உரைத்து 3 சொட்டு வீதம் கண்களில் விடவும்.

**தீரும் வியாதிகள் :**

பூத, பிசாசு, பாம்பு, விஷம், விஷ சன்னி, பிற யிசுவும் எவ்விதக் காமாலை சோகை அனைத்து சுரம் அனைத்துத் தலை நோய்கள் அனைத்து கண்ணோவுக்கும் வெள்ளை முத்து, சீத சுரம், வாத சுரம், ஆணை வியாதி, குதிரை வியாதி இவைகள் தீரும்.

**பத்தியம் :**

இந்தக் கலிக்கம் விட்டதினால் உடல் உணர்வுகள் ஏற்பட்டு அதிகமான அளவிற்குப் பேதியாகும். அதனை மட்டும் கட்டுப் படுத்த மோர் சாதம் சாப்பிட்டால் போதுமானது.

# பெண் ஆசை அதிகரிக்கும் மருந்து

**பாடல் எண் : 120**

பெண் பியால மருந்து கிளிஞ்சிற்குள்ளே யிருக்கிற பூச்சியை
......... பொரிச்சு அது விட்டு உருகின சாறு எடுத்து
கையில் சாரித்து வெத்திலை சுறுளிடவும்.

**விளக்கம் :**

முறளக் கிளிஞ்சிற்குள்ளே இருக்கிற பூச்சியைத் திறந்து அதன் உள்ளே பொரித்த வெங்காரத்தைப் போட்டுச் சிறிது நேரம் கழித்து வரும் சாற்றை வடித்து எடுத்துக்கொண்டு வெற்றிலை பாக்கு சுண்ணாம்புடன் தடவிக் கொடுக்கவும். இப்படி 5 நாள்கள் செய்தால் போகம் அதிகம் ஆகும். அதிகமான உடல் உறவிற்கு அதிகமான வலுவுடன் இருக்கலாம்.

# எரிப்புக்கும், கல்லடைப்புக்கும் மருந்து

**பாடல் எண் : 121**

ஏலரிசியும் தேங்காயிப் பூவும் வென்னீரிலரைத்துக்
குடிக்கவும்
நெரிஞ்சி வேர் மாவிலங்கம் வேர் சிறு பூளை
வேர்யிவை
மூணும் அரைத்துத் தண்ணீர் விட்டு ஒழுக்கா
காச்சிக் குடுக்கவும்
கல்லு விழும்.
எரிப்புக்கு நெரிஞ்சிகாயி, வெள்ளாட்டு
வெண்ணையில்
கொழப்பி ஒரு சிரங்காயி முழுங்க விடும்.

**விளக்கம் :**

மனித உடலில் அதிக உஷ்ணம் ஆகி இதனால் பல தொந்தரவுகள் வருகின்றன. சீசபேதி, காய்ச்சல், தலைவலி, இருமல், சிறுநீர் எரிப்பு இவை வருகின்றன. இப்படி வரும் வியாதிகளில் சிறுநீர் உஷ்ணத்தைப் போக்கும். நெரிஞ்சுகாயி, வெள்ளை ஆட்டு வெண்ணெயில் அரைத்து ஒரு உள்ளங்கை தினம் 3 வேளை வீதம் 5 நாள்கள் சாப்பிடவும். இப்படிச் சாப்பிட்டால் சிறுநீர் எரிப்பு தீரும்.

| | |
|---|---|
| ஏலரிசி | — 25 கிராம் |
| தேங்காய்ப்பூ | — 25 கிராம் |
| நெரிஞ்சு வேர் | — 25 கிராம் |
| மாவிலங்கு வேர் | — 25 கிராம் |
| சிறு பூளை வேர் | — 25 கிராம் |

இவைகளைச் சம பங்கு எடுத்துக்கொண்டு ஒரு புதுப்பானை-யில் போட்டு 1 லிட்டர் தண்ணீர் விட்டு 100 மில்லி வரும் வரை காய்ச்சிக் கிஷாயம் போல் செய்து தினம் 2 வேளை வீதம் 6 நாட்கள் சாப்பிட்டு வந்தால் சிறுநீரில் இருக்கும் கல் கரைந்து போகும். அல்லது சிறுநீர் கழியும்போது வெளியில் வந்து விழுந்துவிடும்.

# மேக வெட்டைக்கு மருந்து

## பாடல் எண் : 122

ரெண்டை துர்பலம் 2 திப்பிலி தூள் பலம் 2
மௌகு தூள் பலம் 2
கல்லுப்பு தூள் பலம் 2 பெருங்காயம் விராகனிடை
2 வகைகளை
அய்ந்தும் கூட்டிக் குடுக்கவும் பத்தியம் கரிப்பு,
புளிப்பு தவிரவும்.

## விளக்கம் :

வெட்டை என்பது உடலைப்பற்றிய வியாதியாகும். வெட்டையில் பலவகை உண்டு. இரத்த வெட்டை, கீழ் வெட்டை, மேக வெட்டை ஆகியவை மனிதனின் சில தீய ஒழுக்கத்தினால் ஏற்படுகிறது. இந்த வியாதியினால் உடம்பில் உள்ள முக்கியமான சத்துக்கள் வெளியாகி உடல் அதிகமாக உஷ்ணம் ஏற்பட்டு உடலில் உள்ள பலம் கெட்டுச் சோர்வு உண்டாகி உடல் மிக மெலிந்து போகும். அதிகமான களைப்பு உண்டாகும். நரம்புத் தளர்ச்சியும், தூக்கமின்மையும் இருக்கும்.

**இதன் நிவர்த்திக்குத் தேவையான மருந்து வகைகள் :**

| | | |
|---|---|---|
| 1. | பெரண்டைத் தூள் | பலம் 2 (70 கிராம்) |
| 2. | திப்பிலித் தூள் | பலம் 2 (70 கிராம்) |
| 3. | மிளகுத் தூள் | பலம் 2 (70 கிராம்) |
| 4. | கல்லுப்புத் தூள் | பலம் 2 (70 கிராம்) |
| 5. | பெருங்காயம் | விராகனிடை — 2 |

இந்த ஐந்து வகைகளையும் நன்றாகக் கலந்து வைத்துக் கொள்ளவும்.

**கால அளவு :**

தினம் 2 வேளை வீதம் 24 நாள்கள் சாப்பிடவும்.

**மருந்து அளவு**

வேளைக்கு 1 கிராம் எடை வீதம்.

**அனுமானம்**

நெய்யில் கலந்து சாப்பிடவும்.

**தீரும் வியாதிகள் :**

மேக வெட்டை, சீழ் வெட்டை, இரத்த வெட்டை, வெட்டைச் சூடு.

**பத்தியம் :**

கசப்பு, புளிப்பு நீக்கவும்.

# தூதுவளை கற்பம்

## பாடல் எண் : 123

தூதுவளை சமூலம் பிடிங்கிவந்து பொடி செய்து
சீலை வடி
கொண்டு பானையில் வைத்துக்கொண்டு யிப்படி
நெய்யில்

கொள்ள உடம்பு பருக்கும். தேனில் கொள்ள
உடம்பு மெலியும்.
வெண்ணெயில் காச்சிக் கொள்ள தாது
விர்த்திக்கும். இப்படி
தேனில் திப்பிலி கொள்ள பிருமல் தீரும்.
வென்னீரில் கொள்ள
சுரம் தீரும். வேப்பஞ்சாத்தில் கொள்ள அகவை
தீரும். புளியெலை
சாத்தில் கொள்ள கருமை தீரும். காடியில் கொள்ள
சூலை தீரும்.
வெத்திலையில் தின்ன வயரு நோவு தீரும்.
பனங்கருப்பட்டியில்
தின்னப் பெரும்பாடு தீரும். கணபதி துணை.

## விளக்கம் :

தூதுவளையின் சமூலத்தைப் பிடுங்கிக் கொண்டுவந்து நன்றாக நிழலில் காயவைத்து இடித்து நன்றாகத் தூள் செய்து துணியினால் வடிகட்டி வைத்துக்கொண்டு கீழ்க் கண்ட வியாதிகளுக்குக் குறித்துள்ள அனுபானத்தில் கொடுக்கப்பட வேண்டும்.

## மருந்து அளவு :

ஒரு வேளைக்கு இரண்டு கிராம் எடை வீதம்.

## கால அளவு :

வியாதிகளுக்குத் தகுந்தாற்போல் தொடர்ந்து மருந்து சாப்பிடவும்.

## தீரும் வியாதிகள்

1. உடம்பு சதையுடன் பருக்க நெய்யில் அனுபானம் செய்து சாப்பிடவும்.

2. உடம்பு பருமனாக இருப்பதைக் குறைத்து மெலிய வேண்டும் என்றால் தேனில் அனுபானம் செய்து சாப்பிடவும்.

3. தாது அதிகமான அளவிற்குச் செய்ய வெண்ணெயில் அனுபானம் செய்து சாப்பிடவும்.

4. இருமல் தீருவதற்குத் தேனும் திப்பிலிப் பொடியுடன் கலந்து சாப்பிடவும்.

5. காய்ச்சல் தீருவதற்கு வெந்நீரில் கலந்து சாப்பிடவும்.

6. அகவை நிவர்த்திக்கு வேப்பஞ்சாற்றில் கலந்து சாப்பிடவும்.

7. உடம்பில் உள்ள கருமை போக்க புளி இலைச் சாற்றில் கலந்து சாப்பிடவும்.

8. சூலை நிவர்த்திக்குக் காடியில் கலந்து சாப்பிடவும்.

9. வயிற்று வலி, வயிறு சம்பந்தமான வியாதிகளுக்கு வெற்றிலைச் சாற்றில் கலந்து சாப்பிடவும்.

10. பெரும்பாடு தீருவதற்குப் பனை வெல்லத்தில் சாப்பிடவும்.

**பத்தியம் :**

வியாதிகளுக்குத் தகுந்தபடி உணவு சாப்பிடவும். நீக்கவும்.

# நீர்க் கடுப்புக்கு மருந்து

**பாடல் எண் : 124**

பச்ச மருக்காரை வேரை பசுவின் பாலில்
அரைத்துக்
குடிக்கத் தீரும். நெரிஞ்சு வேரைப் பசுவின் பாலில்
அரைத்துக் குடிக்கத் தீரும். காடியும் தண்ணீரும்
கலந்து
காச்சிக் குடித்தால் தீரும்.

**விளக்கம் :**

மனிதனுக்கு உடம்பில் அதிக அளவிற்கு உஷ்ணம் அதிகரித்தால் முதலில் கண் எரியும். அத்துடன் சிறுநீர் கழியும் போது நீர் கடுக்கும். இதன் நிவர்த்திக்கு மருந்து

1. பச்சை மருக்காரை வேரை மூன்று கிராம் எடைக்குப் பசுவின் பால் விட்டு அரைத்துத் தினம் இரண்டு வேளை வீதம் மூன்று நாள்கள் சாப்பிடவும்.

அல்லது

2. நெரிஞ்சு செடியின் வேரை மூன்று கிராம் எடைக்கு எடுத்துத் தினம் மூன்று வேளை வீதம் மூன்று நாள்கள் பசுவின் பால் விட்டு அரைத்துச் சாப்பிடவும்.

அல்லது

3. புளித்த காடியுடன் தண்ணீர் கலந்து சூடுபடுத்தித் தினம் இரண்டு வேளை வீதம் 3 நாள்கள் சாப்பிடவும்.

# கண் சிகப்பு மாறுவதற்கு மருந்து

**பாடல் எண் : 125**

சிறுபுள்ளி சாறனை சமூலமும் பிடுங்கி நல்ல
எண்ணையில்
துவச்சுச் சுட்டுப் பொடி செய்து வடிகட்டி
நல்லெண்ணை வாத்து
குழைத்து வட்டாவில் வைத்துக்கொண்டு
கண்ணி விட சிகப்பு மாறும்.

**விளக்கம் :**

கண்ணில் சிகப்புப் புள்ளி அல்லது கண் விழி சிகப்பாக இருந்தால் கீழ்கண்ட முறைகளினால் குணம் அடையச் செய்யலாம். சிறு புள்ளிடி சாறனை இதன் சமூலத்தைப் பிடுங்கிக் கொண்டுவந்து நிழலில் காயவைத்துக் கொண்டு இதனை

நல்லெண்ணெயில் நனைத்து எரிய வைத்து இந்தப் பொடியை நன்றாக வடிகட்டிவிட்டு ஒரு சிட்டிகை அளவு எடுத்து நல்லெண்ணெய் விட்டு நன்றாகக் கலந்து வைத்துக்கொண்டு சிகப்பாக இருக்கும் கண்விழிகளில் மூன்று சொட்டு வீதம் மூன்று நாள்களுக்கு இட்டால் கண்விழி சிகப்பு மாறும். கண்வலி இருந்தாலும் குணம் ஆகும். இது ஒரு கைகண்ட மருந்து ஆகும்.

# போக மருந்து

## (அதிக போக உணர்ச்சி உண்டாக்க மருந்து)

**பாடல் எண் : 126**

போக மருந்து மந்தாரை பிசின் கல்ப்பூரமும்
கூட்டியிழைய
சாரித்து பெண் வள கைய்யை பிடிக்க அவளுக்கு
போகிக்கும்
மருதை மேல் புல்லுருவி வெள்ளாட்டு
கோமியத்திலுரைத்து
வேண்டினவள் மேல் தேக்க வருவாள் முசு
முசுக்கையிலை குதிரை
வாலியிலை சாறு கொண்டுவந்து சாத்தை
வேண்டியவள் தலையித்
தேக்க வருவாள் கோட்டானை அடித்து பிளிந்து
உலத்தி பேய்
கருப்பன் விறகு பேய் கொம்மட்டிக் காய்
மருளுமத்தை விறகு,
குளவி கூட்டு காரு சீரனாராய ஆறும் புது ஓட்டில்
சுட்டு நீராக்கி
யிந்த திரு நீரை ஆயிரம் பேற் மந்தற் கூடி
யிறக்கி விடத்திலே
காற்று வாக்கிலே நின்று விட மயங்கி......படை
முறியும்
யிடி விழுந்த மரத்தை சீராயெடுக்கும்.

**விளக்கம் :**

அதிகமான ஆசைகளுக்கும் மிகுதியான போகம் ஏற்படுவதற்காக அக்காலத்துச் சித்தர்கள் சில மூலிகைகளைக் கொண்டு செய்து பயன் அடைந்து அதனை இந்தச் சுவடிக் குறிப்புகளில் இருந்து நாம் தெரிந்து கொள்கிறோம். அதன் விளக்கத்தையும் சிலவிதமான முறைகளையும் கொடுக்கப்பட்டுள்ளது.

1. மந்தாரைப் பிசின் கற்பூரம் இவைகளைச் சமன் எடை எடுத்து இளகியபடி செய்து தடவிக்கொண்டு பெண்ணின் வலது கையைப் பிடித்தால் அவள் மறுப்புத் தெரிவிக்காது வருவாள் அவளுக்குப் போகம் அதிகரிக்கும்.

2. மருதை மரம் மேல் இருக்கும் புல்லுருவியைக் கொண்டு வந்து வெள்ளாட்டு மூத்திரத்தில் (சிறு நீர்) அரைத்துத் தனக்கு வேண்டியவள் மீது தேய்த்தாலும் தடவினாலும் உன்னிடம் வருவாள், உன்னிடம் ஆசைப்படுவார்கள்.

3. முசுமுசுக்கை இலை ஒரு கைப்பிடி அளவும், குதிரை வாலி இலை ஒரு கைப்பிடி அளவு இந்த இரண்டு விதமான இலைகளை இடித்துச் சாறு பிழிந்து கொண்டு வந்து அந்த சாற்றைத் தனக்கு வேண்டியவள் தலையில் தேய்க்க வருவாள். உன்மீது இரக்கம் கொண்டு வருவாள்.

4. கோட்டான் என்ற பறவையை அடித்துக் கொன்று அதனை இரண்டாக வெட்டி, காயவைத்துப் பேய்க் கருப்பன் விறகு, பேய்க்கொம்மட்டிக்காய் மருளு ஊமத்தை குளவி கட்டிய கூட்டு மண் இவைகள் அனைத்தையும் புதிய ஓட்டில் வைத்துச் சுட்டு சாம்பல் செய்து இந்தச் சாம்பலை (திருநீரை) ஆயிரம் பேர் கூடி இருக்கும் கூட்டமான இடத்தில் காற்று அடிக்கும் போது இந்தத் திருநீரை காற்று வாக்கில் தூவினால் இந்தத் திருநீரை

சுவாசித்தவர்கள் எல்லாருக்கும் மயக்கம் ஏற்பட்டு மயங்கி விடுவார்கள். இதனால் படையாக இருக்கும் கூட்டம் கூடக்கலைந்து விடும். மேலும் இந்தத் திருநீறை இடி விழுந்த மரத்தின் மீது போட்டாலும் மீண்டும் முளைக்க ஆரம்பிக்கும். அவ்வளவு சக்தி வாய்ந்தது ஆகும். இதனை மட்டும் அவசியம் இருந்தால் மட்டும் செய்து பார்க்கவும் என்பது ஆசிரியர் விருப்பம், ஆனால் அக்காலத்தில் சிலர் நம்பிக் கொண்டு தான் இப்படி செய்து பார்த்து இருக்கிறார்கள். இக்காலத்தில் இந்த முறைகளை நாம் சோதித்துப் பார்ப்பது என்பது தேவை இல்லாதது என்பது ஆசிரியர் கருத்து.

# கள்ளி கற்பம்

## பாடல் எண் : 127

கழுதும்பைச் சாறு விட்டு அரைத்து உண்ணட
பண்ணி குளிகை சேத்து
திலதமிட மாத்தான் படை முறியும் பூமுறலு.
கள்ளி வேர் வடக்கே போற வேற் பிடுங்கி வந்து
உலத்திப் பொடி
செய்து வெள்ளாட்டு கோமியத்தில் கொள்ள
சோகை, யிருமல்,
பாண்டு ரோகம், வாதம், வெண்ணொக்காடு,
குன்மம், காமாலை
யிவ்வகை தீரும். வெள்ளாட்டுப் பாலில் கொள்ள
பித்தம் தீரும்.
வெள்ளாட்டு மோரில் கொள்ள அக்கினி
யெழும்பும். இப்படி மனிதற்குக்
குடுக்கவும்.

## விளக்கம் :

கள்ளிக் கற்பத்தின் குணங்களைப் பற்றி இந்தக் கற்பத்தின் மூலமாகக் குணம் அடையும் வியாதிகளைப் பற்றியும் சொல்லப் பட்டு உள்ளது. சிறு கள்ளித் துண்டு எடுத்து இத்துடன் கழுதை தும்பைச் சாறு விட்டு அரைத்து உருண்டை செய்து அதனை மாத்திரையாகச் செய்து தட்டி நெற்றியில் வைத்துக்கொண்டு போனால் மற்றவர்கள் படை அழிந்து விடும். அந்தப் படைக்குப் பயம் வரும்படியும் ஒன்றும் செய்ய முடியாத அளவிற்கும் ஆகி விடும். இது ஒரு வசியமான செயல் ஆகும். கள்ளி வேர் வடக்குத் திசையில் போகிற வேரைப் பிடுங்கி வந்து நிழலில் காய வைத்து நன்றாக இடித்துத் தூள் செய்து துணியைக் கொண்டு வடிகட்டி வைத்துக் கொள்ள வேண்டும்.

## அளவு :

இரண்டு கிராம் எடை.

## கால அளவு :

வியாதிக்குத் தகுந்தாற்போல் நாள்கள் அதிகரித்தும் குறைத்தும் கொடுக்கவும்.

## 1. அனுபானம் :

வெள்ளாட்டுச் சிறுநீரில் கலந்து கொடுக்கவேண்டும்.

## தீரும் வியாதிகள் :

சோகை, இருமல், பாண்டு ரோகம், வாதம், வெண்ணெக்காடு குன்மம், காமாலை இவைகள் குணம் ஆகும்.

## 2. அனுபானம் :

வெள்ளாட்டுப் பாலில் கலந்து கொடுக்கவேண்டும்.

**தீரும் வியாதிகள்**

அனைத்துப் பித்த சம்பந்தமான வியாதிகளும் குணம் ஆகும்.

**3. அனுபானம் :**

வெள்ளாட்டு மோரில் கலந்து கொடுக்கவேண்டும்.

**தீரும் வியாதிகள்**

அதிகமான பசி எடுக்கும்.

# தேத்தாங் கற்பம் செய்யும் முறையும், குணமாகும் வியாதிகளின் விபரமும்

**பாடல் எண் : 128**

தேத்தா மறத்து வேற் பட்டை, காய், யிலை, பிஞ்சு,
யிவகை
ஒலத்தி யிடித்துப் பொடி செய்து அஞ்சும் சமன் கூட்டி
வய்த்துக்கொண்டு
மூன்று விரலக கொண்டது மோரில் கரைத்துக் குடிக்கச்
சுரம் தீரும்
யிப்படி வெங்காயு கூட்டித் தின்ன வாதம் தீரும்.
யிந்த யெளங்காயி
ஒலத்திப் பொடி பண்ணிப் பசுவின் நெயில் ஒரு மண்டலம்
கொள்ள நரை
மாறும் பச்சிலை ரெண்டு ரோகணம் பலிசை மூல
வியாதி
தீரும் அந்தப் பொடியைப் புளி மோரில் கரைத்துக்
குடுக்கக் குடல்
வாதம் தீரும் பழ தீரும் யிது தேத்தால் கற்பம்.

**விளக்கம் :**

தேத்தா மரத்தின் பட்டை, வேர், காய், இலை, பிஞ்சு இவைகளை நன்றாகக் காய வைத்துப் பொடி செய்து துணியைக் கொண்டு வடிகட்டி வைத்துக்கொள்ளவும்.

**மருந்து உட்கொள்ளும் அளவு :** ஒரு கிராம் எடை.

**அனுபானம் :**

1) மோரில் கரைத்துக் கொடுத்தால் சுரம் போகும்.
2) வெங்காயம் இடித்துக் கலந்து சாப்பிட்டால் வாதம் தீரும்.

**பத்தியம் :**

வியாதிக்குத் தக்கபடி உணவு சாப்பிடவும்.

தேத்தா மரத்தின் இளங்காய்களை மட்டும் கொண்டுவந்து காயவைத்து இடித்துப் பொடி செய்து தூள் செய்து துணியினால் வடிகட்டி வைத்துக் கொள்ளவும்.

**மருந்து சாப்பிடும் அளவு** ஒரு கிராம் எடை

**தீரும் வியாதிகள் :**

பசுவின் நெய்யில் கலந்து சாப்பிட்டால் நரை மாறும்.

**மருந்து சாப்பிடும் கால அளவு :**

ஒரு மண்டலம் (48 நாள்கள்)

தேத்தா மரத்தின் இலைகளை மட்டும் கொண்டுவந்து நிழலில் காயவைத்து இடித்துப் பொடி செய்து இந்தப் பொடியைத் துணி கொண்டு வடிகட்டி வைத்துக் கொள்ளவும்.

**மருந்து சாப்பிடத் தேவையான அளவு :**

ஒரு கிராம் எடை.

**தீரும் வியாதிகள் :**

1) நெய்யில் கலந்து கொடுத்தால்உள் மூலம், வெளி மூலம் தீரும்.
2) புளித்த மோரில் கலந்து சாப்பிட்டால் குடல் வாதம் வாய்வுகள் தீரும்.

**பத்தியம் :**

வியாதிகளுக்கு தக்கபடி உணவு சாப்பிடவும்.

# அரணைக் கடிக்கும், தவளைக் கடிக்கும், சொரியான் கடிகளுக்கும் மருந்தும், மந்திரமும்

**பாடல் எண் : 129**

வெளியில் போறபோது மருந்துக்குச் சொல்லுகின்ற மந்திரம்
ஓம் தம, தம, தம, தமயென்று சொல்லிப் போகவும்.
வெட்டுகிற போது விஷமத்து பஞ்சாஷசரிகம் என்று மூன்று
தரம் சொல்லி வெட்டவும். அமுஞ்சி வேரை வடக்கே போற
வேர் வெட்டி பட்டை தட்டிக் கொண்டு பசுவின் பால் வாத்
தரைத்துக் குடுக்கவும். அரணைக் கடிக்கு வெந்நீரில் கொடுக்கவும்
தவளைக் கடிக்கு வெந்நீரிலரைத்துக் கொடுக்கவும். சொரியான்
கடிக்கு வெள்ளாட்டுப் பாலில் குடுக்க பெஞ்சாதியைச் சேராதாருக்கும்
ஒரு கை கண்டது.

**விளக்கம் :**

அக்காலத்தில் மருந்து, மூலிகைகளைக் கொண்டு வருவதற்காக வெளியில் போகும்போதும் மருந்துக்குச் சொல்லுகிற மந்திரம். ஓம் தம, தம, தம என்று சொல்லிப் போகவும். மருந்து மூலிகைகளைப் பிடுங்கும்போதோ, வெட்டும்போதோ விஷமத்து பஞ்சாஷ சரிகம் என்று மூன்று முறை சொல்லி வெட்டவும். இவ்வாறு செய்வதின் பயன் சில விஷக்கடிகளுக்கு நிவர்த்தி செய்யக் கூடிய மூலிகைகளுக்கு மட்டும் இத்தகைய பரிகாரம் ஆகும்.

வடக்குத் திசையை நோக்கிப் போகிற அமுஞ்சி வேரைக் கொண்டு வந்து தட்டி மேல் பட்டைகளை மட்டும் எடுத்துக் கொள்ளவும்.

**மருந்து உட்கொள்ளும் அளவு :**

ஒரு கிராம் எடை அளவிற்கு எடுத்துக்கொள்ளவும்.

**அனுமானமும் தீரும் நோய்களும் :**

1. இந்தப் பட்டையை பசும்பால் விட்டு அரைத்துச் சாப்பிட்டால் அரணைக்கடி விஷம் தீரும்.

2. இந்தப் பட்டையை வெந்நீரில் அரைத்துக் கொடுத்தால் தவளைக்கடி விஷம் தீரும். சொரியான்கடி விஷம் தீரும்.

3. இந்தப் பட்டையை வெள்ளாட்டுப் பாலில் அரைத்துக் கொடுத்தால் பெண் ஆசை இல்லாதவருக்குப் பெண் ஆசை ஏற்படும்.

**பத்தியம் :**

வியாதிகளுக்குத் தக்கபடி சாப்பிடவும், நீக்கவும்.

**மருந்து சாப்பிடும் கால அளவு :**

விஷம் இறங்குவதற்குத் தகுந்தாற் போல் மருந்து சாப்பிடவும்.

# கண் திருஷ்டி, ஓமல், ஏவல், பில்லி சூனியங்கள் நிவர்த்திக்கு

**பாடல் எண் : 130**

பார்வை வெட்டு, குத்து அராமல், குளிகை
கீழா நெல்லி
வேர் வலது கையுள்ளாக மூன்று தரம் சுற்றி
வந்து கும்பிட்டுச்
சூரியனை மூன்று விழுந்து கும்பிட்டு வேரறாமல்
பிடுங்கி ஞாயித்துக்
கிழமை நாள் பிடுங்கி ஆவாரைக் கொழுந்து ஏழு
செடியிலே ஏழு
கொழுந்து பிடுங்கி, கருகுங்கிலியம் பணம்
அரைக்காலுக்கு
வாங்கிக் கூடப்போட்டு, சிறுநீர் விட்டு அரைச்சு
தக்காளி
போல் உருண்டை பண்ணிக் கையிலிருக்கவும்.
வெட்டுக் குத்து அராது
ஆராகிலும் பார்வை, பில்லிகள் போம். இது
கை கண்டது
முலைப்பாலின் உரைத்துக் கொடுக்கப் பார்வை
வெடிபில்லி
போம் இது கை கண்டது.

**விளக்கம் :**

மனிதனுக்குச் சில ஓமல், பில்லி, சூனியம், கண் திருஷ்டி, இவைகள் ஏற்படும். அதனை நிவர்த்தி செய்யக் கீழாநெல்லி வேரை வலது கையுள்ளாக வைத்துக் கொண்டு மூன்று தரம் சுற்றி வந்து சூரியனைப் பார்த்து மூன்று தரம் வந்து விழுந்து சாமி கும்பிட்டு வந்தால் கண் திருஷ்டி, சில ஓமல், பில்லி, நீங்கும்.

ஆவாரை ஏழு செடிகளில் ஏழு கொழுந்து ஞாயிற்றுக்கிழமை நாள் அன்று பிடுங்கிக் கொண்டு வந்து இத்துடன் கரு குங்கிலியம் 10 கிராம் எடை சேர்த்து இதனைச் சிறுநீர் விட்டு அரைத்துத் தக்காளிப் பழம் அளவிற்கு உருண்டையாகச் செய்து கொண்டு வைத்துக்கொண்டால் பில்லி, சூனியம், பார்வை, வெட்டு குத்து இவைகள் நீங்கும். மேலும் இந்த மருந்தை முலைப்பாலில் உரைத்து உள்ளுக்குக் கொடுத்தால் சில பயந்த குணம், ஏவல், ஓமல், கண் திருஷ்டி நீங்கும். உத்தாமணி இலைச்சாற்றை எடுத்து ஒரு நாளைக்கு ஒரு பக்கமாகக் குத்தினால் அதாவது கையில் (பச்சை குத்தல்) இந்தப் பக்கம் குத்திய இடத்தில் சற்று தள்ளி ஏழாம் நாள் குத்தினால் பச்சை குத்திய இடம் நன்றாக இருக்கும். நன்றாகத் தெரியும். இது எல்லாம் ஒரு விநோத செயல் ஆகும்.

அவசியம் இருப்பின் செய்வதுதான் நல்லது. அக்காலத்தில் சித்தர்கள் சில மூலிகைகளின் குணத்தையும் தன்மைகளைப் பற்றியும் நமக்குத் தெரிவிக்க இப்படிப்பட்ட முறைகளைச் செய்து பார்த்து நமக்குச் சுவடிகளின் மூலமாக எழுதி வைத்து இருக்கிறார்கள்.

# கோரோசனை கற்பம்

## செய்யும் முறையும், குணமாகும் வியாதிகளின் விபரமும்

### பாடல் எண் : 131

கோரோசனை கற்பம் யிருந்து செவிக்க மந்திரம்
ஆல்லோக்கி
தாய அருணகிரி சுவாகா என்று உயக செவித்துக்
கொண்டு தேவியை
நம விகாரித்துக் கொண்டு வித்தை சாரிதம்தா
வேணுமென்று அம்மய்யை

வேண்டிக் கொண்டு யிந்த கோரோசினை யெடுத்து வய்த்து யிந்த

மந்திரம் செர உயக உரு செபித்து நெத்தியிலிட்டுக் கொள்ள நினைத்த

தெல்லாம் தரும் நினைத்த காரியம் முடியும். உயக உரு செவித்து

முளங்காலக் கீளே தடவி நெருப்பில் நடக்க சுடாது. உயக—உரு

செவித்து உச்சன் தலையிலிட பிறனை வேசியாம்—உயக —உரு செவித்து நெத்தி

யிலிட பேச்சுகள் யேறி பேசிப் போம் உயக — உரு செவித்து கையில்

தடவ வசம் உயக — உரு செவித்துச் சிவந்த பெண்டாட்டி முலைப்பாலி

லரைத்துத் தண்ணி விட ராத்திரி பகலாத் தோன்றும் உயக செவித்து

தண்டில் பூசிப் புணர சாகந்தனையும் போகாது. விடாள் உயக—உரு

செவித்துக் கையில் தடவி அக்கினி யெடுக்க அக்கினி தம்ணம் — உயக

உரு செவித்து உடம்பில் பூசி 2 பலம் உயக செவித்து காலில் தடவி

நடக்க நெடுந்தூரம் போகலாம் பத்திரகாளியே நமவிக்காறம்.

**விளக்கம் :**

ஆல்லோக்கிய தாய அரணகிரி சுவாகா என்று 21 முறை செவித்துக்கொண்டு தேவியை வணங்கிக்கொண்டு வித்தை சாரிதமாதா வேணுமென்று அம்மையை வேண்டிக்கொண்டு இந்தக் கோரோசினையை எடுத்து வைத்து இந்த மந்திரம் 21 முறை செபித்து நெற்றியில் இட்டுக்கொண்டு போனால் நினைத்த காரியம் எல்லாம் கைகூடும்.

மேற்படி கோரோசனையை 21 முறை செபித்து முழங்கால் கீழ் தடவிக்கொண்டு நெருப்பில் நடந்தால் சுடாது.

மேற்படி கோரோசனையை 21 தடவை செபித்து உச்சந்-தலையில் தடவிக்கொண்டால் உயிர்மாற்றம் வேசியமாம்.

மேற்படி கோரோசனையை 21 முறை செபித்து நெற்றியில் இட்டுக்கொண்டு போனால் பேச்சுகள் ஏறி அதிகமாகப் பேசலாம்

மேற்படி கோரோசனையை 21 முறை செபித்துக் கையில் தடவிக்கொண்டால் வசியம்.

மேற்படி கோரோசனையை 21 முறை செபித்துக் கொண்டு கையில் தடவிக்கொண்டு நெருப்புச் சட்டியைக் கையில் எடுத்து வைத்துக்கொண்டால கையில் நெருப்பு சுடாது.

மேற்படி கோரோசனையை 21 முறை செபித்து உடம்பில் பூசிக்கொண்டு வெய்யில், குளிர் இவைகளில் நடந்தாலும் இவை இரண்டும் தெரியாது.

மேற்படி கோரோசனையை 21 முறை செபித்துக் கொண்டு காலில் தடவிக்கொண்டு எவ்வளவு தூரம் நடந்தாலும் தூரம் தெரியாது நடக்கலாம். இது ஒரு விந்தையாகும்.

# நண்டுவாக்கிலி கடிக்கு மந்திரம்

## பாடல் எண் : 132

கிண கிண கிணபதி, கிண னெ கிண உள்ளுக்கு
மருந்து மஞ்சள்
தின்ன மஞ்சள் பூச மீளும் வாசிங்கி பொசிங்கி வாப்
பிறசிங்கிக்
குறிசிங்கி என்று மீராக்கவும்.

## விளக்கம் !

கிண, கிண, கிணபதி கயினெ கிண கணக்கு மருந்து மஞ்சள் தின்ன மஞ்சள் பூச மீளும் வாசிங்கி, பொசிங்கி, வாப்பிறசிங்கிக் குறி சிங்கி என்று மீராக்கவும். (நட்டுவாக்கிலி கடித்தால் மருந்து சுனைப்புல்லும் உள்ளி வசம்பும் போட்டுச் சிறுநீரில் துவைத்த சாறு கொண்டு உள்ளுக்குக் கொடுக்க மூக்கின் வழியாக நசியமிட்டுத் துவலையிடவும்).

# தேள் கடிக்கு மந்திரம்

## பாடல் எண் : 133

பீசானகி, விசான், கிராம் பாண மாக்கினி

**விளக்கம் :**

இந்த மந்திரத்தை 9 தடவை சொல்லிக் கொட்டிய இடத்தில் கையால் தடவவும். இப்படித் தினம் 2 வேளை வீதம் 3 நாள்கள் செய்ய வேண்டும்.

# மூச்சுப் பிடிப்பிற்கு மந்திரம்

## பாடல் எண் : 134

மெய்யோ வாரை உன மூச்சொரு புழனா னொரு -
வெட்டை வாளி உன்னிற மென்னிறமாக

**விளக்கம் :**

இந்த மந்திரத்தை 9 தடவை சொல்லிக் கொண்டு மூச்சுப் பிடித்த இடத்தில் கையில் தடவிக்கொண்டு மேற்படி மந்திரத்தைச் செபிக்கவும். தினம் 3 வேளை செய்யவும்.

# கண் வலிக்கு மருந்து

## பாடல் எண் : 135

உத்தாமணியிலை கண் மாத்தி மறு பாகத்தில் ஆறுனாள்
ஏழுனாள் பிழியவும்.

**விளக்கம் :**

உத்தாமணி கொடியின் இலைகளைக் கொண்டுவந்து சாறு பிழிந்து ஆறு நாள்களுக்கு ஒரு கண்ணிலும், ஏழு நாள்களுக்கு ஒரு கண்ணிலும் 3 சொட்டு வீதம் விடவும். கண் வலி நீங்கும்.

# மற்றவர் கண்களுக்குத் தெரியாது செய்யும் வினோதம்

## பாடல் எண் : 136

ஊாணுக்கு கொண்டவள் கவுறெத்து ரிஷிபத்தினி
சாணியெண்டுவே
வயித்து உண்டை பிடித்து திருநீறாகச் சுட்டு வய்த்துக்
கொண்டு படை முகத்திலே
போனால் னெத்தியிலும் மேலும் பூசிக்கொண்டு
போகவும் மாத்தாறுக்குக் கண்
தெரியாது யிது கை கண்டது.

**விளக்கம் :**

அடக்கம் உள்ள பெண்ணின் பழைய தாலிக் கயிற்றைக் கொண்டுவந்து பசுவின் சாணத்தில் வைத்து உருண்டை செய்து காயவைத்து இதனைத் திருநீறாகச் சுட்டு இந்தத் திருநீறை நெற்றியில் வைத்துக்கொண்டு போனால் படையும் கண்ணுக்குத் தெரியாது. இந்தத் திருநீறை உடம்பில் பூசிக்கொண்டு போனாலும் மற்றவர் கண்களுக்குத் தெரியாது. இது ஒரு வினோதமானது.

# மற்றவர்களுடன் பிரிவு செய்யும் வினோதம்

## பாடல் எண் : 137

பிறிவுக்கு யேழு வீட்டில், யேழு மௌகு யெடச்சி,
கள்ளிச்சி,
வெட்டிச்சி, தச்சச்சி, வலச்சி, முதலிச்சி,
வெள்ளைச்சியும்
எசாதி வீட்டிலும் ஏழு மௌகு வாங்கி ஒதி அந்த
வீட்டில் போட

சோதிடு சிறு மிளகு கொடி யேளு காயி
காயிப்பாயி தேனிலும்

கண்டு யிடுவாய் முத்து மெரிக்க முக மெரிக்க
மூதானை வாழ்வாள்

குட்டிச் சேர்வாள் வரரானட்டாத்து கோரையாவாள்
னடு கடலில்

காஞ்சிறையாவாள்.

பெட்டை குதிரையிற் பெண்மைப் பெருப்பாள்
பிறகிடை பெருப்பாள்

யின்னாள் மகள யின்னாளுக்கு மிள கொதிப்
பொடனே யிவளைக் கொண்ட

யின்னா வில்லுங் காக்காயுமாவான். சாரை சாரைக்
கண்டன்

வியர்வான அவனை முகர்ந்தவன் சுவரை முகப்பான்
சுவரும் சுண்ணாம்பு

ரானாறு மது, ஓம்ங்காளி ஓம், பிடாரி ஓம் னம
சிவாய அந்த

மிளகு ஓதிப் போட பிறியும்.

## விளக்கம் :

இந்தப் பாடலில் மற்றவர்களைப்பிரியும்படி வசிகரம் செய்வதற்கான பரிபாஷை சொற்கள் சொல்லப் பட்டிருக்கின்ற காரணத்தினால், இக்காலத்திற்கு இதற்கான விளக்கம் தேவையில்லை என்பதனைவாசகர்களுக்கு அன்புடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

# கோழி விநோதம்

## பாடல் எண் : 138

கோழி வினோதம்: வசியம்

செம்போத்து எச்சம் சோத்தில் கலந்து கோழிக்கு
மெக்கா கஈ காகும் பிறகு எள்ளுப் புண்ணாக்குக் கரைத்து
மேலே தெளிக்க விளைக்கும். கரிப்பாலை பாலும் வெட்டி
வேற் பச்சை புனுகு கற்பூரமும் பூசி புணர சலகட்டான
வளுக்கு தன் வசம் யறியதன் கழுதும்பை சாத்திலேற சாத்தை
மறத்தி கையில் தடவிக் கொண்டு அவள் கையு வாயு பிடிக்க
அவளுக்கு போகிக்கும்.

**விளக்கம் :**

செண்பக பருந்தின் மலத்தைச் சாதத்தில் சேர்த்துக் கலந்து கோழிக்குப் போட்டு மேய்க்கவிட்டால் கோழிகள் இந்த சாதத்தை சாப்பிட்டு விட்டு இறந்துவிடும். உடன் எள்ளுப் புண்ணாக்கைத் தண்ணீரில் கரைத்துக் கோழிகளின் மேல் தெளித்தால் மீண்டும் கோழிகள் உயிருடன் இருக்கும். இது ஒரு வினோதம்.

# குளிர் சுரத்திற்கு மூன்று முறைக்கான மூலிகை மருந்து

## பாடல் எண் : 139

குளிர் சொரத்துக்கு மூனு முறைக்கி மூலிகை
அதி மதுரம்
விராகனிடை (க) உள்ளி பலம் மூனு மொளகு
( )
திப்பிலி ( ) வேலி பருத்தியிலை (ரு) இவைகளை
அரைத்து மூனு உண்டை பண்ணிக் குடுக்கவும்
மூனு னாள்
குடுக்கவும். புளி, புகையிலை மோர் னெய்
யிவை தள்ளவும்.
னாகவல்லியிலை ( ) கள்ளிக் கொழுந்து
வயித்து ( )
மடியாக மடிச்சு னரிச்சு வரும்போது மூனு மடிப்பு
குடுக்கவும். கையில் புங்கள் துக்குர் தெரியாமல்
கசக்கி
னெல்லிக் காய் அளவு பொட்டணமாகக் கட்டி
ஆக்கிரும்
பண்ணுவும் மூனு முறை தீரும்.

**விளக்கம் :**

சுரங்களில் இது ஒரு வகைப்படும். உடல் அதிகமான சூடாக இருந்து கொண்டு அதிக உடல் வலியுடன் அதிகக் குளிர் நடுக்கத்துடன் இருந்தால் இதனைத்தான் நாம் குளிர் சுரம் என்று சொல்வது உண்டு. இதற்கு மூன்று முறை மூலிகையுடன் சிகிச்சை செய்யலாம்.

அதிமதுரம் விராகனிடை (க) ஒன்று
(எடை 35 கிராம்)

உள்ளி — பலம் மூன்று (எடை 105 கிராம்)

மிளகு — பலம் மூன்று (எடை 105 கிராம்)

திப்பிலி — பலம் மூன்று (எடை 105 கிராம்)

வேலிப்பருத்தியிலை பலம் மூன்று (எடை 105 கிராம்)

இவைகளை நன்றாக அரைத்து மூன்று உருண்டை செய்து மூன்று நாளைக்குக் கொடுக்கவும்.

## இரண்டாம் முறை :

நாகவல்லி இலை — பலம் மூன்று (எடை 105 கிராம்)

அகில் இலை — பலம் மூன்று (எடை 105 கிராம்)

கொடி கள்ளி கொழுந்து — பலம் மூன்று (எடை 105 கிராம்)

இந்த மூன்று இலைகளையும் நன்றாக மடித்துக் கசக்கி இந்த மடித்த இலைகளை மூன்று மடிப்பு மடித்துக் கொடுக்கவும். இப்படி மூன்று நாள்கள் கொடுக்கவும்.

## மூன்றாவது முறை :

கையில் புங்கத்துக்குத் தெரியாமல் கசக்கி நெல்லிக்காய் அளவு பொட்டணமாகக் கட்டி உணவு சாப்பிடும் போது சேர்த்துச் சாப்பிடவும்.

## பத்தியம் :

புளி, புகையிலை, மோர், நெய் இவைகளை நீக்கவும்.

## தீரும் வியாதிகள் :

குளிர் சுரம் தீரும்.

# கோரப் பெரியான் சொன்ன லேகியம்.

**பாடல் எண் : 140**

கோறப் பொரியள் சொன்ன லேகியம் எருக்கன்
செடியை வேருடனே பிடிங்கி வந்து சிறு கனாக்கி
காஞ்ச பிறகு கொல்ல னுலையில் குவித்து அதிலே
அஞ்சு பலகறை போட்டுத் துரித்துக் கொண்டு
ஊதிச்
சுட்டுச் சாம்பலாக்கி, அந்தச் சாம்பலை,
வெள்ளைச்
சீலையிலே முடிந்து வச்சுக் கொள்ளவும்,
வேண்டிய
நேரத்தில் சத்தெடுத்து யிருப்புச் சிமிளிலே
போட்டு
அதிலே பச்சை புனுகு, பச்சைக் கற்பூரம் கூடப்
போட்டு எலுமிச்சம் பழச்சாறு வாத்து சாரித்து
தண்டில் பூசி உரை விட்டு புணரவும் யிது கை
கண்டது
யிதுக்கு மாத்து எலுமிச்சம் பழந்திண்ணவும்
போகிக்கும்.

**விளக்கம் :**

எருக்கன் செடியை வேருடன் பிடுங்கி வந்து சிறு துண்டு களாக வெட்டி நன்றாகக் காயவைத்து அதனை ஒரு பக்கமாகக் குவித்து வைத்துக் கொண்டு இந்த வெட்டிய துண்டில் ஐந்து மட்டும் எடுத்து கொண்டு ஊதிச் சுட்டுச் சாம்பல் செய்து இந்த சாம்பலை ஒரு துணியில் முடிந்து வைத்துக் கொள்ளவும். இதில் கொஞ்சம் சாம்பலை எடுத்து இரும்பு சிமிழியில் போட்டு அதில் பச்சைப் புனுகு, பச்சைக் கற்பூரம், எலுமிச்சம் பழச்சாறு விட்டு அரைத்து நன்றாகக் கலந்து தண்டில் பூசிக் காய்ந்த பிறகு உடல் உறவு கொண்டால் அதிகபடியான நேரம் ஆசைகள் இருக்கும். இதனை முறிக்கை மாத்து மருந்து எலுமிச்சம் பழத்தைச் சாப்பிட்டால் போகம் கட்டுப்படுத்தும்.

# இரத்தக் கடுப்புக்கு மருந்து

## பாடல் எண் : 141

ரத்தக் கடுப்புக்கு வெள்ளைச் சீலையும் மின்னாள்
மினிக்கி
கிழங்கும் சமனாக அரைத்து எள வென்னீரில்
கொள்ளவும்
வென் கடுப்பு, ரத்தக் கடுப்பு தீராத கடுப்பு தீரும்.

**விளக்கம் :**

வெள்ளைச் சீலையும் (துணியும்) மின் நான் மினிக்கி கிழங்கு இவை இரண்டையும் சமன் எடை எடுத்துக் கொண்டு இளம் வெந்நீரில் அரைத்துத் தினம் 3 வேளை வீதம் 6 நாள்கள் சாப்பிட்டால் தீரும்.

**பத்தியம் :**

காரம், இனிப்பு, இவைகளை நீக்கவும்.

**தீரும் வியாதிகள் :**

இரத்தக் கடுப்பு, தீராத கடுப்பு, வயிற்று எரிச்சல், வலி இவைகள் தீரும்.

# குளிர் சுரத்துக்கு மருந்து

## பாடல் எண் : 142

குளிர் சுரத்துக்குத் தும்பையிலை களச்சிக்
காயளவு, மிளகாய் ஒண்ணு யிலை ரெண்டும்
அரைத்து மூணு உண்டை பண்ணி யிந்தட்டி
மூணுனால் குடுக்கவும். பத்தியம்

**விளக்கம் :**

தும்பையிலையை நான்கு கிராம் எடைக்கு எடுத்து இத்துடன் ஒரு மிளகாய் வைத்து இந்த இரண்டையும் நன்றாக அரைத்து மூன்று உருண்டை செய்து மூன்று நாளைக்குச் சாப்பிடவும்.

**பத்தியம் :**

புளி, புகையிலை, மோர், நெய் இவைகளை நீக்கவும்.

**தீரும் வியாதிகள் :**

குளிர் சுரம் தீரும்.

**மருந்து சாப்பிடும் காலம் :**

ஒரு நாளைக்கு ஒரு வேளை வீதம் மூன்று நாள்கள் சாப்பிடவும்.

# மூட்டை பூச்சி ஒழிக்க மந்திரம்

**பாடல் எண் : 143**

மூட்டைப் பூச்சிக்கு: வீட்டில் சொருக சீட்டு வயனம்
மூட்டை
போம். அவ்வியனே எஞ்சத்தான் ஆக்கமும்
செவியான் கெடுமி
மப்பில கெடும். திருசூலி என்று எழுதவும் னாலு
சீட்டில் ( )
வீடாக எழுதி அதியிந்த பாட்டை விட்டால் ஒரு
எழுத்தாக
எழுதி வினாகன் முன்வச்சு என வேதியம் பண்ணித்
தூப தீபம்
கொடுத்து ஒரு சீட்டு எரிஞ்சு போட்டு மூணு
சீட்டை
மூணு மூலை கட்டவும் மூட்டை போம்.

**விளக்கம் :**

வீட்டில் உள்ள மூட்டை பூச்சிகளை ஒழிக்க நாம் பலவித முயற்சிகளை எடுத்துப்பயன் இல்லை என்றால் இந்த மந்திரத்தையும் இந்த விளக்கத்தையும் நன்கு படித்து இதன்படி செய்தால் மூட்டைப்பூச்சியை ஒழித்து விடலாம். அவ்வியனே எஞ்சத்தான் ஆக்கமும் செவியான் கெடுமி மப்பில கெடும். திருசூலி என்று நான்கு சீட்டில் எழுதவும். பிறகு 32 கட்டமாக இந்த மந்திரத்தை தனித் தனியாக எழுதிப் பிள்ளையார் முன்பு வைத்துத் தீப தூபம் கொடுத்து நைவேத்தியம் செய்து இந்த நான்கு சீட்டுகளில் ஒன்று மட்டும் எடுத்து தீ வைத்து கொளுத்தி விட்டுப் பாக்கி மூன்று சீட்டுகளை வீட்டில் மூன்று மூலைகளில் கட்டினால் மூட்டை பூச்சி ஒழிந்து விடும்.

**சீட்டில் எழுதும் முறை :**

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| அ | வ | வீ | ய | லி / ண | ம | ச | தி |
| த | ன | லு | க்கா க ள | சுகா | மு | ம | செ |
| வி | ய ா | ன | கெ | டு | மி | ம | ப |
| டி | ல | னெ ரு | ரு | ம் | தி | ரி | சூலி |

# குழந்தை பாக்கியம் இல்லாத பெண்களுக்கு எண்ணை ஓத மந்திரம்

**பாடல் எண் : 144**

மழலை பெற மாட்டாத பேருக்கு எண்ணை ஓத
மந்திரம்

கும்பந்திரும்ப, குடந்திரும்ப அங்கள் திரும்ப
ஆகாசன் திரும்ப,
பதுக்கை திரும்ப துக்கை கையிலிருக்குற சூலம்
திரும்ப, சுடுகாடு
திரும்ப, சுடுகாட்டிலிருக்கிற பேய் திரும்ப,
பேயின் கைய்யிலி
ருக்கும் பிள்ளை திரும்ப, ஓம்காளி, ஓம் பிடாரி
ஓம்ருப
சிவாயம் இந்த மந்திரம் ஆமணக்கெண்ணையில்
மந்திரிச்சிக்
குடுக்கவும். குடிக்க சீவன் இல்லாமல் போனால்
வயித்திலே
தடவவும். பிள்ளை பிறக்கும்.

**விளக்கம் :**

திருமணம் ஆகிக் குழந்தை பாக்கியம் இல்லாத பெண்களுக்கு ஆமணக்கு எண்ணெயில் கும்பந்திரும்ப, பதுக்கைத் திரும்ப, துக்கை கையிலிக்கிற சூலம் திரும்ப, சுடுகாடு திரும்ப, சுடுகாட்டில் இருக்கிற பேய் திரும்ப, பேயின் கையிலிருக்கும் பிள்ளை திரும்ப ஓம் காளி, ஓம் பிடாரி, ஓம் ருப சிவாயம் என்ற இந்த மந்திரத்தை மூன்று தடவை சொல்லிக்கொண்டு ஆமணக்கெண்ணெயை நன்றாகக் கலக்கி ஒரு உள்ளங்கை அளவும் காலை வேளையில் சாப்பிடவும். உடம்பில் பலம் சக்தி இல்லாது இருந்தால் வயிற்றில் தடவினால் கற்பம் தரிக்க வாய்ப்பு உண்டு. இதனை அக்காலத்தில் நம்பித்தான் செய்து உள்ளார்கள்.

# குழந்தை உண்டாக மந்திரம்

**பாடல் எண் : 145**

இந்திரன் காடுவெட்டி இமையவன் வெட்டி
துளிக்க அருமைந்த
செக்குலே எள்ளாட்டி எண்ணையைக் கீறி அவள்
நெத்திலிட்டு
அவள் மத்துப்போலே மலர்ந்து இவள் செக்கு
போலே
திரும்ப வேணும் ஓம் காளி, ஓம் பிடாரி, ஓம்
நமச்சிவாயம்
இந்திரன் துங்கை மந்திரகுமாரி, இருப்புக்
குடங்கொண்டு
தண்ணீர்க்கப் போனால் அக்குடம் வாங்காட்டி
கீழே விழ விழ
சுவாமியானை விழச் சுவாகா ஆங்கம் திறக்க
ஆரவனையான்
தாள் திறக்க லிங்கந்திறக்க சுவாகா வாசி
படந்த
பன்னீர்க் குடத்தில் இதை மூக்கி விழுந்தால்
போல இவளவியத்தில்
மாதுங் கோடியும் விழுங்க சுவாகா.

**மந்திர திருத்தம் :**

இந்திரன் காலை வெட்டி இமையவன் தாள் துளிக்க அருமைந்த செக்குலே எள்ளாட்டி எண்ணையைக் கீறி அவள் நெற்றியில் இட்டு அவள் மத்து போலே மலர்ந்து, இவள் செக்குப்போலே திரும்ப வேணும் ஓம் காளி, ஓம் பிடாரி, ஓம் நமச்சிவாயம் இந்திரன் துர்க்கை மந்திர குமாரி இருப்புக் குடங்கொண்டு தண்ணிக்கிப் போனால் அக்குடம் வாங்காட்டி இங்கு விழ, விழ சுவாமியானை

விழச் சுவாகா. அங்கம் திறக்க அரவணையான் தாள் திறக்க லிங்கந்திறக்க சுவாகா பாசி படந்த பன்னீர்க் குடத்தில் அமுக்கி விழுந்தால் போல இவள வியத்தில் மாசுங் கொடியும் விழுங்க சுவாகா.

# குருப் பெரியான் சொன்ன வைபளம்

## [காமம் ஊறுவதற்கு மருந்து]

**பாடல் எண் : 146**

கோரோசனை ததி கற்பூரம் திரும்பு பச்சை புனுகு
செல்லாம் கொம்புத் தேன் விட்டுரைத்துச்
சிமிளிலடைத்துக்கொண்டு
தண்டில்பூவில் தடவிப் புணரவும், தலம்
அதிகரிக்கும், வலிய
தம்பணத்துக்கு மருந்து பூனைக்காவி விரை
கொண்டு வந்து தலை
யிந்து வெள்ளாடு கடாய்க்குட்டி போட்ட
ஆட்டுப்பாலில், ஆவாரை
விறகு கொண்டு வந்து வேக வைத்து மூன்று
வேளை தின்று
பாலுஞ்சாதமும் சாப்பிட்டுப் படுக்க வலிவுண்டாம்
நாற்பத்தெட்டு
னாள் நரைமாறும் மைது காண்பியாது
தம்பணமுண்டாம்.

**விளக்கம் :**

### அதிகமான காமம் ஊறுவதற்காக மருந்து:

1. கோரோசனை — ஒரு கிராம்
2. கற்பூரம் — ½ கிராம்
3. கிராம்பு — ½ கிராம்
4. பச்சைப் புனுகு — ½ கிராம்

இவைகளைக் கொம்புத்தேன் விட்டு அரைத்து ஒரு டப்பியில் வைத்துக் கொண்டு தண்டில் முன் பாகத்தில் இதனைத் தடவிச் சற்றுக் காய்ந்தப் பிறகு உடல் உறவு கொண்டால் வலிவு அதிகரித்து வலிமையான உடல் உறவு இருக்கும்.

## அதிகமான உடல் உறவுக்காக

10 கிராம் பூனைக்காவி விதைகளின் மேல்தோல் நீக்கி விட்ட இந்த விதைகளை வெள்ளாட்டுப் பாலில் போட்டு ஆவாரை விறகு கொண்டு வேகவைத்து மூன்று வேளை சாப்பிட்டு வரவும். இத்துடன் பால் சாதமும் சாப்பிட்டு உடல் உறவு கொண்டால் மிக வலிமையாக இருக்கும். இப்படி 48 நாள்கள் தொடர்ந்து சாப்பிட்டு வந்தால் நரை மாறும். வயதும் குறைத்துக் காண்பிக்கும். இது ஒரு கைகண்ட மருந்தாகும்.

# அதிக தம்பணத்துக்கு மருந்து

**பாடல் எண் : 147**

வெள்ளெருக்கம் பஞ்சைத் திரியாகத் திரிச்சி நெயிலே துவைச்சு
விளக்கேத்த அதிக தம்பணம்.

**விளக்கம் :**

வெள் எருக்கன் பஞ்சைத் திரியாகத் திரிச்சி இந்தத் திரியை நெய்யில் நனைத்து விளக்கு எரித்து இந்த மையான பசையை தண்டில் தடவி புணர்ந்தால் அதிகமான உலல் உறவு ஏற்படும்.

# வீரிய தம்பணத்துக்கு மருந்து

**பாடல் எண் : 148**

ஊக்குறுட்டி தக்காளிச்சாறும், பாலும்
நெய்யுங்கூட்டிக் குடுக்கவும்.

**விளக்கம் :**

அதிகமான தம்பணத்துக்கு உட்கொள்ளும் மருந்தினால் உடல் உறவு இன்பமாக இருக்கும். ஊக்குறுட்டி, தக்காளிச் சாறும், பாலும் இவைகளை நன்கு அரைத்து நெய்யில் தினம் இரண்டு வேளை வீதம் 24 நாள்கள் சாப்பிடவும்.

# அதிகமான வலிமைக்கு மருந்து

**பாடல் எண் : 149**

தாது வந்தினைக்கு: முந்திரிப்பழம், நெய்யிலே
வேக வைத்துச் சக்கரையில் தின்னவும் தாது
வாழ்த்திக்கும்: தம்பண வசீகரத்துக்கு ஆகும்.

**விளக்கம் :**

தினம் 3 முந்திரிப்பழத்தை வெட்டித் துண்டுகளாகச் செய்து இதனை நெய்யில் வேகவைத்துச் சர்க்கரை கலந்து சாப்பிடவும். இப்படி 48 நாள்கள் சாப்பிடவும். இப்படிச் சாப்பிட்டு வந்தால் அதிகமான உடல் வலுவுடன் இருக்கலாம்.

# விஷக் கடிக்கு மருந்து

**பாடல் எண் : 150**

மண்ணில் வெந்த.............. உண்ணஞ் சோத்துக்கு
உரிசையானதும், கண்ணில் மூக்கில் கலந்து
பிழிந்திட
விண்ணில் போனவன் மீண்டு வருவரே இதுக்கு
வயானம் வெத்திலை. மௌகு, கல்லுப்பு இது
மூணும்
நறுக்கி கலந்து, கசச்சி மூக்கில் கண்ணில்
பிழியவும்
சொல்லிச் செய்யவும் கையிலிட்டு மிஞ்சினாலிப்படி
பண்ணவும். யெந்தப் பாம்பாகிலும் விஷமிறங்கிப்
போம்.

**விளக்கம் :**

மனிதன் உடலில் ஏதாவது விஷ ஜந்துக்கள் பாம்பு சில விஷப் பூச்சிகள் கடித்தால் இதற்கு மண்ணில் வெந்த உண்ணஞ் சோத்துக்கு உரிசையானதும் கண்ணில் மூக்கில் கலந்து பிழிந்திட விண்ணில் போனவள் மீண்டும் வருவரே. இதுக்கு விளக்கம் வெத்திலை, மிளகு, கல்லுப்பு சமன் எடை எடுத்து இந்த மூன்றையும் இடித்து நன்றாகக் கசக்கி மூக்கிலும் கண்ணிலும் பிழியவும். ஆக இப்படி செய்ய வேண்டும் என்றால் அதிகமான விஷம் உடலைப் பாதித்து இருந்தால் செய்யலாம். ஆகக் கொடிய பாம்புக் கடியாக இருந்தாலும் விஷம் இறங்கிவிடும்.

# பார்வை, பில்லி, சூனியம் வராமல் குளிசம்

## பாடல் எண் : 151

மிளகாய்ச் செடிக்கு கிருண வேளையில்
காப்புக்கட்டி
தூப தீபங் கொடுத்துத் தேங்காய் உடைச்சு,
பாக்கு
வெத்திலை நிவேத்தியம் பண்ணி கிராணம்
விட்டதும்
விடாதுமா பார்க்கையில் அந்த வேளையில்
வலம்புரி
யிடபுரியாயி மூணு சுத்து, சுத்து வந்து
வேரறாமல்
பிடிங்கித் துணி வேரருத்தி குளிசத்திலடைத்து,
பத்திமங்
குடுத்துக் கையில் வச்சுக் கொள்ளவும்.
தாயித்திலடைத்து
வச்சுக் கொள்ளவும் பார்வை பில்லி, சூனியம்
ஏறாது.
பார்வையால் சூனியத்தில் அவதியான பேருக்கு
அதைத்
தானே வேரைத்தானே ஒரு மொச்சைக் கொட்டை
அளவு
அரைச்சு வெந்நித் தண்ணீரில் குடுக்கவும்
இல்லாவிட்டால்
அந்ததளை இலைச் சாத்தில் தானே அரைச்சுக்
குடுக்கவும். நோவு தீரும்.

**விளக்கம் :**

மனிதனுக்கு ஏற்படும் கண் பார்வை, ஓமல், பில்லி சூனியம் இவைகளைக் கீழ் குறிப்பிட்டபடி செய்தால் இவைகள் பாதிக்காது கிரகண வேளையில் மிளகாய்ச் செடிக்குக் காப்புக் கட்டி தீப தூபம் காண்பித்துத் தேங்காய் உடைத்து, பாக்கு வெற்றிலை நிவேத்தியம் செய்து கிரகணம் விடும்படி இருக்கும் சமயத்தில் வலது பக்கமாகவும் இடது பக்கமாகவும் இப்படி மூன்று முறை சுத்தி வந்து வேர் அறுகாமல் பிடிங்கி அடியில் இருக்கும் வேரை மட்டும் வெட்டி எடுத்துக் கொண்டு சிமிழியில் அடைத்து வைத்துக் கையில் வைத்துக் கொள்ளலாம் அல்லது தாயத்தில் அடைத்துக் கையில் இடுப்பில் கட்டிக்கொண்டால் கண் ஓமல், பில்லி சூனியம் எதுவும் உன் இடத்தில் வராது. மேலும் கண் ஓமல், சூனியத்தில் அதிகமாகக் கஷ்டப்படக் கூடியவர்களுக்கு இந்தக் காப்புக் கட்டின மிளகாய்ச் செடியின் வேரை ஒரு மொச்சைக் கொட்டை அளவு அரைத்து வெந்நீர் கலந்து கொடுக்கவும். இல்லாவிட்டால் அந்த மிளகாய் இலையின் சாற்றை அரைத்துக் கொடுத்தால் சில நோய்கள் போகும்.

# சேராத புருஷனுக்கு மருந்து

**பாடல் எண் : 152**

வயனம் நின்று சினிங்கி நிலம் புரண்டி மருளும்
மனத்தை
விரை இரண்டு சுட்டமாயிருக்கிறதில்
ரெண்டுக்கும் வில் ஒடி
திரிகிற ஒத்தை சுழலவனையும் தொட்டாசுருங்கி
பேய்க்
கருப்பஞ்சாறு விட்டு அரைத்து உண்டை பண்ணிக்
கையில்
வைத்துக் கொண்டு பெண் ஆக இருந்தால்
ஆணின் சிறுநீர்

ஒரு துளி விட்டு அரைத்துச் சுண்ணாம்பு தின்னும் பண்டத்தில்
குடுக்கச் சேரும் ஆணுக்குப் பெண்ணின் சிறுநீர் ஒரு துளி விட்டு
அரைத்துக் கொடுக்கவும்.

## விளக்கம் :

நின்று சினிங்கி நிலம் புரண்டி மருளும் மனத்தை விரை இரண்டும் கூட்டமாயிருக்கிறதில் இரண்டு மட்டும் எடுத்துக் கொண்டு இரவில் ஓடித்திரிகிற ஒத்தைசுழலவனையும், தொட்டாச் சுருங்கி பேய்க் கருப்பஞ்சாறு விட்டு அரைத்து உருண்டை செய்து கையில் வைத்துக் கொண்டு பெண்ணுக்குக் கொடுக்க வேண்டும் என்றால் ஆணின் சிறுநீர் ஒருசொட்டு விட்டுக் கலந்து அரைத்துக் கொடுக்கவும். ஆணுக்குக் கொடுக்க வேண்டும் என்றால் பெண்ணின் சிறுநீர் ஒரு சொட்டு விட்டு அரைத்துக் கொடுக்கவும்.

## அனுபானம் :

வெத்திலை பாக்குப் போடும்போது இதில் தடவிக் கொடுக்க வேண்டும்.

# சந்தனம் செய்ய விபரம்

## பாடல் எண் : 153

சந்தனம் பலம் (2) அரைச்சு வைச்சுக் கொண்டு மஞ்சள்
பலம் (2) அரைச்சு வைச்சுக் கொண்டு திருச்சூரணுபலம் (2)
கூடப்போட்டு சேத்து நன்றாயரைக்கிறது அதின் மேலிந்த மூணுங்
கூட நன்றாயரைத்து மொத்தை பண்ணி வக்கிறது இதுக்கு மேல்

தள பாடம் ஏலம் பணவிடை (2) ஆலாத்தி
கற்பூரம் பணவிடை (2)
உறம் பணவிடை 2 கெந்தராசு பணவிடை (2)
யிந்தனாலும் நன்றா
யரைத்துக் கொண்டு முன்னரைத்த சந்தனத்தில்
கூடச் சேர்த்து அரைத்து
அப்புறம் வய்கிறது இதுக்கு மேலத் தளபாடம்
நாகணம் வி.
நெய்யில் வறுக்கிறது பூலாங்கிழங்கு வீறா
நெய்யில் வறுக்கிறது
கவளம் வீ. க நெய்யில் வறுக்கிறது
சன்னலவங்கப்பட்டை
நெய்யில் வறுத்து மேல் சொன்னதில் இதனை
எல்லாம் அரைத்துக்
கலந்து விடவும்.

**விளக்கம் :**

சந்தனம் பலம் 4 (140 கிராம்)
மஞ்சள் பலம் 2 ( 70 கிராம்)
திருச்சூரணம் பலம் ½ (17½ கிராம்)
ஏலம் – பணவிடை 2 (976 மில்லி கிராம்)
ஆலாத்திக் கற்பூரம் பணவிடை 2 (976 மி.கிராம்)
பூரம் பணவிடை 2 (976 மில்லி கிராம்)
கெந்தராசு பணவிடை 2 (976 மில்லி கிராம்)

இவைகளை நன்றாக அரைத்து உருண்டை செய்து வைத்துக் கொள்ளவும். பிறகு கீழ்க்கண்ட மருந்துகளை வறுத்துச் சேர்த்து அரைத்துக் கொள்ளவும்.

| | | |
|---|---|---|
| நாகணம் விராகனிடை 4 (16.8 கிராம்) | | |
| பூலாங்கிழங்கு விராகனிடை | 5 | (21 கிராம்) |
| மகரம் பூ ,, | 2 | (8.4 கிராம்) |
| கவளம் ,, | 1 | (4.2 கிராம்) |
| சின்ன லவங்கப்பட்டை ,, | 1 | (4.2 கிராம்) |

இவைகளையும் தனித்தனியாக வறுத்து மேற்செய்த உருண்டையில் சேர்த்துக் கலந்து வைத்துக் கொள்ளவும். சில வியாதிகளுக்கு உட்கொள்ளக் கொடுக்கவும்.

# நட்சத்திரத்தில் வரும் சுரம் விபரம்.

**பாடல் எண் : 154**

முதற்காலில் சுரம் வந்தால் ஒன்பது நாளில்
விடும். ரண்டாங்காலில்
பத்துநாளில் விடும். மூணாங்காலில் பதினஞ்சு
நாளில் விடும் நாலாங்காலில்
வந்தால் மரணம். **பரணியில்** வந்தால்
முதற்காலில் மூணு நாளில் விடும்
ரண்டாங்காலில் வந்தால் நாலுநாளில் விடும்
மூணாங்காலில் வந்தால்
பதினஞ்சு நாளில் விடும். நாலாங்காலில்
முப்பத்திரண்டில் விடும். **சதயத்தில்**
வந்த சுரம் முதற்கால் பதினாறு நாளில் விடும்.
ரண்டாங்கால் பதினாறு
நாளில் விடும். மூணாங்கால் யிருபத்து ஒன்பதில்
விடும். நாலாங்காலில்
வந்தால் யிருபத்திரண்டில் விடும். **புரட்டாதிக்கு**
முதல் காலில் வந்தால்

மரணம். ரண்டாம் காலில் பதினாறில் விடும். மூணாங்காலில் எழுபத்தெட்டு நாளில் விடும். நாலாங்காலில் வந்தால் நாற்பத்தொண்ணில் விடும்.

**உத்திரட்டா** வந்த சுரம் முதற்காலில் வந்தால் பதினொண்ணில் விடும். ரண்டாங் கால் பதிமூணில் விடும். மூணாங்காலில் வந்தால் எட்டு நாளில் விடும். நாலாங்காலில் வந்தால் மரணம்.

**அவிட்ட** நட்சத்திரத்தில் வந்த சுரம் முதற்காலில் வந்தால் ஒன்பது நாளில் விடும். ரண்டாம் காலில் வந்தால் பதினாலு நாளில் விடும். மூணாங் காலில் வந்தால் யிருபத்தொன்பது நாளில் விடும். நாலாம் காலில் வந்தால் முப்பத்தொன்பது நாளில் விடும்.

**ரேவதி** சுரம் வந்தால் முதற் காலில் சுரம் வந்தால் முப்பது நாளில் விடும். இரண்டாம் காலில் வந்தால் பதினெட்டு நாளில் விடும். மூணாங் காலில் வந்தால் முப்பத்திரண்டு நாளில் விடும். நாலாங்காலில் வந்தால் பதினஞ்சு நாளில் விடும். **மிருக சீரிஷத்தில்** சுரம் வந்தால் முதற்காலில் வந்த சுரம் முப்பத்திரண்டு நாளில் விடும், ரண்டாங்காலில் சுரம் வந்தால் இருபத்தெட்டு நாளில் விடும். மூணாங்காலில் வந்தால் பதினஞ்சு நாளில் விடும். நாலாங்காலில் வந்தால் முப்பத்தஞ்சு நாளில் விடும்.

**திருவாதிரையில்** சுரம் வந்தால் முதற் காலில் வந்த சுரம் ஒன்பது நாளில் விடும். ரண்டாம் காலில் வந்த சுரம் மரணம். மூன்றாங்காலில் வந்த சுரம் பதினஞ்சு நாளில் விடும். நாலாங் காலில் வந்தால் யிருபத்தஞ்சு நாளில் விடும். **புனர்பூசம்** முதற்காலில் வந்த சுரம் ஏழு நாளில் விடும். ரண்டாங்காலில் வந்தால் பத்து னாளில் விடும் மூணாங்காலில் வந்தால் பதினெட்டு நாளில் விடும். நாலாங்காலில் வந்தால் மரணம். **பூசத்துக்குச்** சுரம் வந்தால் முதற்காலில் வந்தால் மரணம் இரண்டாம் காலில் வந்தால் பதினஞ்சு நாளில் விடும். மூணாங்காலில் வந்தால் முப்பத்தெட்டு நாளில் விடும். **ஆயில்யாம்** முதற்காலில் வந்தால் எட்டு நாளில் விடும். ரண்டாங்காலில் வந்தால் பதின்னாளில் விடும் மூணாங்காலில் வந்தால் யிருபத்தெட்டில் விடும். நாலாங் காலில் வந்தால் அன்பத்திரண்டு னாளில் விடும். **சித்திரைக்கு** முதல் காலில் சுரம் வந்தால் ஒன்பது நாளில் விடும். ரண்டாங்காலில் வந்தால் பதினெஞ்சு நாளில் விடும் மூணாங்காலில் பனிரெண்டு நாளில் விடும். நாலாங்காலில் அறுபத்தஞ்சு நாளில் விடும். **சோதிக்கு** வந்த சுரம் முதற்காலில் வந்தால் பனிரெண்டு நாளில் விடும். ரண்டாங்காலில் வந்தால் மரணம். மூணாங்கால் எட்டு நாளில் விடும். நாலாங்காலில்

வந்தால் எண்பத்திரண்டில் விடும். **விசாகத்துக்கு** வந்த சுரம் முதற்காலில் ஒன்பது நாளில் விடும். ரண்டாங்காலில் வந்த சுரம் பதினஞ்சில் விடும். மூணாங்காலில் வந்த சுரம் நாற்பத்திரண்டில் விடும். நாலாங்காலில் எண்பத்தொண்ணில் விடும். **கார்த்திகையில்** சுரம் வந்தால் முதற்காலில் வந்த சுரம் ஒன்பது நாளில் விடும். ரண்டாம் காலில் வந்த சுரம் பதிமூணு நாளில் விடும். மூணாங்காலில் வந்த சுரம் பதினஞ்சு நாளில் விடும். நாலாங்காலில் வந்த சுரம் நாற்பத்தெட்டு நாளில் விடும். **அசுவனியில்** வந்த சுரம் முதல்காலில் சுரம் வந்தால் ஒன்பது நாளில் விடும். ரண்டாம் காலில் வந்தால் பத்து நாளில் விடும். மூன்றாங்காலில் வந்த சுரம் பதினஞ்சு நாளில் விடும். நாலாங்காலில் வந்த சுரம் மரணம். **பரணிக்கு** வந்த சுரம் முதற்காலில் மூணு நாளில் விடும். ரண்டாங்காலில் வந்த சுரம் நாலு நாளில் விடும். மூணாங்காலில் வந்த சுரம் பதினஞ்சு நாளில் விடும். நாலாங்காலில் வந்த சுரம் முப்பத்திரண்டு நாளில் விடும். **அனுஷம்** யில் சுரம் வந்தால் முதற்காலில் ஏழுநாளில் விடும். ரண்டாங்காலில் வந்தால் பதினெட்டு நாளில் விடும் அல்லது ஒன்பது நாளில் விடும். மூணாங்காலில் வந்தால் ஏழுபத்தொரு நாளில் விடும். நாலாங்காலில் வந்தால் மரணம்.

## விளக்கம் :

மனிதர்களுக்கு வரும் சுரம் சில நட்சத்திர்த்தில் வந்தால் விரைவில் குணம் ஆகும் அல்லது தாமதம் ஆகும் அல்லது மரணம் ஆகும். இதன் விபரத்தை நாலுவாரங்களுக்குத் தனித் தனியாக விபரம் கீழே கொடுக்கப்பட்டு உள்ளது.

## அசுவனி :

நக்ஷத்திரத்தில் வந்த சுரம் முதல் வாரத்தில் வந்தால் ஒன்பது நாளில் விடும். இரண்டாம் வாரத்தில் வந்தால் பத்து நாளில் விடும். மூன்றாம் வாரத்தில் வந்தால் பதினைந்து நாள்களில் விடும். நான்காம் வாரத்தில் வந்தால் மரணம் அடைவார்கள்.

## பரணி நக்ஷந்திரத்தில் :

முதல் வாரத்தில் சுரம் வந்தால் மூன்று நாள்களில் விடும். இரண்டாம் வாரத்தில் வந்தால் நான்கு நாள்களில் விடும். மூன்றாம் வாரத்தில் வந்தால் பதினஞ்சு நாளில் விடும். நான்காம் வாரத்தில் வந்தால் முப்பத்திரண்டு நாளில் விடும்.

## கார்த்திகை நக்ஷத்திரத்தில் :

முதல் வாரத்தில் வந்தால் ஒன்பது நாள்களில் விடும். இரண்டாம் வாரத்தில் வந்தால் பதின்மூன்று நாள்களில் விடும். மூன்றாம் வாரத்தில் வந்தால் பதினைந்து நாள்களில் விடும். நான்காம் வாரத்தில் வந்தால் நாற்பத்தி எட்டு நாளில் விடும்.

## ரோகிணி நக்ஷத்திரத்தில் :

முதல் வாரத்தில் சுரம் வந்தால் முப்பது நாள்களில் விடும். இரண்டாம் வாரத்தில் சுரம் வந்தால் பதினெட்டு நாள்களில் விடும். மூன்றாம் வாரத்தில் சுரம் வந்தால் முப்பத்திரெண்டு நாள்களில் விடும். நான்காம் வாரத்தில் சுரம் வந்தால் பதினைந்து நாள்களில் விடும்.

### மிருகசீர்ஷ நக்ஷத்திரத்தில் :

முதல் வாரத்தில் சுரம் வந்தால் முப்பத்து இரண்டு நாள்களில் விடும். இரண்டாம் வாரத்தில் சுரம் வந்தால் இருபத்தி எட்டு நாள்களில் விடும். மூன்றாம் வாரத்தில் சுரம் வந்தால் பதினைந்து நாள்களில் விடும். நான்காம் வாரத்தில் சுரம் வந்தால் முப்பத்து ஐந்து நாள்களில் விடும்.

### திருவாதிரை நக்ஷத்திரத்தில் :

முதல் வாரத்தில் சுரம் வந்தால் ஒன்பது நாளில் விடும். இரண்டாம் வாரத்தில் சுரம் வந்தால் மரணம் அடைவார்கள். மூன்றாம் வாரத்தில் சுரம் வந்தால் பதினைந்து நாள்களில் விடும். நான்காம் வாரத்தில் சுரம் வந்தால் இருபத்து ஐந்து நாள்களில் விடும்.

### புனர்பூசம் நக்ஷத்திரத்தில் :

முதல் வாரத்தில் சுரம் வந்தால் ஏழு நாள்களில் விடும். இரண்டாம் வாரத்தில் சுரம் வந்தால் பத்து நாள்களில் விடும். மூன்றாம் வாரத்தில் சுரம் வந்தால் பதினெட்டு நாளில் விடும். நான்காம் வாரத்தில் சுரம் வந்தால் மரணம் அடைவார்கள்.

### பூசம் நக்ஷத்திரத்தில் :

முதல் வாரத்தில் சுரம் வந்தால் மரணம் அடைவார்கள். இரண்டாம் வாரத்தில் சுரம் வந்தால் பதினைந்து நாள்களில் விடும். மூன்றாம் வாரத்தில் சுரம் வந்தால் முப்பத்துஎட்டு நாள்களில் விடும். நான்காம் வாரத்தில் சுரம் வந்தால் ஐம்பத்தி இரண்டு நாள்களில் விடும்.

### ஆயில்யம் நக்ஷத்திரத்தில் :

முதல் வாரத்தில் சுரம் வந்தால் எட்டு நாளில் விடும். இரண்டாம் வாரத்தில் சுரம் வந்தால் பதினாறு நாள்களில் விடும். மூன்றாம் வாரத்தில் சுரம் வந்தால் இருபத்து எட்டு நாள்களில் விடும். நான்காம் வாரத்தில் சுரம் வந்தால் ஐம்பத்தி இரண்டு நாள்களில் விடும்.

**சித்திரை நக்ஷத்திரத்தில் :**

முதல் வாரத்தில் சுரம் வந்தால் ஒன்பது நாள்களில் விடும். இரண்டாவது வாரத்தில் சுரம் பதினைந்து நாள்களில் விடும். மூன்றாம் வாரத்தில் சுரம் வந்தால் பனிரெண்டு நாள்களில் விடும். நான்காம் வாரத்தில் சுரம் வந்தால் அறுபத்து ஐந்து நாள்களில் விடும்.

**சுவாதி நக்ஷத்திரத்தில் :**

முதல் வாரத்தில் சுரம் பனிரெண்டு நாள்களில் விடும். இரண்டாம் வாரத்தில் வந்த சுரம் மரணம் அடைவார்கள். மூன்றாம் வாரத்தில் சுரம் வந்தால் எட்டு நாள்களில் விடும். நான்காம் வாரத்தில் சுரம் வந்தால் என்பத்துஇரண்டு நாள்களில் விடும்.

**விசாகம் நக்ஷந்திரத்தில் :**

முதல் வாரத்தில் சுரம் வந்தால் ஒன்பது நாள்களில் விடும். இரண்டாம் வாரத்தில் சுரம் வந்தால் பதினைந்து நாள்களில் விடும். மூன்றாம் வாரத்தில் சுரம் வந்தால் நாற்பத்திரண்டு நாள்களில் விடும். நான்காம் வாரத்தில் சுரம் வந்தால் எண்பத்தியொரு நாளில் விடும்.

**அனுஷம் நக்ஷத்திரத்தில் :**

முதல் வாரத்தில் சுரம் வந்தால் ஏழு நாள்களில் விடும். இரண்டாம் வாரத்தில் சுரம் வந்தால் பதினெட்டு நாள்களில் விடும் அல்லது ஒன்பது நாள்களில் விடும். மூன்றாம் வாரத்தில் சுரம் வந்தால், எழுபத்தியொரு நாள்களில் விடும். நான்காம் வாரத்தில் சுரம் வந்தால் மரணம் அடைவார்கள்.

**அவிட்டம் நக்ஷத்திரத்தில் :**

முதல் வாரத்தில் சுரம் வந்தால் ஒன்பது நாள்களில் விடும். இரண்டாம் வாரத்தில் சுரம் வந்தால் பதினான்கு நாள்களில் மூன்றாம் வாரத்தில் சுரம் வந்தால் இருபத்தி ஒன்பது நாள்களில் விடும். நான்காம் வாரத்தில் சுரம் வந்தால் முப்பத்தி ஒன்பது நாள்களில் விடும்.

**சதயம் நக்ஷத்திரத்தில் :**

முதல் வாரத்தில் சுரம் வந்தால் பதினாறு நாள்களில் விடும். இரண்டாம் வாரத்தில் சுரம் வந்தால் பதினாறு நாள்களில் விடும். மூன்றாம் வாரத்தில் சுரம் வந்தால் இருபத்தியொன்பது நாள்களில் விடும். நான்காம் வாரத்தில் சுரம் வந்தால் இருபத்திரண்டு நாள்களில் விடும்.

**உத்திரட்டாதி நக்ஷத்திரத்தில் :**

முதல் வாரத்தில் சுரம் வந்தால் பதினொரு நாள்களில் விடும். இரண்டாம் வாரத்தில் சுரம் வந்தால் பதின்மூன்று நாள்களில் விடும். மூன்றாம் வாரத்தில் சுரம் வந்தால் எட்டு நாள்களில் விடும். நான்காம் வாரத்தில் சுரம் வந்தால் மரணம் அடைவார்கள்.

**ரேவதி நக்ஷத்திரத்தில் :**

முதல் வாரத்தில் சுரம் வந்தால் முப்பது நாள்களில் விடும். இரண்டாம் வாரத்தில் சுரம் வந்தால் பதினெட்டு நாள்களில் விடும். மூன்றாம் வாரத்தில் சுரம் வந்தால் முப்பத்திரெண்டு நாள்களில் விடும். நான்காம் வாரத்தில் சுரம் வந்தால் பதினைந்து நாள்களில் விடும்.

## இந்தச் சுவடி எழுதியவர் விபரம்.

( சுவடியிலுள்ளபடி )

சேலம் மாவட்டத்தில் இருக்கும் ராசிபுரம் தாலுக்காவில், பெத்தனப்பட்டி கிராமத்தில் வசித்து வந்த சிதம்பர அய்யன் குமாரன் சுப்ப அய்யன், கோ சூத்திரம் பார்க்கவ கோத்திரம், எலவலை நூறு கொடேன் அத்தனாதி ஈசுவரகுடி, ஒரசர் மன்னே ஏமகலாவட்டி வைக்கும் பாலு ரெண்டு ஒகதுயிக்கது ஒட பிறந்தன்று பெறுதாம்பி தமய்யன் யிந்த அய்யனெமக்கு ஒதியது தூறுனுளனே அய்யன்.

# எமது வெளியீடுகள்

| | |
|---|---|
| ஜாதக சந்திரிகா | 40-00 |
| காலபிரகாசிகா | 100-00 |
| நக்ஷத்திர சிந்தாமணி (பாகம்-I) | 200-00 |
| பஞ்சபட்சி சாஸ்திரம் | 250-00 |
| அமரகோசம் (பாகம்-I) | 65-00 |
| அமரகோசம் (பாகம்-II) | 60-00 |
| அமரகோசம் (பாகம்-III) | 60-00 |
| பிரகதீஸ்வர மாகாத்மியம் | 43-00 |
| ஜைனிஸம் கேட்லாக் | 10-00 |
| தக்ஷிணாமூர்த்தி ஸம்ஹிதை | 30-00 |
| காயத்ரீ கோசம் | 30-00 |
| கீதகோவிந்தம் | 25-00 |
| கல்பலதா (ஸ்ரீருத்ரபாஷ்யம்) | 22-00 |
| பாணினீ தாதுபாடம் | 30-00 |
| விருத்தரத்னாவளி | 30-00 |
| பலவதி | 120-00 |
| நந்திநாகரி சுவடிகளின் அட்டவணை | 25-00 |
| பிரபஞ்சசாரசார ஸங்கிரஹம் (பாகம்-I) | 180-00 |
| பிரயோக ரத்னமாலா | 55-00 |
| ரத்ன பரீக்ஷை | 40-00 |
| சப்தம் தாளம் சொற்கட்டு | 40-00 |
| ஸாம்ராஜ்ய லக்ஷ்மீ தீபிகா | 100-00 |
| ஸ்தோத்ர ராமாயணம் | 25-00 |
| நாககுமார காவியம் | 55-00 |
| விமானார்ச்சன கல்பம் (பாகம்-II) | 75-00 |
| சூலினிகல்பம் | 50-00 |
| சூர்யசதகம் | 50-00 |
| தஞ்சை நாயக்கர் வரலாறு | 205-00 |
| யதிராஜவிஜயம் | 35-00 |
| பிரபோதசந்திரிகை | 70-00 |

# வேண்டுகோள்

கருணையுள்ளங்கொண்ட நம் முன்னோர்கள் அரிய பெரிய இலக்கியங்களையும், பிறவற்றையும் பனை ஓலைகளில் எழுதிச் சுவடிகளாக நமக்குத் தந்தனர். அவை பல்வேறு இடங்களில் முடங்கி உள்ளன. சுவடிகள் பழுதடைவதற்குமுன் சரசுவதி மகாலுக்கு அன்பளிப்பாகக் கொடுத்துதவினால், அவை மக்களுக்குப் பயன்படும்.

மகாலுக்குக் கொடுப்பதன் மூலம், சுவடி தந்தவர்களும், சுவடி எழுதியோரும் அழியாப்புகழை, பெருமைசால் சரசுவதி மகால் உள்ளளவும் பெறுவர். அவை பதிப்பாகி வருமாயின் சுவடி தந்தார் பெயர் இடம்பெறுவதோடு, அப்பதிப்பில் ஐந்து பிரதிகளும் பெறுவர்.

எனவே, நாம் பெற்ற பேறு பெறுக இவ்வையகம் என்ற எண்ணமுடைய நற்பண்பாளர்கள் தம்மிடமுள்ள சுவடிகளைச் சரசுவதி மகாலுக்குத் தந்துதவ வேண்டுகிறேன்.

**மாவட்ட ஆட்சித்தலைவர்**
**மற்றும் இயக்குநர்**
சரசுவதி மகால் நூலகம்,
தஞ்சாவூர்